குட்டி

சிவசங்கரி

குட்டி

1

வெயில் கடுமையாக இருந்தது.

பாதி தூரம் போவதற்குள் ஊன்றி நடக்க முடியாத படி வெற்றுப்பாதங்களை மணலின் உஷ்ணம் தாக்கி ஓட வைத்தது.

கருவேல மரத்தடி நிழலில் அரை நிமிஷம் நிதானித்து கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்ட அந்தாயி எரிச் சலோடு குற்றம் சாட்டினாள்.

''யம்மா! கூடு பாதத்த பொசுக்குது! செத்த வெயில் தாழ்ந்து பொறவு வருவம்னா கேக்கறியா? ஒம் பிடி வாதத்தால எல்லாரும் அவதிப்பட வேண்டியிருக்கு...''

''நல்லா உறைக்கறாப்பல சொல்லுங்கக்கா... வாணாம் டீ...ஒரு மணி கழிச்சு பொறப்படுவம்னு ஆனமட்டும் சொன்னேன்—கேட்டாளா? வெயில் மண் டைய ஓட்டை போடுது...''

அருகில் வந்து நின்ற சிவபூஷணம் தன் பங்குக்கு புகார் சொல்ல, எதற்கும் பதில் கூறாமல் செந்தாமரை மௌனித்தாள்.

இடப் பாதத்தால் வலக் காலை வருடிக் கொடுத்து, கூட்டின் பாதிப்பைக் குறைக்க முயன்றவள், அடுத்தவர் களை சமாதானப்படுத்தும் நோக்கில் சின்னதாய் புன்ன கைத்தாள்.

''ஆமா—இதுக்கொண்ணும் கொறைச்சல் இல்ல... எதக் கேட்டாலும் இப்படி சிரிச்சே மழுப்பிடு'' என்று

அலுத்துக்கொண்ட அந்தாயி, ஈச்சங்கூடையை இடுப்பில் வைத்து, ''நின்னூட்டு இருக்கறதுல அர்த்தம் இல்ல... பொறப்பட்டாச்சு...வாங்க, பொழுதோட மண்ண எடுத்துகிட்டு வந்திருவம்... இன்னும் ரெண்டு நடை பாக்கி இருக்கு'' என்றவாறு நடக்க முற்பட, மற்றவர்கள் அவளைத் தொடர்ந்தார்கள்

எதுவும் பேசாமல் நீள நடந்தவர்கள் வதிகால் மண் எடுக்கும் இடத்தை அடைந்ததும் நின்றார்கள். கையோடு கொணர்ந்திருந்த மண்வெட்டியை எடுத்துக் கொண்டு செந்தாமரை குகை மாதிரி பூமியைக் குடைந்து சென்ற பகுதிக்குள் குனிந்து உட்கார்ந்து, நாலு தரம் வெட்டி, விழுந்த மண்ணை கூடைகளில் போட்டாள். மூவரின் கூடைகளும் நிறைந்த பின், அந்தாயியின் மகள் பூங்காவனத்தின் கூடையிலும் அவள் சுமக்கும் அளவுக்குக் கொஞ்சமாக மண்ணைக் கொட்டி, ஒருவருக்கொருவர் தூக்கிவிட, மண் நிறைந்த கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு வீட்டைப் பார்க்க வேகமாக நடை போட்டனர். தம்தம் வீட்டை அடைந்து, வதிகால் மண்ணை செங்கலடியில் கொட்டி விட்டு, ஆளுக்கு ஒரு லோட்டா தண்ணீர் குடித்து, கைப் பிள்ளைக்கு செந்தாமரை பால் கொடுத்த கையோடு, சற்று உட்காரக் கூட அவகாசம் இல்லாமல் தேத்தாங்கரை மண்ணை எடுக்க உடனே புறப்பட்டார்கள். ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கும் அதிகமான இடத்திலிருந்து அதைக் கொண்டு வந்து சேர்த்த பிறகு, ஆத்து மண் சேகரிக்கச் சென்றார்கள்.

மூன்று நடைக்கும் அந்தாயியின் பத்து வயசு மகள் பூங்காவனம் கூடையைச் சுமந்துகொண்டு உடன் வந்த நாழிகையில், செந்தாமரையின் மகன் கண்ணம்மாம்ட்டும் அவர்களோடு வராமல் ரெட்டியார் வீட்டுப் பிள்ளைகளுக்குச் சரியாக கில்லி தண்டு ஆடியவாறு

சவுக்குத் தோப்பருகே நின்று கொண்டிருப்பது பார்வையில் விழ, சிவபூஷணம் காட்டமாகக் கேட்டாள்.

''தெரியாமத்தான் கேக்கறேன் செந்தாமரை மண் எடுக்க இத்தனப் பொறுப்பா பூங்காவனம் வர்றத நீயும் பாக்கத்தானே செய்யறே! ஒம் மகளையும் வரச் சொன்னா என்ன? பொட்டைப் புள்ளக்கி சின்ன வயசு முதக் கொண்டே வேல சுத்துத் தர வேணாமா? இப்படி ஆம்பளப் பசங்களுக்கு சரியா நின்னுட்டிருந்தா நாளைக்கு ஒருத்தன் வீட்டுக்குப் போய் அவ என்னமாத்தான் குப்ப கொட்டப் போறாளோ? நானும் தலைக்குத் தலை அடிச்சிக்கறேன்...நீ காதுல வாங்கினாதானே? அது என்னடிம்மா, ஒம் மக மட்டும் ஆகாசத்துலேந்து குதிச்சிருக்காளா?'

ஓரடி முன்னால் நடந்து கொண்டிருந்த அந்தாயி முகவாயைத் தோளில் இடித்துக்கொண்டு நமுட்டாக சொன்னாள்.

''ஆத்தாடி! உன் நல்ல நேரம் இப்ப மண் எடுக்கப் போறப்ப இப்படி கேட்டே? இதயே கொழுந்தனார் காது பட பேசியிருந்தா அவுரு 'எம் மகளப் பத்திக் கேக்க நீ யாரு? மண் சொமக்க எம் பொண்ணு பொறக்கல'னு எகிறி குதிச்சிருப்பாரு தெரியுமா? என்னா செந்தாமரை, நா சொல்றது சரிதானே?''

இதற்கும் செந்தாமரை மௌனத்தையே பதிலாகத் தர, சிவபூஷணம் 'ப்ச்' என்று சூள் கொட்டினாள்.

''ஆமா-சட்டிபான பண்றவங்க வூட்டுல பொறந்தப் புறம் மண் சொமக்க விட மாட்டேன்னு பிடிவாதம் பண்ணறது நல்லாவா இருக்கு? சரி அப்படியே மக உனக்கு ஒசத்தினா பள்ளிக்கோடத்துல படிக்க வச்சு கலெக்ட்ரு உத்யோகத்துக்கு அனுப்பற லழியையாவது பாக்கறது...அதுவும் இல்ல...சதா ஆம்பள பசங்களுக்கு

சரியா இல்லி தண்டு ஆடிகிட்டு, மூணு வேளையும் உக் காந்து இன்னுகிட்டு, துவி பொறுப்பில்லாம... அய்யே... இது அசிங்கமா இல்ல இருக்கு...''

அண்ணிமார் பேசுவதில் நியாயம் இருப்பது புரிந்த வனாய் வாயை மூடிக்கொண்டு செந்தாமரை நடந்தாள்.

பின்னே? அவர்கள் சொல்வது போல புருஷன் பாவாடை செய்வது துளியும் நியாயம் இல்லாத காரியம் தான். குதிர்போல ஒன்பது வயசு வளர்ந்துவிட்ட மகளை பள்ளிக்குப் படிக்கவும் அனுப்பவில்லை—இதர பெண் குழந்தைகள் போல மண் சுமக்கவும் சம்மதிப்பதில்லை. 'எம் பொண் எனக்கு ஒசத்தி அவள நா எப்படிவேணா வளப்பேன்—யாரும் இதுல தலையிட வேணாம்' என்று எடுத்தெறிந்து பேசினால் ஆயிற்றா? கொழுந்த னாரின் கத்தலுக்குப் பயந்துகொண்டு முகத்துக்கெதிரில் ஏதும் பேசாதவர்கள், பின்னால் கேலி காட்டி சிரிப்பதை எப்படி தடுக்க இயலும்? புருஷன்காரனிடம் இது சம்பந் தமாய் ''இந்தா ஆம்பிள—ஒண்ணு காசு பணம் செலவா னாலும் பரவாயில்லேனு பள்ளிக்கோடத்துக்கு அனுப்பு. இல்லாங் காட்டி மத்த பொம்பளைப் பசங்க மாதிரியா வது மண் வேலைய பழக்கிவிடு இப்படி செல்லம் கொடுத்து எதுக்கும் ஒதவாம. தண்டியா வளக்காதே—'' என்று எத்தனையோ முறை முட்டிக் கொண்டாயிற்று. கேட்டால்தானே? ''எம் பொண்ணு கில்லி ஆடுவா. ஆத்துல நீச்சல் பழதுவா—இல்ல என்ன வேணா செய்வா அத்த கேக்க இவங்க ஆரு? இவங்க வூட்டுக்கு ஒரு வேளை சோத்துக்கு அனுப்பினா, அப்புறம் ஏண்டானுகேளு... நா ஒழைக்கறேன்—என் மனசு போல மகள வளக்கறேன். எங்க என் எதிர்ல ஒரு ஆள்நாக்கு பல்லுலபட பேசட்டுமே அதுக்கு தெகிரியம் இல்ல. பேசவந்திட்டாளுக...'' என்று கத்தி, இவள்வாயை அடைப்பதுதான் வாடிக்கையாக நடக்கிறதே தவிர, ஏதுடா, நல்லதைத் தானே சொல்

கிறார்கள், கொஞ்சம் காது கொடுத்துக் கேட்போம்—என்கிற புத்தி என்றைக்கு இருந்திருக்கிறது?

செந்தாமரைக்கு உண்மையாகவே சொல்லிச்சொல்லி அலுத்துதான் போய்விட்டது. திருமணமாகி ஐந்து வருஷம் உண்டாகாமல் இருந்து 'பாவாடைராய'னுக் கும், சிதம்பரம் நடராசருக்கும் நேர்ந்துகொண்டு, விரத மான விரதம் இருந்து பெற்ற குழந்தை என்பதால் பெண்ணை ரொம்பவும்தான் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்! அதுவும், கண்ணம்மாவுக்கு அடுத்து ஒரு குறை பிரசவமாகி, மற்றது நாலு நாள் அல்ப ஆயுசோடு குழியைப் பார்க்கப் போய்விட்ட பிறகு மகள் என்றால் தகப்பனுக்கு உயிர்! இருக்கட்டும் யாரும் தடுக்கவில்லை. அதற்காக விரலுக்குத் தகுந்த வீக்கமாக இல்லாமல் தகுதிக்கு மீறின செல்லம், வேண்டாத இடம் கட்டுப்படியாகுமா? அதுவும் பள்ளிப்பாளையம் போன்ற அசல்பட்டிக்காட்டு கிராமத்தில்?

கடலூரிலிருந்து சிதம்பரத்துக்கு பஸ் போகும் பாதை யில் ஆண்டார்முள்ளி பள்ளத்தில் இறங்கி, பொடி நடை யாய் அரைமணி நடந்தால் இருக்கும் சின்ன கிராமம் தான் இவர்கள் வசிக்கும் பள்ளிப்பாளையம்.

எண்ணி இரண்டே தெருக்கள். ஒன்றில் சட்டி பானை செய்யும் உடையார் குடும்பங்கள் நாலு. அடுத் ததில் ரெட்டியார், நாயக்கர் குடும்பங்கள் தலா ஏழெட்டு. மளிகைக் கடைச் செட்டியார் வீடு ஒன்று. தெரு முனை யில் 'பாவாடைராயன்' கோயில் உள்ளங்கை அளவிற்கு. ரெட்டியார் தோட்டத்துக்கு நேர் கிழக்கில் ஓங்கி வளர்ந்து நிழல் பரப்பிக் கொண்டிருக்கும் அரசமரமும், அதன் அடிவாரத்து மேடையில் கற்பக விநாயகர் கோயி லும் உண்டு. சற்று தள்ளி, செம்மண் பாதையின் முடிவில், பத்துப் பதினைந்து குடிசைகள் கொண்ட சேவி, மொத்த பள்ளிப் பாளைமுமே இவ்வளவுதான்.

ஊருக்கு ஒரு பக்கமாய் வளைந்து ஒடுவது உப்பனாறு 'வருஷம் பூராவும் எங்க ஊரு ஆத்துல தண்ணி வத்தாது' என்பதில் பள்ளிப்பாளையந்து வாசிகளுக்கு நெஞ்சுக் குழிலரை பெருமை ஆனாலும், இந்த உப்பனாற்றில் ஆவணி முதல் மாசி வரைதான் நல்ல தண்ணீர் கிடைக்கும். மற்ற மாதங்களில் கடல் பொங்கி நிலத்தைப் பார்க்க வந்து விடுவதால் உப்பு நீர்தான்; வாயில் வைக்கவோ, சமையலுக்கோ வழங்காது.

ஊருக்குச் சொந்தமான கேணி, சரியான பராமரிப்பு இல்லாமல் மண் தட்டிப்போய் நாலைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. உப்பனாற்றில் உப்புத்தண்ணீர் வரும் காலத்தில் ரெட்டியார் தோப்பு கிணறுக்கோ, அல்லது மனசிருந்து நாயக்கர் அனுமதித்தால் அவர்கள் வீட்டு கை பம்பிலோ அடித்து எடுத்து வந்தால்தான் குடிக்கவே தண்ணீர் கிட்டும்.

பள்ளிப்பாளையத்தில் சட்டி பானை செய்யும் உடையார் குடும்பங்கள் ஒன்றுக்கொன்று பங்காளிகள் தாம். பெரிய தாத்தா ஆதிமூலம் வாழ்ந்த நாட்களில் தெரு கொள்ளாமல் உடையார்கள் குடும்பங்களாகவே இருந்தனவாம். காலம் இருந்த இருப்பில், சட்டிபானை விற்பனையையும், மானம் பார்த்த பூமியையும் நம்பிக் கொண்டு வயிறு வளர்ப்பது இயலாத காரியமாகிவிட, முந்தின தலைமுறையில் நாலைந்து குடும்பங்கள் கடலூருக்கும், சென்னைக்கும் பிழைக்கப் போய்விட்டன. இப்போது மிச்சம் இருப்பது மூத்தவர் உத்திராபதி நீலகண்டன், கலியமூர்த்தி, அப்புறம் பாவாடை குடும்பங்களே.

உத்திராபதி, அந்தாயிக்கு மூன்று பிள்ளைகள். கடைக்குட்டி பெண் பூங்காவனம். பிள்ளைகள் அப்பனுக்கு உதவியாய் வீட்டோடு இருக்கிறார்கள். கொஞ்சம் காடு, சமனி இருப்பதால் எப்படியோ சமாளிக்கிறார்கள்.

நடுவர் நீலகண்டன், அவர் மனைவி சிவபூஷணத்துக்கு ஒரு பெண். இரண்டு மகன்கள். மகளை சேத்தியாதோப்பில் கட்டிக் கொடுத்தாயிற்று. பெரியவன் பெற்றவர் தொழிலை கவனிக்க, சின்னது மூன்று கிலோமீட்டர் தள்ளி இருக்கும் ஆண்டார்முள்ளி பள்ளத்துக்கு தினமும் நடந்து சென்று பள்ளியில் படித்து வருகிறது.

சின்னவன் கலியமூர்த்தி சிறுபிராயத்திலேயே வாத நோய் வந்து விட்டதில் எதற்கும் லாயக்கில்லாமல் போய் விட்டான். பாலம், கல்யாணம் கார்த்தி என்று எதுவும் நடக்கவில்லை. வயசான அம்மாகாரி விருத்தாம்பாவுடன் தனியாக இருக்கிறான். விருத்தாம்பா முடிந்த அளவில் மண் கொணர்ந்து கொடுக்க, தன்னால் இயன்ற வரையில் பானைகள் செய்வான். சூளை போடுவது, வண்டி கட்டிச்சென்று மண்பாண்டங்களை விற்பது எல்லாவற்றிலும் பங்காளிகள் உதவாவிட்டால் அவன் பாடு திண்டாட்டம்தான்! நல்லவேளையாக வீட்டு மனையில் இரண்டு பெரிய புளியமரங்கள் இருக்கின்றன. வருஷத்துக்கு நூறு, இருநூறு கிலோ போல புளி காய்த்து வருமானம் வருவதில், யாருக்கும் பாரமாக இல்லாமல் அவர்களால் மானமாக வாழமுடிகிறது.

கடைசியாய், பாவாடை எனப்படும் பாவாடைராயன். வயசில் சிறியவன். பங்காளிகள் குடும்பங்களிலேயே இவன் வசதியில் சாதாரணமானவன். இவனைப் பெற்றவர்கள் ரொம்ப வருஷங்களுக்கு முன்னால், ஆடி அமாவாசைக்கு கடலில் குளிக்கிறேன் என்று போனவர்கள், ஒரேயடியாய் போய்விட்டதில் அனாதையாய் வளர்ந்தான். முரடன். ஆனாலும் நல்ல உழைப்பாளி. ஒற்றைக்காசு லைக்காமல் பெற்றவர் செத்துவிட்டபோதும், சுய உழைப்பால் முன்னேறி இன்று சொந்தமாக மனை வாங்கி, பெரிசு பெரிசாய் இரண்டு கிற்றுக் கொட்டகை, கொல்லைக்கட்டில் ஒரு மாடு என்று சேர்த்துக் கொண்டிருக்கிறான்.

கஷ்மா சொல்லக் கூடாது—திருவை முன் உட்கார்ந் தான் என்றால் முப்பது, நாற்பது சால்பானைகளைச் செய்து, அடிக்கலங்களை அறுத்து எடுத்து வைத்து விட்டுத்தான் நிமிருவான். அடிக்கலங்களைத் தட்டு வதிலும், அவன் வேலை வேறு யாருக்கும் வராது. அப்படி ஓர் உழைப்பாளி.

விருத்தாம்பா ஆயா கூட அடிக்கடி ''பெரிய தாத்தா வோட வேலை நேர்த்தி உங்க யாருக்கும் வரல... பாவாடை ஒருத்தனுக்குத்தான் அது கைவந்திருக்கு'' என்று மனப்பூர்வமாகப் பாராட்டி மகிழ்வதுண்டு.

பங்காளிகள் வருஷந்துக்கு நாலுவண்டி சட்டிபானை தயாரித்து விற்பார்கள் என்றால், பாவாடை மட்டும் ஐந்து, அல்லது ஆறு வண்டிகளுக்குக் குறையாமல் தனி யாகவே தயாரிப்பான்.

வதிகால், தேத்தாங்கரை, ஆத்துமண்களை எடுத்து வந்து மனைவி செங்கலடியில் போட்டுவிட்டால், இரவு தனைத்து வைத்துவிட்டு மறுநாள் வெள்ளன எழுந்து ஆற்றுமணலையும், நீரையும் சேர்த்து பக்குவமாய் மிதித்து அப்பி வைப்பான். ஒன்பது மணிக்குள் பழை யதை சாப்பிட்ட கையோடு திருவை முன் உட்கார்ந் தால், அன்றைக்கு என்ன செய்யவேண்டும் என்று நிர்மானித்தபடி முப்பது சால் பானைகளோ, ஐம்பது காய்ச்சும் பானைகளோ அல்லது அறுபது குடங்களோ செய்து முடிக்காமல், இந்தண்டை அந்தண்டை நகரமாட் டான். வேலையில் அப்படி ஓர் ஆர்வம்!

பெரியவர் உத்திராபதி அவ்வப்போது—''எனடா-போற வேகத்தைப் பார்த்தா, ரெண்டு வருஷத் துக்குள்ளார ஒட்டு வூடு கட்ற அளவுக்கு சம்பாரிச்சிடுவே போல இருக்கேடா!''என்று கேலியாய், ஆனால் பெருமை யுடன் செல்லும் போதெல்லாம் பாவாடை சிரிப்பான். பின்னர் ''உங்க ஆசீர்வாதம் இருக்கற வரைக்கும் எனக்கு என்ன குறை அண்ணே? கைகால் நல்லா இருக்கு, அப்

புறம் என்ன? மனுஷன் சிரத்தையா உழைச்சா, பலன் கிட்டாமலா போயிடும்? ஒட்டு வூடு என்ன, காடு, கழனி, வண்டி எல்லாம் கூட வாங்கிடுவம்'' என்பான் தன்னம் பிக்கை கண்களில் வெளிச்சம் போட—

வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்கிற துடிப்பு எவ்வளவு இருந்ததோ அதற்குக் கொஞ் சமும் குறையாமல்'மகளை சிறப்பாய் வளர்க்க வேண்டும்' என்கிற ஆசையும் பாவாடையினுள் ததும்பவே செய்தது.

உண்டான நாளிலிருந்தே குழந்தை மேல் அப்படி யொருபாசம். பெண்ணுக்கு பாட்டியின் நினைவாக பஞ்ச வர்ணம் என்கிற பெயரைவைத்தாலும் இவன் ஆசையாய் கண்ணம்மா என்று அழைக்கத் தொடங்க, கடைசியில் அதுவே நிலையாயிற்று.

இருக்கிறதோ இல்லையோ மகளுக்கு இரண்டுவேளை யும் சுடு சோறுதான் பசும் பால் குடித்தால் பூஞ்சை உடம்புதேறும் என்று யாரோ சொன்னதால் பெண்ணுக்கு மூன்று வயசாகையில் ரெட்டியாரிடம் கடன் பெற்று ஒரு மாட்டை வாங்கி கொல்லையில் கட்டினான்.

'பாவாடைக்கு பெண் மீது இருக்கிற ஆசையைப் பாரேன்!'—என்று முதலில் மூக்கில் விரலை வைத்த ஊர். போகப்போக, ஆனாலும் இத்தனை பேராசை கூடா துப்பா— அகலக்கால் வக்கிறே— இது உனக்கும் சரிப் படாது, ஓம் மகளுக்கும் நல்லதில்ல' என்று அவன் காது பட விமர்சிக்க ஆரம்பித்தபோது 'எம் பொண்ணு எனக்கு உசத்தி— அவள நா எப்படி வேணா வளத்துக்கறேன்— இதுல யாரும் தலையிட வேணாம்' என்று காட்டமாய் கத்தத் தொடங்கினபின் நமக்கு எதுக்குப் பொல்லாப்பு' என்று உறவு ஜனம் வாயைப் பொத்திக் கொள்ளவே செய்தது, என்றாலும் செந்தாமரை தனியாக மாட்டிக் கொள்ளும் போது மற்ற உறவுப் பெண்கள் பெண் குழந்

தையை எளர்க்கும் லட்சணத்தைப்பற்றி குத்திக் காட்டு வது நிற்கவில்லைதான்.

மூன்றாவது நடையாக ஆற்று மண்ணைக் கூடை நிறைய கொண்டு வந்து செங்கலடியில் கொட்டிய பின், அந்தாயியும், சிவபூஷணமும் ''நாங்க வரலை''—என்று ஒதுக்கிக்கொள்ள, சாக்கையும், கட்டைத் துடைப்பத்தை யும் எடுத்துக்கொண்டு செந்தாமரை மட்டும் சவுக்குத் தோப்புக்குப் போனாள்.

நான்கு நாள்களாக வெயில் சுருசுருவென்று காய்வ தில் சவுக்குத் தோப்பில் காய்ந்த காய்கள் ஏராளத்துக்கு கொட்டிக் கிடக்கும். சாக்கு நிறைய வாரிக் கொண்டு வந்து வைத்தால், நாளை மறுநாள் சூளைபோட வசதி யாய் இருக்குமே!

சவுக்குத் தோப்பை நெருங்கியவள், ஓன்னமும் ஆம்பிள்ளைப்பசங்களுக்கு சரியாக விளையாடிக்கொண்டு மகள் அங்கேயே இருப்பதைக்கண்டதும் 'தே-கண்ணம்மா' என்று குரல் கொடுத்தாள்.

தாயின் அழைப்பை அலட்சியம் பண்ணாமல் அவள் தொடர்ந்து விளையாட முற்பட, சுரீரென்று கோபம் தலை தூக்க, நாலே எட்டில் அவளை நெருங்கி அதட் டினாள்.

''கூப்புடறது கூட காதுல விழாம அப்படி என்ன விளையாட்டு? மூதேவி...''

கையில் கில்லித்தண்டுடன் நின்றிருந்த கண்ணம்மா இவளை முறைத்தாள்.

''என்னா?''

''என்னாவா? தெனாவட்டு புடிச்ச களுத... வெயில் தலைய ஓட்டை போட நா மண் சுமந்துகிட்டு அல்லாட

றேன்— தடிப்பசங்களோடு நின்னுகிட்டு—என்னாவ கேக்கறே? வாடி இங்க... வந்து சவுக்கு காய்கள பெருக்கி அள்ளி எடு''

கண்ணம்மா அழுகு காட்டினாள்.

''நா வெள்ளாடிட்டு இருக்கேன்... இப்பவர முடி யாது...''

எட்டு மாசக் கைப்பிள்ளையை விருத்தாம்பா பாட்டி யிடம் விட்டுவிட்டு வந்திருப்பது நினைவுக்கு வர செந் தாமரை எட்டி அவள் முடியைப் பிடித்து உலுக்கினாள்.

''என்னாடி? வர முடியாதா? கூறு கெட்ட மூதேவி. வூட்டுல தம்பிய போய் பாத்துகிட்டாலும் புண்ணியம் உண்டு... அத்த வுட்டுட்டு... உன்ன...உன்ன...''

கையிலிருந்த துடைப்பத்தால் லேசாக கண்ணம்மா வின் மூதுகில் ஓர் அடி வைத்ததும், அவள் வீறிட்டுக் கத்தினாள்.

''யப்பா... யப்பா...''

ஒரே துள்ளலில் தாயின் பிடியிலிருந்து விடுபட்டவள் அந்த அழுகை மாறாமல் வீட்டைப் பார்க்க ஓட, செந் தாமரை ''எங்க ஓடறே... வூட்டுக்கு வந்து உன்ன பாத்துக்கறேன்'' என்று கறுவியவாறு சவுக்குத் தோப்புக் குள் நுழைந்தாள்.

சாக்கு நிறைய சவுக்குக் காய்களைச் சுமந்து கொண்டு அரை மணி கழித்து அவள் வீட்டுக்குத் திரும்பிய போது பாவாடை வாசல்திண்ணையில் உட்கார்ந்தவாறு அவளை மறித்தான். மடியில் கண்ணம்மா...

''தே- நில்லு... புள்ளய அடிச்சியா?''

பதில் கூறாமல் செந்தாமரை பக்கலாட்டுக் கொட்ட கையில் நுழைந்து சாக்கு மூட்டையை ஒரமாகப்போட்

டான். தலைப்பை உதறிக்கொண்டு வெளியில் வந்தவள் வேலி அருகில் சென்று "ஆயா-புள்ளைய கொடுங்க...நா திரும்பிட்டேன்" என்று குரல் கொடுத்தாள்.

இரண்டு நிமிஷங்களில் தூங்கிவிட்ட குழந்தையை விருத்தாம்பா கொண்டு வந்து வேலிக்கு மேலாக நீட்ட, அவனை வாங்கி மார்போடு அணைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

"கேக்கறது காதுல விழவ?"

தூளியில் மகனை இட்டு, கயிற்றை இழுத்து ஆட்டின பின்னர் செந்தாமரை புருஷனை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னத்துக்காக இந்தக் கூப்பாடு போடற நீ?"

"கண்ணம்மாவ எதுக்கு அடிச்சே நீ? அது அழுதுகிட்டு வந்து நின்னதும் என்னவோ, ஏதோனு நா பதறிப் போயிட்டேன்"

"ஆமா...பதறுவே பொண்ணை இப்படி வளத்திருக்கிங்களே-னு அடுத்தவங்க ஏசறாங்க, அதுக்கு பதறக் காணம்- பெரிசா கேக்க வந்திட்டே! ஏன், அந்த பூங்காவனத்துக்கு இவ வயசுதானே! அம்மாகாரிக்கு என்னமா ஒத்தாசை பண்ணுது! இது வேளா வேளைக்குத் தின்னுட்டு கோயில் மாடாட்டம் சுத்துது. அதக் கண்டிக்க வழியில்ல, அத அடிச்சியாலு என்ன கேக்க வந்திட்ட! 'மண் எடுக்க வாடீ'னா—மாட்டேன்—சாணி பொறுக்கி எருமூட்ட தட்டி வைடீனா—மாட்டேன். சவுக்குக்காயி பெருக்கி வாருடீன்னா—மாட்டேன்—எல்லாத்துக்கும் ஒரே பதில்தான். கோவம் வராம என்ன செய்யும்? போட்டேன் முதுகுல ஒண்ணு...தப்பாங்காட்டியும்?"

பாவாடை மகளை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டான்.

"போடுவே... போடுவே... இனிமே கை வையி... சொல்றேன். இது என் ராசாத்தி குட்டி தெரியுமில்ல? இவ சாணி பொறுக்கவும், மண் எடுக்கவும் பொறந்தவ இல்ல...நினைப்பு இருக்கட்டும்..."

செந்தாமரை கலைந்திருந்த தலைமுடியை அவிழ்ந்து மீண்டும் முடிந்து கொண்டாள். அரிவை முறத்தில் கொட்டிப் புடைத்துக் கொண்டே பேசினாள்.

"சாணி பொறுக்கப் பொறந்தல ஒம்மக இல்லன்னா பள்ளிக்கோடத்துக்கு படிக்கவாவத அனுப்பறது...அதை யாலது உருப்படியாகச் செய்யலாம், இல்ல?"

"எம் மக பெரிய்ய படிப்பு படிக்கணும்னு எனக்கு மட்டும் ஆசை இல்லியா நெனைக்கும் அம்மாத்தொலைவு நடந்துபோய் படிச்சிட்டுவர இந்த சிறிசால முடியுமா? எழவு எடுத்த ஊருக்கு பள்ளூம் விட மாட்டேங்கறாங்க. அப்பால எப்படி சின்னபுள்ளய படிக்க அனுப்பறது. நீயே சொல்லு? இரு- இரு... ரெண்டு வருஷம் போனாவுட்டு கையேல நாலு காசு சேர்ந்ததும் ஆண்டார்முள்ளி பள்ளத்துலேந்து வாத்தியார ஊட்டுக்கே வரவழச்சி பாடம் சொல்லிக் கொடுக்கறேனா இல்லையாலு பாத்துகிட்டே இரு...என்ன நா சொல்றது?"

செந்தாமரை அவளை ஒருகரம் விறித்தாள். 'நீ சொல்லதெல்லாம் நடக்கிற காரியமாய் எனக்குப் படவில்லை'—என்றது அந்தப் பார்வை. பிறகு ஏதும் பேசாமல் இரவு சாப்பாட்டுக்கான வேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள்.

மறுநாள் விடிகாலை எழுந்ததிலிருந்தே வேலைகள் வரிசையாய் காத்திருந்தன.

நீராகாரத்தை குடித்துவிட்டு செங்கலடியில் முந்தின நாள் மிதித்து வைத்திருந்த மூன்று வித மண்ணோடு, ஆற்று மணலும் நீரும் சேர்த்து மேலும் செம்மையாய்

மிதித்து, பாவாடை மண்ணை அப்பி வைத்த நாழீகையில், செட்டியார் வீட்டுக்குப் போய் ஏற்கெனவே பேசி வைத்திருந்த ஒதியன் மர விறகுகளை நாலு நடை தலையில் சுமந்து வந்து செந்தாமரை கொட்டகையில் போட்டாள்.

ஒன்பது மணி அளவில் பழையதை உண்டு விட்டு எரவாணத்தில் வைத்திருந்த திருவையைத் தூக்கிக் கொண்டு வட்டமாக சிமிண்டில் செய்து தரையில் பதித்திருந்த இடும்பகட்டியிடம் பாவாடை வந்தான்.

இடும்பகட்டியின் நட்ட நடுவில் இருந்த கூழாங் கல்லின் துவாரத்தில் சிறிது கடலை எண்ணெயை ஊற்றி திருவையின் முனையை அதில் பொருத்தினான்.

திருவை சக்கென்று உட்கார்ந்தது.

அந்தத் திருவை அவனே கைபடச் செய்தது,

மூங்கில் சுழிகளை சக்கரம் போல இணைத்து, தேங்காய் நார்கொண்டு கட்டி மண்ணை அப்பி காய வைத்து நடுவில் தட்டையாய் பலகையை அடித்து அதன் மையத்தில்முனையைப் பொறுத்துவது என்பது லேசான காரியம் இல்லை. செய்து பார்த்தால்தான் அதில் உள்ளசிரமங்கள் புரியும்,

இவனைப் போல வேறு யாருக்கும் அத்தனை கச்சித மாய் திருவை செய்ய வராது என்பதால் தள்ளி இருக்கும் கிராமங்களில் வசிக்கும் பங்காளிகள் கூட இரண்டு மூன்று வருஷங்களுக்கொரு முறை சாமான்களோடு வந்து இவனிடம் திருவை செய்து கொண்டு போவதுதான் வழக்கம்.

திருவையைப் பூட்டி, லேசாக சுழற்றி, அதன் மேல் பெரிய கையளவு மண்ணை அப்பிய பின், திருவையில் இருந்த ஓட்டையில் தடியைப் பொருத்தி, வேகமாக பாவாடை சுழற்றினான்.

நல்ல வேகம் எடுத்தபின், தடியை அகற்றிவிட்டு, களிமண்ணில் கைகளை அழுத்தி அளவில் பெரிய சால்

பானையை உருவாக்க முற்பட்டான். முழு நீளத்துக்கு பானை உயர்ந்ததும்,மெல்லியகம்பியால் அடியில் அறுத்து தனியாக வந்த அடிகலத்தை மெதுவாக ஒரு பக்கமாய் வைத்துவிட்டு, அடுத்ததைச் செய்ய ஆரம்பித்தான்.

அவன் செய்து வைத்த அடிகலங்கள் லேசாய் காய்ந்த பின் கொட்டகையில் ஒவ்வொன்றாகத் தூக்கி—வைத்த செந்தாமரை, நினைத்துக் கொண்டு "போனதரம் சூளை போட்டப்ப வைக்கல் பத்தாம போயிடுச்சே—வேணா, நாயக்கரம்மாகிட்ட போயி எதுக்கும் இன்னம் ரெண்டு திறை வாங்கியாரட்டுமா?"

பாவாடை தலை அசைத்து தன் சம்மதத்தைத் தெரிவிக்க, அவள் எழுந்து வேலிப் படலைத் திறந்து கொண்டு போனாள்

இன்றைக்கு அடிகலங்களை செய்து விட்டால், நாளைக்கு தட்டி, மாலை போட்டு, செம்மண் பூசி, பகல் இரண்டு மணிக்கு சூளையில் ஏற்றிவிடுவார்கள் என்பதால் முன்னேற்பாடாக சூளைக்குத்தேவையான பொருட்களை சேர்த்து வைப்பது தானே நல்லது? ஒதியன் விறகு, எரு மூட்டை, சவுக்கு மிலாறு, சத்தை ஆகியவற்றுடன் மூன்று திறை வைக்கோலும் தயார். பானை செய்து முடித்த கையோடு ஆம்பிளையை விரட்டி பனம்பூ கொண்டு வரச் செய்து விட்டால், தணலுக்கு வசதியாய் இருக்கும்.

திட்டமிட்டபடி அத்தனையும் செய்துவிட்டு மறுநாள் வேலை நெட்டி வாங்கும் என்பதால் அன்று சீக்கிரமே பாவாடையும், செந்தாமரையும் படுக்கப் போனார்கள்.

மறுநாள் கொட்டகையில் மழைக்குப் பயந்து கவிழ்ந்திருந்த அடிகலங்களை உள்பக்கம் கல், வெளிப்பக்கம் தட்டுப்பலகை கொண்டு தட்டித்தட்டி பாவாடை பானைகளாக, சால்களாக உருவாக்கியதும், அவற்றை வெயில்

படுகிற மாதிரி செந்தாமரை திருப்பி விட்டுக்கொண்டே, ஸோத்துக்கோலைக் கொண்டு பானைகளின் சுழத்தில் கோடுகளை வரைந்து 'மாலை' போட்டாள். பிறகு செம்மண் குழம்பு கரைத்து வைத்திருந்ததில் கும்பளித் தூரியை நனைத்து சாயம் பூசினாள்.

அத்தனையும் செய்து முடிக்க மணி இரண்டாகியது. அடுத்து சூளையை தயாரித்தார்கள்.

வறட்டிகளை வரிசையாய் அடுக்கி, அதன் மேல் உடைந்த ஓடுகளைப் பரத்தி, பெரிசிலிருந்து சிறிசாக பானைகள் ஒன்றின்மேல் ஒன்றாக அம்பாரமாக கவிழ்த்து சவுக்கு சத்தைகளை இடுக்கில் தூவி, பனம்பூ தளை கரண்டி அளவு ஒவ்வொரு பானை வாயினுள்ளும்போட்டு வைக்கோல் ஓட்டுக மூடி, சேற்றைக் குழைத்து நடுப் பகுதியில் மூச்சுவிட இடம் தவிர பக்குவமாய் மற்ற இடங் களில் பூசி, சுற்றிலும் ஓதியன் கட்டைகளைப் போட்டு அங்கும் இங்கும் தீ மூட்டினார்கள்.

திகுதிகு என்று தீ ஜ்வாலை விடாமல் ஒத்தாற் போல குமுக்கமாய் எரிந்து முடிந்து, பானைகள் கச்சித மாய் சுட்டானதும், மாலை ஆறுமணி சுமாருக்கு கை பொறுக்கும் சூடாய் இருக்கும் போதே சூளையைப் பிரித்து பானைகளை வெளியில் எடுத்தார்கள்.

சூளை பிரித்து கொட்டகைக்கு ஒரு தரம், பிறகு வண்டிக்கு இன்னொரு முறை என்று அல்லாட வேண் டாம் என்கிற ஜாக்கிரதையுடன் முன்கூட்டியே சொல்லி வைத்து விட்டதில் வந்து காத்திருந்த சொக்கனின் டயர் வண்டியில் புருஷனும், மனைவியுமாய் பதமாய் பானை களை ஏற்றி, கம்புகளை அண்டக் கொடுத்து, கயிறால் கட்டிவிட்டு, ஒரு காரியம் ஆயிற்று என்கிற நிம்மதியுடன் படுக்கப் போன போது செட்டியார் வீட்டு அந்தக் கால சுவர் கடிகாரம் பத்து அடித்தது.

விடிவதற்குள் புறப்பட்டு சூரியன் உச்சிக்கு ஏறு

வதற்கு முன்பாகவே அண்டை கிராமத்தை அடைந்து ஒரு மரத்தடியில் வண்டியைப் பரத்தி, சட்டி பானை களை விற்று பதிலுக்கு தெல்மணிகளையோ, சூபாய் களையோ வாங்கிக் கொண்டு, மறுபடி மிஞ்சியவற்றை வண்டியில் ஏற்றி, இதர கிராமங்களுக்கு சரக்கு காலி யாகும் வரை சென்று விட்டே வருவான் என்பதால் முதல் இரண்டு நாள்களுக்குத் தேவையான புளிசாதத்தை காலையில் மூன்று மணிக்கே எழுந்து செந்தாமரை தயாரித்தாள். அதோடு மேற்கொண்டு ஓரிரு நாள்கள் வியாபாரமாகாமல் அலைய வேண்டி வந்தால் ஆங் காங்கே சமைத்து சாப்பிட இருக்கட்டும் என்று பையில் அரிசி, பருப்பு, குழம்பு சாமான்களையும் கட்டி உடன் வைத்தாள்.

விடிகாலையில் வெள்ளை எழுந்து குளித்து திருநீறு பூசி, புறப்பட பாவாடை தயாரானதும், அவனோடு சேர்த்து கொண்டு செந்தாமரையும் சாமி கும்பிட்டாள்

''அப்ப நா வரட்டுமா?''

''கவனமா இருந்துக்க. கறாரா வெல சொல்லி யாவாரம் படியாம வுட்டுடாத... அப்படி இப்படி இருந்தாலும் பரவாயில்ல... பொளுதுக்கு சோத்த சாப்டுடு... பத்தலைனா ஜாமான் வச்சிருக்கேன். சமைச்சிக்க...''

எல்லாவற்றுக்கும் தலை ஆட்டிய வண்ணம் பாவாடை வெளியே வர, செந்தாமரை பின்னோடு பேசிக் கொண்டே வந்தாள்.

வண்டியை நெருங்கிய பாவாடை மாடுகளைப் பூட்டி விட்டு இவனுக்காக காத்திருந்த சொக்கனின் பக்கத்தில் ஏறி அமர்ந்தான்.

''கிளம்புடா—வாரேன்—கண்ணம்மா உறங்கிட்டு இருக்கா எழுந்ததும் நா ரெண்டு நாள்ல வந்திடு வேன்னு சொல்லு...புள்ளய கண்டிக்கறேன்னு, எதனாச் சும் செஞ்சு வச்சராத...வரட்டுமா?''

வண்டி நகர்ந்தது.

கண்களிலிருந்து அது மறையும் வரை அங்கேயே நின்று பார்த்த செந்தாமரை மெதுவாகத் திரும்பி நடந்தாள்.

இந்த முறையாவது நல்ல விதமாய் பாண்டங்கள் விலை போக வேண்டுமே என்கிற கவலை நெஞ்சை அழுத்துவதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

இருக்காதா பின்னே? கடந்த நாலு மாசங்களாய் திருஷ்டி பட்ட மாதிரி ஒரு பானை கூட விற்க முடியாமல் ஏதேதோ இக்கட்டுகள் தோன்றியது உண்மைதானே?

முதல் தரம், மண்ணை மிதித்து, அப்பிக்கூட வைத்தாகி விட்டது. ராத்திரி படுத்து காலையில் எழுந்தால், பாவாடையின் மேனி கொதியாய் கொதித்தது. நாயக்கர் வந்து நாடிபிடித்துப் பார்த்துவிட்டு விஷஜ்வரம் என்று கூறி மருந்து கொடுத்தும் விடாமல் பத்து பதினைந்து நாள்களுக்கு காய்ச்சல்! உன்பாடு, என்பாடு என்று உடம்பு தேறி, மீண்டும் திருவையில் உட்காருவதற்குள் ஒரு மாசம் ஓடிவிட்டது.

அடுத்த முறை கிட்டத்தட்ட இருபது நாள்கள் பாடான பாடு பட்டு அத்தனை ரகப் பானைகளையும் செய்து வைத்து, சூளைபோடத் தயாரான போது எதிர் பாராமல் கோடை மழை, இடி, காற்று, மின்னலுடன் விளாசி கொட்டகை ஒரு பக்கம் சரிந்து விழுந்ததில் பாதி அடி கலங்கள் நொறுங்கிப் போயின. மிகுதி தண்ணீர் பட்டுக் கரைந்து உருமாறிப் போயின. மொத்தத்தில் ஒரு மாச உழைப்பும் ஒரே இரவில் வீணாய்ப் போயிற்று.

அதற்குப் பிறகு இப்போதுதான் முழுசாய் வண்டி கட்டிக்கொண்டு பாவாடை கிளம்பியிருக்கிறான், அத்தனை பண்டங்களையும் விற்று,நெல் மூட்டைகளாகவோ காசாகவோ புருஷன் எடுத்து வந்தால் குல தெய்வமான 'பாவாடைராயனு'க்கு உறவு ஜனங்களைக் கூட்டி படையல் படைப்பதாக நேர்ந்து கொண்டிருப்பதை ஞாபகப் படுத்திக் கொண்டே குடிசைக்குள் நுழைந்து செந்தாமரை தூளியில் சிணுங்கத் தொடங்கிவிட்ட குழந்தையைத் தூக்கி மார்போடணைத்து பால் கொடுக்க உட்கார்ந்தாள்.

பாவாடைராயனுக்கு படையல் படைப்பது லேசுப் பட்ட காரியம் அல்ல. முதலில் நாலுபக்க கிராமங்களிலும் சிதறிக்கிடக்கும் உறவு மக்களுக்கு சொல்லிவிட வேண்டும். பத்து, இருபது என்று அவர்களும் வந்து முதல் நாளே குவிந்து விடுவார்கள். காலையில் வீட்டுக்கு அரைப்படி அரிசி என்று கேட்டு வாங்கி சோறாக்கி, காய்களோடு கருவாட்டையும் சேர்த்துக் குழம்பு வைத்து, முருங்கைக் கீரையை புண்ணாக்கோடு பிரட்டி, அத்தனையும் ஒன்றாகக் கலந்து, சுட்ட கருவாடு, சுருட்டு, ரொட்டி, சாராயம் ஆகியவற்றுடன் 'படைத்து', பிறகு வீட்டுக்குக் கொரு சோற்றை உருண்டை என்ற கணக்கில் பிரசாதம் அனுப்பி வைத்த பிறகுதான் 'அம்மாடீ' என்று உட்கார முடியும். சாமி காரியம் சுத்தம், பக்தி குறையக் கூடாது.

ஏற்கனவே என்ன தவறு செய்தோமோ, நாலு மாசமாய் சோதனைமேல் சோதனையாய் வாட்டி எடுக்கிறது. அதனால் இந்த முறை படையலின் போது எந்தத் தவறும் நிகழாமல் கண் குத்திப் பாம்பாய் கவனித்து செய்யப்பட வேண்டும்.

செய்ய வேண்டியவற்றை வரிசையாய் மனசுக்குள் எண்ணிப் பார்த்த போது அது அலாதி நிறைவைத் தர குழந்தைக்கு பால் கொடுத்தானதும் அவனை விளையாட விட்டவள், இன்னமும் எழுந்திருக்காமல் இருந்தகண்ணம்மாவை உலுக்கி எழுப்பினாள்.

கொல்லைக்கட்டைப் பெருக்கினாள். சூளை போட்ட இடத்தை சுத்தம் செய்தாள். சிவபூஷணம் சவுக்கு செத்தை அள்ளச் சென்றபோது கையோடு இருக்கட்டும்

என்று ஜனமும் சென்று வாரி வந்து கொட்டகையில் கோட்டாள். நாலு நாள்களாக சேர்த்து வைத்திருந்த காளத்தை கூளத்தோடு கலந்து எருமுட்டைகளாக உருட்டி வெயிலில் காய வைத்தாள்.

மாட்டுக்கு தீவனம்வைத்து அது போனால் போகிறது என்று கறந்த அரை லிட்டர் பாலை எடுத்து வந்து காய்ச்சி, மகளுக்குக் கொடுத்தாள்.

சூரியன் மலையில் விழுந்து, இரவு சாப்பாட்டுக்கான முஸ்தீபுகளில் அவள் ஈடுபட்டிருந்த சமயத்தில் தெருவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு யாரோ அலறும் ஓசை கேட்டது.

திடுக்கிட்டு வாசலுக்கு வந்தபோது, தெருவில் மூத்தாரும், நடுவரும் ஒரு போலீஸ்காரரும் கத்தலாகப் பேசிக்கொண்டிருந்தது பார்வையில் விழுந்தது.

அனைவரிடமும் அளவுக்கு மீறின பதற்றம்.

''என்னய்யா சொல்றீங்க— அய்யோ...நிசமாத்தான் சொல்றீங்களா?''

பெரியவர் உத்திராபதி ஆவேசமாய் வினவ, அருகே நின்றிருந்த அந்தாயி முகத்தில் பட்டென்று அறைந்து கொண்டு 'போயிட்டியாடா என் ராசா—'என்று அலறிய வாறு சருக்கென்று படலைத் திறந்துகொண்டு இவனைப் பார்க்க ஓடிவர, செந்தாமரை அதிர்ந்தாள்.

''அடிப்பாவி—மோசம் போயிட்டயேடீ''என்று கூக் குரலிட்டுக் கதறியவண்ணம் கிட்டத்தில் வந்து அவளை அந்தாயி அணைத்துக் கொண்டதும் செந்தாமரை திமிறினாள். கத்தினாள்.

''யாருக்கு என்னாச்சு அண்ணி? எதுக்காக இப்படி அலைமோதறீங்க?''என்றபோது பயத்தில் அவள் குரல் நடுங்கியது.

இதற்குள் அத்தனை ஜனமும் சேதி தெரிந்து திமுதிமு

வென்று ஓடிவந்து வீட்டின் முகப்பு மண்ணில் கூடி, அப்படி அப்படியே குந்தி அழ முற்பட்டார்கள்.

உத்திராபதி வாயில் துண்டை அடைத்துக்கொண்டு கேவினார்.

நீலகண்டர் தலையில் ஓங்கி அடித்துவாறு ''நா நம்ப மாட்டேன்—நா நம்பமாட்டேன்''என்று கத்தினார்.

கிழவி விருத்தாம்பா மயங்கி விழுந்தாள்.

சிவபூஷணமும் அந்தாயியும் செந்தாமரையைக் கட்டிக்கொண்டு குரல் எடுத்து அழுதார்கள்.

குழந்தைகள் ஏதும் புரியாமல் மலங்கமலங்க விழித்தன.

ஒரே சமயத்தில் நாலு பேர் விஷயத்தைச் சொல்ல முற்பட, ஒரு தினுசாய் விவரம் வெளிப்பட்டது.

கல்லுபட்டி அருகே குடித்துவிட்டு கண் மண் தெரி யாமல் ஓட்டி வந்த லாரி ஒன்று சட்டிபானை வண்டிமேல் நேர் மோதலாய் முட்டி மாடுகளையும் வண்டியையும் சின்னாபின்னப் படுத்திவிட்டதாம். பாவாடை அந்த இடத்திலேயே மாண்டு விட்டானாம். பலத்த அடியுடன் சொக்கனை கடலூர் ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார் களாம். மயக்கத்திலிருந்து சற்றுமுன் மீண்ட சொக்கன் பாவாடையின் ஊர், பேரைச் சொல்ல, சேதியைத் தெரிவிக்க போலீஸ் வந்திருக்கிறதாம்!

2

பசித்தது.

நீண்ட நேரமாக எதுவுமே சாப்பிடாமல் இருந்ததில் வெற்று வயிற்றில் பசி 'கொர்ர்' என்று உள்ளுக்குள் கோடு இழுத்தது.

கண்ணம்மா தலையைத் திருப்பி உள்பக்கம் ஏறிட்டாள்.

அம்மா ஒரு மூலையில் சுருண்டு படுத்திருப்பதைப் பார்க்க முடிந்தது. பக்கத்தில் மார்பைச் சப்பிக்கொண்டு தம்பி...

அவன்பாடு தேவலை. பசிக்கும் போதெல்லாம் அம்மாவின் மடியில் சென்று உட்கார்ந்து கொள்கிறான்; இருக்கிறதோ இல்லையோ சுரண்டி எடுத்து விடுகிறான்.

அவன் அம்மா செல்லம்.

அப்பா இருந்தால் இப்படி பசியோடு தன்னைத்தவிக்க விடுவாரா என்கிற எண்ணம் எழுந்து கண்களில் நீரைச் சுரக்கச் செய்தது.

கண்களைத் துடைத்துக்கொண்டு கண்ணம்மா "யம்மா" என்று அழைத்தாள்.

செந்தாமரை அசைந்து கொடுக்கவில்லை. தம்பி மட்டும் ஒருதரம் இவளைப் பார்க்கத் திரும்பி,சிரித்தான். பிறகு மறுபடியும் பால் குடிக்க முற்பட்டான்.

"யம்...ம்...மா..."

"என்னடீ?"

"பசிக்குது"

"கூழ் காச்சி வச்சிருக்கேன்—தட்டுல விட்டு குடி..."

கண்ணம்மா உதட்டைக் கோணி, முகத்தைச் சுளித்தாள்.

"எனக்குக் கூழ் வாணாம்."

"வாணாட்டி—போ..."

பால் குடித்துக் கொண்டிருந்த பிள்ளையை ஒதுக்கின செந்தாமரை சுவரைப் பார்க்க திரும்பி படுத்தாள்.

"யம்...மா...எனக்கு சோறு வேணும்..."

உரக்க அழுகையுடன் கண்ணம்மா கத்தியதும் விருட்டென்று செந்தாமரை எழுந்து உட்கார்ந்தாள்.

"அது என்னடி இத்தன அழும்பு ஒனக்கு? நாய் படாத பாடுபட்டு ரெண்டு காசை சம்பாரிச்சு ஐயோ

பாவம்னு கேப்பக் கூழ் கிண்டிவச்சா, குடிக்க ஒனக்கு கசக்குதா?கூழ் குடிச்சாக் குடி...இல்லாட்டி எங்கனாச்சும் ஒழிஞ்சு போ...வூட்டு வாசல்ல இருந்துகிட்டு 'சோறு, சோறு'னு கேட்டா பிச்சுபுடுவேன் பிச்சு..."

"பெரியப்பா வூட்டுக்குப்போயி சோறு சாப்பிடவா?"

செந்தாமரை பட்டென்று தலையில் அறைந்து கொண்டாள்.

"ஏண்டி இப்படி சோறு, சோறுனு அலையறே? பெரியப்பா வூட்டுல மட்டும் கொட்டியா வச்சிருக்கு?"

"அவங்க வூட்டுல நிதைக்கும் சோறு ஆக்குறாங்க...ம்ம்...நேத்து எனக்குக்கூட கொடுத்தாங்க...தொம்பைல நெல்லு இருக்கு...நா பார்த்தேன்..."

தான் சொன்னதையே மீண்டும் சொல்லிகண்ணம்மா பிடிவாதம் பிடிக்க, செந்தாமரை கோபத்துடன் எழுந்தாள்.

"உங்கப்பா இருந்த வரைக்கும் ஒருத்தர் வூட்டுல போயி சோத்துக்கு நாம நிக்கக் கூடாதுன்றதுல கறாரா இருந்தது மறந்துட்டு. இப்ப நெதைக்கும் யார் வூட்டுல சோறு போடுவாங்கனு பிச்சைக்காரியாட்டம் ஏண்டி பறக்கறே? மூதேவி...சோறு இல்லாட்டி என்னா? கூழு குடிச்சா பத்தாதா? மானப் முடி கெடக்குதே, எரு முட்டை உருட்டி போட்டு காசு சம்பாரிக்க முடியாம, ஒரு வேளை கூழ குடிக்கறதும் நின்னு போயிடுமோன்னு நா பதைக்கறது தெரியாம, ஏண்டி என் உசிர வாங்குதே? கூறு கெட்ட முண்டம்...அப்பன் இல்லாத பொண்ணை நாமளும் கண்டிக்க வாணாம்னு சும்மா இருந்தது தப்பு... உன்ன...உன்ன...எங்கூட அந்த வெளக்குமாறு? நாலு வச்சாதான் நீ வழிக்கு வருவே..."

ஆத்திரம் அதிகமாக துடைப்பத்தை எடுக்க மெய்யாலுமே செந்தாமரை முனைய அம்மாவின் கோபம்

புரிந்து, விலுக்கென்று எழுந்து நின்ற கண்ணம்மா ''அப்பாரு செத்தது லேந்து என்ன ரொம்பத்தான் கரிச்சுக் கொட்றே...நா எங்கனாச்சும் போறேன் போ'' என்று கத்திக் கொண்டே வேலிப் படலைத் திறந்துகொண்டு வெளியே ஓடினாள்.

ஆயா வீட்டைத் தாண்டும் போது வேகமாக வீசிய காற்றில் புளியம்பழம் ஒன்று உயரத்திலிருந்து கீழே விழ, நின்றாள்.

பெரிய பழம். நன்றாக முற்றி, இரண்டு விரல் அகலத்திற்கு பட்டையாய் இருந்தது.

கண்ணம்மா தலையை அண்ணாந்து மரத்தைப் பார்த்தாள். காய்ப்பு முடிந்து விட்டாலும் விடுபட்டு இங்கும் அங்குமாய் தொங்கிக் கொண்டிருந்த பழங்கள் காற்றில் ஆடுவது தெரிந்தது.

குனிந்து கீழே சகதியில் கிடந்த பழத்தைக் கையில் எடுத்தாள். தலையைத் திருப்பி அம்மா வாசலில் நின்று தன்னை கவனிக்கிறாளா என்று பார்த்தாள். இல்லை.

அரை நிமிஷம் அப்படியே நின்று ஆயா வீட்டிற்கோ அல்லது பெரியப்பா வீட்டிற்கோ சென்று 'பசிக்கிறது—சோறு போடுங்கள்' என்று கேட்கலாமா என்று யோசித்தாள். சற்றுமுன் அம்மா வேதனையுடன் 'ஏண்டி பிசாசைக்காரி மாதிரி பறக்குறே? என்று கேட்டது நினைவுக்கு வந்தது. அது நாழிகை இல்லாத ரோஷம் தலை தூக்க, யார் வீட்டுக்கும் போக வேண்டாம் என்று தீர்மானித்தாள்.

கையில் புளியம்பழத்தை வைத்தவாறு நீளக்க நடந்து தெருவைக் கடந்தாள். அரச மரத்தடி பிள்ளையார் மேடைக்குச் சென்று மறைவாய் அமர்ந்தாள்.

பசித்தது. வயிறு 'கொரட்' என்று சப்தம் போட்டது. தூரத்தில் கோலி விளையாடிக்கொண்டிருந்த பையன்களில் ஒருவன் இவளைப் பார்த்துவிட்டு, 'வெள்ளரட வறியா?' என்று அழைக்க, இருந்த இடத்திலிருந்தே 'இல்லை' என்று தலையை அசைத்தாள்.

பசி அதிகமாய் இருந்தது. பேசாமல் அம்மா சொன்ன படி ஒரு வாய் கூழையாவது குடித்திருக்கலாமோ என்று தோன்றியது. ஆனால், கொழகொழவென்று உப்பு சப்பில்லாத அந்தக் கூழின் ருசியை நினைத்துப் பார்க்கையிலேயே, குமட்டியது.

அவளுக்கு என்றைக்குமே கூழ் பிடிக்காது. சுடச் சுட சோறும் கருவாட்டுக் குழம்பும் இருந்தால் ஒரு தட்டு என்ன, இரண்டு தட்டு கூட வயிறு முட்ட சாப்பிடலாம்.

சோறு சாப்பிட்டு நாலைந்து நாள்களுக்கு மேல ஆகி விட்டன என்பது ஞாபகத்துக்கு வந்தபோது அடங்கியிருந்த அழுகை மறுபடியும் எழுந்தது.

அப்பா இருக்கும் வரையில் தினமும், இரண்டு வேளையும் சோறு இருக்கும். காலையில் கண் விழித்ததும் கூடாய் டீ... சாயங்காலம் லோட்டா நிறைய பால் கூட அம்மாகொடுப்பாள்தான். இப்போது டீ இல்லை, பாலும் இல்லை. மாட்டையே விற்றுவிட்ட பிறகு டீயாவது, மண்ணாவது? அட, அதெல்லாம் வேண்டாம், சோறு இல்லை என்றால் எப்படி?

அழுகை அதிகமாக, கண்ணம்மா மெதுவாக புளியம் பழத்தின் மேலிருந்த ஓட்டைப் பிய்த்து எடுத்தாள் சதைப் பற்றுடன் காணப்பட்ட பழத்தின் கொட்டைகளை அகற்றி விட்டு துளித் துளியாய்க் கடித்துத் தின்றாள்.

தொலைவில் நாய்க்குரின் மாந்தோப்பைக் காண முடிய, பசிக்கு ஒரு கிளிமூக்கு மாங்காயைப் பறித்துத் தின்றால் எத்தனை நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால் தோப்பு மரங்களில் காய்ப்பு இன்னும் சரியாகப் பிடிக்க வில்லை. சில நாட்களுக்கு முன் மரங்கள்

தொலைவிலிருந்து பூத்திருந்த பருவத்தில் ஏகத்துக்கு காற்று வீசியதில் பூக்கள் அத்தனையும் கொட்டி விட்டன. 'இந்த வருஷம் தோப்பை குத்தகைக்கு விட முடியாது. காயே இருக்காது' என்று நாய்க்கர் அலுத்துக் கொண்டதை இங்கே கேட்டான்தான். தவிர, இப்போது மரங்களில் காணப்படும் கரும் பிஞ்சுகளுக்கு ஆசைப்பட்டுப் போய், நாலு தாள்கள் முன் மாட்டிக்கொண்ட துரை போல, தானும் பிடிபட்டால், அப்புறம் வேறு வம்பே வேண்டாம், சின்னப்பையன், தெரியாமல் செய்து விட்டான் என்று விட்டு விடாமல் அன்றைக்கு நாய்க்கர் அவனை மரத்திலேயே தாள் பூராலும் கட்டிப் போட்ட மாதிரி தன்னையும் கட்டிப் போட்டால் அவமானம் தாளாமல் அம்மா சளுக்கு மிளாறை எடுத்து விளாசி விடுவாள்.

நினைப்பே கண்ணம்மாவின் உடம்பை உதறிப்போட வைத்தது. மாங்காய் ஆசைக்கு விடை கொடுத்தவள் புளியம்பழத்தைத் தின்று முடித்தாள். தின்னும் போது வேண்டி இருந்தாலும், சில நிமிஷங்களில் வயிற்றில் லேசாக எரிச்சல்எழ, எழுந்து போய் ரெட்டியார் தோப்பு கேணியில் தண்ணீர் இறைத்து, நாலு வாய் குடித்தாள். மீண்டும் அரச மரத்தடியிலேயே வந்து அமர்ந்து கொண்டாள்.

காற்று ஜிலுஜிலுவென்று வீசியது.

அப்போதைக்கு பசி அடங்கின மாதிரியான நிறைவு உண்டாக, அங்கேயே காலை நீட்டிப் படுத்துக்கொண்டாள்.

அப்பா இருந்தால் இவள் வாயைத் திறந்து கேட்பதற்கு முன்னால் நினைத்ததை வாங்கி தந்து விடுவார்.

கமர்கட், பஞ்ச மிட்டாய், ரப்பர் வளையல், ரிப்பன், எதற்கு ஆசைப்பட்டாலும் மறுநாளே சந்தைக்குச் சென்றோ, அல்லது ஆண்டார் முள்ளி பள்ளத்துக்கு நடந்து போயோ வாங்கி வந்து விடுவார்.

கிளிமூக்கு மாங்காய் இலவுக்கு பிடிக்கும் என்பதனால், அந்த பருவத்தில், பெரிசாய் காசு கொடுத்து வாங்கி வந்து விரல் விரலாக அரிந்து, அதையும் குறுக்காக வெட்டி, கடலூரில் வண்டிக்காரர் கொடுப்பது போல் செய்து தருவார். இரண்டு நுனிகளையும் அழுத்தினால், விசிறிமாதிரி பத்தை சிரிக்கும். தின்னவே மனசு வராது.

ராத்திரி நேரத்தில் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு சோற்றை உருட்டி கையில் வைப்பார். என்றாவது மீன் கிடைத்து ஆக்கி வைத்தால் முள் தொண்டையில் சிக்கிவிடும் என்பதற்காக தானே நல்ல துண்டங்களாக தட்டில் வைத்து பாத்து சாப்பிடு ராசாத்தி...முள் எசகுபிசகா குத்திடப் போவுது' என்பார் கரிசனத்துடன். இவள் சாப்பிட்டு முடித்த பிறகே தான் உண்ண அமருவார்.

எத்தனை அருமையாய் அப்பா தன்னை வைத்துக் கொண்டிருந்தார்? இன்று அவர் இல்லாமல் எப்படி லோல்படுகிறோம் என்கிற நினைப்பு தாளமாட்டாமல் போனதும். கண்ணம்மா விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். அப்புறம் அந்த விசும்பல் நிற்காமலேயே தன்னை மறந்து உறங்கியும் போனாள்.

மகள் கோபித்துக் கொண்டு வெளியே போன பிறகு, சுவரில் சரிந்து குந்தி அமர்ந்த செந்தாமரையும் வேறு எதுவும் செய்யத் தெரியாமல் அழுது தீர்ந்தாள்.

அவள்தான் என்ன செய்வாள்?

'போயிட்டு வாரேன்' என்று சொல்லி சட்டிபானை விற்கப் போன புருஷன் குடிகார லாரிகாரனின் தவறால் கண்மூடித் திறப்பதற்குள் செத்துப்போய் விடுவான் என்று கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லையே!

இரண்டு நாளில் வண்டி கொள்ளாமல் தெல்மூட்டைகளோடும், வருஷாந்திர சாமான்களோடும் வரப்

போகிறான் என்று எதிர்பார்த்தது நடக்காமல் புறப் பட்டுப் போன மறுநாள், முழுசாய், லெங்கல சிலையாய் தெடு தெடுவென்று போன மனுஷனை மூத்தார் கடலூர் ஆஸ்பத்திரியில் தந்தார்கள் என்று மூட்டையாக அல்லவா கட்டி எடுத்து வந்து குடிசையினுள் போட்டார்!

இதுவா? இந்த மூட்டையா? என் புருஷனா? என்று மனசு அலண்டுதான் போயிற்று. நான் நம்பமாட்டேன்— யாரையோ துண்டம் துண்டமாய் அறுத்துவந்து.என்னை ஏமாற்றுகிறீர்கள்—இது என் மாமன் இல்லை—என்று என்ன கதறி, என்ன முட்டிக்கொண்டு பரிதவித்துதான் என்ன?

லாரியில் அடிபட்டு உருத்தெரியாமல் போனதோடு, பிரேதப் பரிசோதனை வேறு செய்து கொடுத்ததில், அரை நாழிகை வீட்டில் அதை வைத்திருப்பதற்குள் நாற்றம் குடலைப் பிடுங்கத் தொடங்கிவிட்டது.

அவசரம் அவசரமாய் பாடை கட்டி, உட்கார வைத்து எடுத்துப்போகும் சம்பிரதாயப்படி செய்ய முடியாமல் மூட்டையாகவே கட்டிவைத்து...போதும்டா சாமீ...அந்த கொடூரம் ஆயுசுக்கும் போதும்...

சாமியா? செந்தாமரை தன்னை சட்டென்று உலுக் கிக் கொண்டாள்.

சாமியும் இல்லை, பூதமும் இல்லை. ஒன்றும் இல்லை, எல்லாம் ஏமாற்று வேலை. அதேபோல நல்ல மனசுடன் இருப்பவர் அமோகமாக வாழ்வார் என்பதும் பொய்.

அவள் புருஷனோ அவளோ இன்று வரை ஒரு புழு, பூச்சிக்கோ கெடுதல் செய்திருக்கிறார்களா? அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்பட்டிருக்கிறார்களா? ஒருவரை ஏமாற்றி பிழைப்போம் என்று எண்ணி இருக்கிறார் களா? ஐயோ...இல்லையே...உழைத்து முன்னேற வேண் டும், கையும், காலும் நன்றாக இருக்கும் போது உட்

கார்ந்து சாப்பிடுவது பாவம்... என்று தானே ராவாய், பகலாய், வெயிலில், மழையில் உழைத்திருக்கிறார்கள்; அப்புறம்?

இல்லை—பெரியவர்கள் சொல்லி வைத்திருப்பது எல்லாம் பொய் இந்த பாவாடைராயனை நம்பியதும் லீன்.

சட்டிபானை விற்று வந்ததும் மனைக் கூட்டி 'படையல்' படைக்க விருப்பப்பட்டது நினைவுக்கு வர சொந்தாமரையின் துக்கம் அதிகரித்தது. ஆத்திரம் பாவாடைராயனிடமிருந்து முகம் தெரியாத குடிகார லாரி டிரைவரிடம் தாவியது.

பாவி...குடியைக் கெடுத்த மகாபாவி...நீ நல்லா இருப்பியா? கை.கால் விளங்காம போவே...உன் வம்சமே புழுத்துப் போகும்...

இஷ்டத்துக்கு ஓட்டி வண்டி மேல் மோதியவன், எப்படியோ லாரியை மறுபடியும் கிளப்பிக் கொண்டு ஓடி விட்டானே—அந்தக் கொடுமையை என்னவென்பது! 'காப்பாத்துங்க...' என்று சொக்கன் அலறியதைக் கூட பொருட்படுத்தாமல், லாரியை ஓட்டிக்கொண்டு போக வேணும் என்றால், எப்படிப்பட்ட கல் நெஞ்சுக்காரன் அவன்!

சாதாரணமாகவே அந்த ரோட்டில் அத்தனை வண்டி போக்குவரத்து கிடையாது என்பதோடு விடி காலை ஐந்து மணி தருவாய் என்பதால் சாலையில் சுத்தமாய் ஜன நடமாட்டம் இல்லாமல் போனது அந்த கொலைகாரனுக்கு சாதகமாய் இருந்திருக்க வேண்டும்...

"நீங்க கவலைப் படாதீங்க...லாரியோட முன் பக்கம் செமத்தியா நசுங்கி போயிடுச்சின்னு சொக்கன் சொல்றான். அந்தாளோட மொகத்தையும் அவன் பாத் திருக்கான், எங்க போயிடுவான்? இந்தப்பக்கம் கடலூர்.

அத்தப் பக்கம் சிதம்பரம் வரைக்கும் போலீஸ் ஸ்டேஷன் கூருக்கு வெவரம் அனுப்பியாச்சு. ரெண்டு நாள்ல கண்டு பிடிச்சிடுவம். நசுங்கினலாரியை ரிட்பேர் செய்ய அவன் எங்கனாச்சும் கொண்டு வரத்தானே செய்வான்? அப்ப பிடிச்சுடுவம். ராஸ்கல் பிடிச்சாச்சின்னா, பாவாடை யோட உசிருக்கும், வண்டி, மாடுகளுக்கும் சேர்த்து நஷ்ட ஈட்டு பணத்தை கேஸ் போட்டு கறந்திட மாட்டமா?''

தன் நம்பிக்கையுடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்னதை நம்பிக்கொண்டு மூத்தார் இவளை சமாதானம் செய்த போது 'என் மாமனை கொண்டாரச் சொல்லுங்க போதும் எனக்கு பணங்காசு வேணாம்' என்று மார்பில் அறைந்து கொண்டு செந்தாமரை கதறவே செய்தாள்.

ஆனால், பாவாடை செத்து ஆறு மாசங்கள் போல ஆகிவிட்ட நிலையில், புருஷன் இறந்து விட்டான். இனி அவனை உசிரோடு கொண்டு வருவது நடக்கிற காரியம் இல்லை என்பது ஆணி அடித்த மாதிரி விளங்கிவிட்ட பிறகு 'அந்த கொலைகார பாவி பிடிபட்டு கொஞ்சம் பணமாவது கிட்டி, குழந்தைகளின் எதிர்காலத்துக்கும் வயிற்றுப் பாட்டுக்கும் ஒரு வழி பிறக்காதா?''—என்கிற ஏக்கம் அடி மனசில் அவ்வப்போது மின்னுவது உண்மை தான்.

பின்னே?

நினைத்த நினைப்பில்லாமல் தாலி கட்டினவன் மறைந்து, சொத்து பத்து என்று எதுவும் இல்லாமல், இரண்டு குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளையும் கடத்த செந்தாமரை படும்பாடு அவளுக்குத் தானே தெரியும்?

முதல் ஒரு மாசம் வரை துக்கத்தைத் தவிர வேறு எதையும் உணர முடியாமல் பித்து பிடித்த மாதிரி இருந்தாலும், மெது மெதுவாக நாள்கள் நகர, நகர நிலைமையின் பயங்கரம் கண்முன் தாண்டவமாடவே செய்தது

வீட்டில் இருந்தவற்றைக் கொண்டு சமாளித்த வரைக்கும் கஷ்டம் அத்தனை பெரிதாய் தெரியவில்லை. இரண்டாம் மாசம் தொம்பை சுத்தமாய் துடைத்து வைத்தமாதிரி ஆனதும், விற்பதற்கு சட்டி பானையும் இல்லாத நிலை வந்ததும், செந்தாமரை விழித்துக் கொண்டாள்.

அடுத்து வந்த நாள்களில் மாறி மாறி ஒவ்வொரு மூத்தார் வீடுஇலிலிருந்து சாப்பாடு வரத்தொடங்கியதுமே அவள் என்னடா செய்வோம் என்று பரிதவிக்க முற்பட்டாள்.

பங்காளிகள் அனைவருமே ஏழைமை நிலையில் இருப்பவர்தாம். கைக்கும், வாய்க்குமாக எல்லாக் குடும்பங்களும் இருக்கின்றனவே, திடுமென உபரியாய் மூன்று வயிறுகளுக்கு தினமும் சோறு போட்டு பராமரிக்கும் சக்தி எவருக்கும் கிடையாது. இருப்பதைப் பகிர்ந்து கொள்ளலாம் என்றாலும், அதற்கும் வழி இல்லாமல், எதையாவது நிப்பாட்டினால்தான் மாற்றத்துக்கு ஏது செய்ய முடியும் என்பதே பிரத்யட்சநிலை. எல்லாருமே பெரிய சம்சாரிகள். அவரவருக்கு மூன்று, நான்கு என்று குழந்தைகள் இருக்கின்றன. முடிந்தவரையில் உழைத்து ஒரு வேளை சோறு, ஒருவேளை கூழ் என்று பங்காளிகள் மானமாய் இருப்பதையும் அவர்கள் மூவரின் சுமைநிறுத்தி விடும் என்றால் அது நியாயமான செயலாக இல்லையே! எல்லாரும் நல்லவர்கள்தாம். ஆனாலும் மனசிருந்தால் மட்டும் போதுமா? வெறுங்கையை வைத்து முழம் போட முடியுமா? மூத்தார் வீடுகளில் வாயைத்திறந்து ஒரு வார்த்தை எவரேனும் அலுத்துக்கொள்ளும் முன்னர் தன்னைச் சுதாரித்துக் கொள்ள செந்தாமரை விவேகத்துடன் முடிவு செய்தாள்.

என்ன ஆளாலும் இனியும் அடுத்தவர்களுக்கு தானோ, தன் பிள்ளைகளோ பாரமாகக் கூடாது என்ற வைராக்கியம் பிறக்க, புருஷன் இறந்து ஒண்ணரை மாசம் ஆவதற்குள், தானும் மற்றபெண்களோடு சென்று மண் தூக்கி வந்தாள்.

பெண்கள் திருவையில் உட்கார்ந்து வேலை செய்வது வழக்கத்தில் இல்லை என்பதால் தேத்தாங்கரை மண்ணை மட்டும் எடுத்து வந்து, மிதித்து, களத்தோடு சேர்த்து கையால் மாடுகளுக்கு தீவனத் தொட்டி, பூஞ்சட்டி, தொம்பை—இத்யாதிகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

இருப்பினும்—வண்டி நிறைய பானைகளை ஏற்றிச் சென்று விற்றுவரும் ஆண்களுக்கே வருமானம் பத்தாமல் போகும் காலம் இது—அப்படி இருக்க, ஒண்டி பெண் பிள்ளை இவள் சம்பாதித்து என்ன பெரிசாய் வந்துவிடப் போகிறது?

ம்ஹூம்...ஒன்றும் இல்லை.

மாட்டுக்கு தீவனம் கொடுத்து கட்டுப்படி ஆகாதோடு, அதை விற்றால் கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு ஓரிரு மாதங்களை ஓட்டலாமே என்கிற கணக்கில் மாட்டை விற்றாள். அந்தப்பணம் திரும்பிப் பார்ப்பதற்குள் கரைந்து விட்டது.

மதிய நேரங்களில் சுணங்கி உட்காராமல் கருவேலங் காட்டுக்குச் சென்று, குச்சி உடைத்து, கட்டாக கட்டி செட்டியார்கடையில் விலைக்குத் தருகிறாள். சாணி பொறுக்கி எருமுட்டைகளாக உருட்டி, காயவைத்து கேட்பவர்களுக்கு காசுக்குக் கொடுக்கிறாள். ஆண்டார் முள்ளிப்பள்ளம் வரைக்கும் கைப்பிள்ளையுடன் நடந்து போய் கடலைப் பயிர்களில் நாள் கூலிக்கு களை எடுக்கிறாள்—இன்னும் இன்னும்...

என்ன செய்து என்ன?

எதுவுமே நிலையான வருமானத்தைத் தராததோடு, கையில் வரும் இரண்டு, மூன்று ரூபாய்களை வைத்துக் கொண்டு மூன்று வயிறுகள் காயாமல் பார்த்துக் கொள்வதற்குள் விழி பிதுங்கித்தான் போகிறது.

ஏதோ இந்த மட்டுக்கும் கூழாவது கிடைக்க வழி பிறந்ததே என்று நிம்மதி அடையமுடியாமல் இந்த பெண் வேறு சரியான இரண்டாங்கெட்டானாக 'சோறு கொடு' என்று எந்நேரமும் அடம் பண்ணுகிறது!

இருந்தால் கொடுக்க மாட்டேனா? என் கஷ்டத்தை இவள் எப்போது புரிந்து கொள்ளுவாள்?

அடங்கி இருந்த அழுகை மீண்டும் பீரிட, ஒருவித கையாலாகாத்தனத்துடன் செந்தாமரை வாயில் புடைவைத் தலைப்பைத் திணித்துக்கொண்டு ரொம்ப நேரத்துக்கு அழுதாள்.

இனி கண்களில் நீர் இல்லை என்று ஆனதும், ஒரு நிதானாய் தன்னைசமாதானப்படுத்திக் கொண்டு மூக்கைச் சிந்தி, முகத்தைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

காலையிலிருந்து மகள் ஒன்றுமே சாப்பிடவில்லை என்கிற எண்ணம் வேதனைப்படுத்தியது.

வாசலுக்கு வந்து படலைத் திறந்து கொண்டு கண்களை சுழட்டி மகள் எங்காவது இருக்கிறாளா என்று பார்த்தாள்.

காணோம்.

படலை மூடிக்கொண்டு உள்ளே வந்தவள் பக்கத்து வீட்டின் வேலிக்கருகில் சென்று நின்று "ஆயா" என்று அழைத்தாள்.

சில நொடிகளில் வெளியே தலை நீட்டிய ஆயாவிடம் "கண்ணம்மா அங்க வந்திருக்குதா?" என்று வினவினாள்.

"இல்லியே—" என்ற சிமிலி 'நானே ஒன் பூட்டுக்கு

தான் பொறப்பட்டுகிட்டு இருக்கேன்... இதா வாரேன்...' என்று கூறி விட்டுக்குள் சென்று, சில நிமிஷங்களில் ஒரு பாத்திரத்தை முந்தானையில் மூடியவாறு வெளிப்பட்டு, வாசமண்ணைத் தாண்டி, படலைத் திறந்துகொண்டு வீதி வழியாக இவள் வீட்டுக்குள் வந்தாள்.

அருகில் வந்தவள் செந்தாமரையை ஊன்றிப் பார்த்து விட்டு கேட்டாள்.

"அழுதியா?"

"....."

"என்னத்துக்காக இப்படி மனசைப் போட்டு அலட்டிக்குறே? அழுதாங்காட்டியும் போனவன் திரும்பிடப் போறானா? நம்மவிதி இவ்ளோதான்னு தேத்திக்கறதைச் செய்யாம... அசடா இருக்கியே"

உரிமையுடன் கடிந்து கொண்டவள் அவள் கையைப் பற்றி வீட்டு வாசலுக்கு இட்டுச் சென்று எரவாணத்தின் கீழ் அமர்ந்து, அவளையும் அருகில் உட்கார வைத்தாள்.

"சூடா இட்லி சுட்டு கொணாந்திருக்கேன்—நீ நாலு எடுத்துக்கிட்டு கண்ணம்மாவுக்கும் குடு-அதுக்குஇட்லினா உசிரு... எங்க போயிடுச்சு? உத்திராபதி லூட்டுல பாத்தியா?"

விருத்தாம்பாவின் கேள்விகளுக்கு பதில் கூறாமல் செந்தாமரை அடி உதட்டைக் கடித்துக் கொண்டாள். கண்கள் கலங்கி, விழியோரத்தில் முத்துக்கள் திரண்டன.

"தே— இப்பத்தானே சொன்னேன்... அழுவக் கூடாதினிட்டு... தொட... கண்ண... தொட...நீ இப்படி கலங்கிட்டே இருந்தா உம் மக எப்படி தேறுவா? ஆமா காலைல கூழு குடிச்சியா?"

"இல்ல"

"அட - கூறு கெட்டவளே! உம்மகளாவது எத வாச்சும் சாப்டுச்சா இல்லியா?"

"கூழ் அவளுக்கு வேணாமாம்—நெதைக்கும் சொறு கொண்டான்னா நா எங்க போவேன் ஆயா?"

"அதுக்காவ? அடிச்சியா?"

"இல்ல திட்டினேன்...ரோஷப்பட்டுகிட்டு எங்கியோ போயிட்டா..."

"எங்கு பொயிருப்பா...நா போய் தேடி இட்டாரேன் நீ இட்லிய துண்ணு."

"அவளும் வரட்டும் ஆயா..."கொஞ்சம்தயங்கிவிட்டு மறுபடி செந்தாமரை தொடர்ந்த போது துக்கம் தொண்டையை அடைத்ததில் குரல் பிசிறு தட்டியது.

"கண்ணம்மாவ நெனைச்சா அடிவயித்துல பகிர்னுது ஆயா...எதையுமே புரிஞ்சுக்காம விவரங்கட்ட தனமா நடந்துக்குறா, பேசுறா...நா படற கஷ்டம் அவளுக்கு கொஞ்சமாச்சும் புரியல... அவ அப்பா ஆவாலும் ரொம்பசெல்லம் கொடுத்து வளர்த்திட்டாரு...இப்ப,யார் பேச்சையும் கேக்காம, தன் இஷ்டத்துக்கு இருக்குறா... இவள வெச்சுகிட்டு, பொட்டச்சி ஒண்டியா நா என்ன பண்ணப் போறேனோன்னு திகிலா இருக்கு..."

விருத்தாம்பா நெடுமூச்சு ஒன்றை வெளியிட்டார்.

"பாவாடைக்கு மகள்னா வாயெல்லாம் பல்லாயிடும். கடஓர்லேந்து புதுசொக்காய் வாங்கி வந்து போட்டுட்டு பாத்தியா ஆயா எம்மகளோட அழகு! சினிமா ஸ்டாரு கெட்டா'னு பெருமைப் பட்டுக்குவான்."

"அப்படி சிராட்டி வளர்த்ததுதான் இப்ப தப்பா போச்சு ஆயா..."

விருத்தாம்பா கண்களை இடுக்கிக்கொண்டு,தலையை அசைத்து மறுத்தார்.

"நா ஒப்புக்க மாட்டேன், பொட்டைப் பிள்ளைனா மட்டமா வளக்கணும்னு ஏன் ஊர் சனம் நெனைக்குதோ புரியல...நாங்கள்ளாம் சிறிசா இருக்கறப்போ 'வாயமூடு-

பேசாத...அங்க போகாத, இங்க நிக்காத'னு வெரட்டி கிட்டி இருப்பாங்க... குழந்தைங்கள்ல ஆம்பள என்னா? பொம்பள என்னா? ரெண்டுமே சாமி கொடுத்தவரம்... அப்பால ஒண்ணு வெண்ணெய், இன்னொண்ணு கண்ணாம்புனா, அது நியாயமா? பாவாடை பெண்ணை உசத்தியா வளர்த்தது மெய்யாலுமே எனக்குசந்தோஷமா இருந்துச்சு...அப்பப்ப தா அவனண்ட கூட சொல்வேன் 'நீ தாண்டா சரியான ஆம்பளை'னு ஆனா...கொஞ்சம் அதிகமா எடம் கொடுத்திட்டான். அதான் அவன் செஞ்ச தப்பு... ம்ம்... பொம்பளைக் குட்டி அவன் செல்லம் கொடுத்ததால கெட்டுட்டான்னு பழிக்கறதுல எனக்கு சம்மதமில்ல... கண்டிப்பு இல்லாம வளர்ந்தா அது ஆம்பிளை புள்ளையானாலும் சரி,பொட்டச்சி ஆனாலும் சரி, கெட்டுடும். நம்ப வூட்லயும் அதான் நடந்திருக்கு— விடு...தன்னால சரியாயிடும்... அத நெனைச்சு நீ கலவரப்படாத..."

பேசியவர் எழுந்து நின்றார்.

"நா போயி கண்ணம்மா எங்க இருந்தாலும் தேடி, இட்டுகிட்டு வாரேன்...நீ உள்ளாரபோயி இட்லி சாப்டு... தம்பி முழிச்சுகிட்டு இருக்கா? இருந்தா அதுக்கும் ஒரு இட்லி குடு...இன்னும் எத்தனை நாளைக்கு ஒன்னையே அவன் உறிஞ்சுகிட்டு இருக்க எடம் கொடுக்கறது...?"

புறப்பட்டுச் சென்றவள் கிட்டத்தட்ட ஒருமணி நேரம் கழித்து கண்ணாம்மாவுடன் வந்து, "அரச மரத்தடில ஒறங்கிட்டு இருந்தா...எழுப்பிக் கூட்டியாரேன்..." என்று செந்தாமரையிடமும் "உள்ளார இட்லி வச்சிருக்கேன்...போய் எடுத்து துண்ணு' என்று பேத்தியிடமும் கூறி அவளை உள்ளே அனுப்பினார். மீண்டும் செந்தாமரையைப் பார்த்து "போற வழில செட்டியார் வூட்டு வாசல்ல அவர் மக வள்ளியப் பாத்தேன். பட்டணத்துலேந்து நேத்துதான் வந்தாங்களாம். பாவாடை விஷயம் கேட்டு ரொம்ப மனசு கலங்கிட்டாங்க. அவங்களுக்கு

உன்னண்ட ஏதோ பேசணுமாம்...வீட்டுக்கு வாரேன்னு சொன்னாங்க...நா தான் 'நீங்க வீணா அல்லாட நீங்க... நானே பொழுது சாஞ்சதும் செந்தாமரையைக் கூட்டிட்டு வாரேன்'னு சொல்லிட்டு வந்தேன். வெயில் தாழ நா வரேன்...சேர்ந்து போலம்..." என்று கூறி விட்டுச் சென்றாள்.

சொன்னதுபோல மாலையில் "என்ன செந்தாமரை-போவமா?' என்று வேலிக்கருகில் நின்று கேட்டு, அவள் 'வந்திட்டேன் ஆயா' என்று குரல் கொடுத்தவாறு பிள்ளையை இடுப்பில் இடுக்கிக் கொண்டு, மகள் பின் தொடர வந்ததும், இருவரும் மெதுவாக நடந்து அடுத்த தெருவில் இருந்த செட்டியார் வீட்டுப்படி ஏறி. திண்ணையில் நின்றபோது கூடத்து கடிகாரம் ஐந்துமுறை அடித்து ஓய்ந்தது.

3

வந்தவர்களை வாசலிலேயே காத்திருந்து முத்துலட்சுமி ஆச்சியும், அவர் மகள் வள்ளியம்மையும் வரவேற்றனர்.

செட்டியார் தம்பதிக்கு வள்ளியம்மை ஒரே பெண் சென்னையில் புருஷனுடன் குடித்தனம் பண்ணுகிறாள். இன்னும் குழந்தை பிறக்கவில்லை என்பதில் ஆச்சிக்கு ஏகக் குறை.

பாவாடை இறந்த பிறகு முதல் முறையாக செந்தாமரையைப் பார்க்கிறாள் என்பதால் என்ன பேசுவது, என்னவென்று தொடங்குவது என்கிற தயக்கத்துடன் வள்ளியம்மை தயங்க, ஆச்சியே பேச்சை ஆரம்பித்தாள்.

"இருங்க பரவாயில்ல... அப்படி திண்ணையில ஒக்காருங்க... செட்டியார் கடைல இருக்காக...வர

மாட்டாக...சும்மா இருங்க...தாகத்துக்கு என்ன சாப் பிடறீக? வள்ளியம்மை...உள்ளார காபி கலந்து வச்சிருக் கேன் கொண்டா''

வள்ளியம்மை உள்ளே சென்று மூன்று லோட்டாக் களில் கொதிக்கும் காபியோடு வந்து அவற்றை அவர்கள் முன்னால் வைத்துவிட்டு திண்ணைமேல் அமர்ந்த பிறகும் உட்காராமல் விருத்தாம்பாவும், செந்தாமரையும் நின்று கொண்டே இருக்க, ''அட சும்மா இருங்கன்னு சொல் றேன் இல்ல'' என்றபடி முத்துலட்சுமி உட்கார்ந்தார். தயக்கத்துடன் ஒருபக்கமாய் மற்ற இருவரும் அமர்ந் தனர்.

'ஹூம்' என்று பெருமூச்சொன்றை ஆச்சி வெளியிட் டார்.

''விதி யார விடுது? ஆனானப்பட்ட தெய்வங்களையே விட்டு வைக்காதப்போ, மனுஷங்க மேலயா பரிவுகாட்டப் போவுது... 'நெனைச்ச நெனைப்பு இல்லாம என் னென்னவோ நடந்து போச்சேம்மா'னு விஷயத்தை கேள்விப் பட்டதும் பதறிகிட்டு வள்ளியம்மை கடுதாசி போட்டா...நேத்து வந்ததுலேர்ந்து பாவாடை பத்தின பேச்சுதான். 'செந்தாமரை எப்படி இருக்கா'னு கேட்டா. வரச்சொல்றேன், நீயே பாத்துக்கனிட்டேன். வேறுஎன்ன சொல்றது?''

செந்தாமரை தலையைக் குனிந்து கண்ணீரைத்துடை துக்கொள்ள, வள்ளியம்மை அவளை நெருங்கி ஆறுதலாக கையைப் பற்றிக் கொண்டாள்.

வள்ளியம்மைக்கு கிட்டத்தட்ட செந்தாமரை வயசு தான். இவளுக்கு இன்னும் குழந்தையே பிறக்கவில்லை. ஆனால் அதற்குள் அவளுக்கு இரண்டு பிறந்து'வாழ்க்கை யும் முடிந்து விட்டது என்பதை எண்ணிப் பார்த்தபோது வயிற்றை என்னவோ செய்தது.

தொண்டை செருமிக் கொண்டு ''எப்படி இருக்கே செந்தாமரை?'' என்றாள் சின்னக் குரலில்.

அந்தப் பரிவான கேள்விக்காகவே காத்திருந்த மாதிரி செந்தாமரை உடைந்துபோய் அழுதாள்.

அழுவாத செந்தாமரை... என்ன பண்றது? நாம கொடுத்து வச்சது அம்புடுதேன்...அருமையான தம்பி... ஓயாம ஒழைப்பான்... ஒன்னையும், புள்ளைங்களையும் கண்ணுக்குள்ளார வச்சு பாத்துகிட்டான்...இது ஊருக்கே தெரியுமே! ஹூம்... அழுவாதே...சூடாபித் தண்ணிய எடுத்து குடிங்க...

ஆச்சி தலையைத் திருப்பி சற்று தள்ளி நின்றிருந்த கண்ணம்மாவை அருகில் அழைத்தார். அவளிடமும் ஒரு லோட்டாவை நீட்டி குடிக்கச்சொல்லிவிட்டு பெண்ணிடம் கண்ணால் சைகை காட்ட வள்ளியம்மை கேட்டாள்,

''ஒம் மக கண்ணம்மாவா இது! எம்புட்டு வளந் துட்டா?''

செந்தாமரை தலைப்பில் மூக்கைச் சிந்தி 'ப்ச்'சென்று சூள் கொட்டினாள்,

''குதிராட்டம் வளர்ந்து என்னா புண்ணியம்! என்னோட கஷ்டம் புரியமாட்டேங்குதே!''

இப்போது விருத்தாம்பா பேத்திக்காகப் பரிந்து பேசினாள்.

''அப்பன் இருந்தப்ப செல்லமா வளர்த்த பெண்ணு... இப்ப அவன் இல்லாம இதுக்கு ஒண்ணும் புரியல...பாலம் அதப் போயி கொற சொல்லாதே...''

''நா வேணும்னா சொல்றேன் ஆயா... இவ நெதைக்கும் என்னப் படுத்தி வைக்கற பாட்டை நீங்களும் பாக்கத் தானே செய்யறிங்க?''

''பெத்தவன் போன அதிர்ச்சில குழந்தைங்க இப்படி

அப்படி இருக்கத்தான் செய்யும்...நாளானா தானா சரியா யிடும்...சின்ன விஷயத்தை பெரிசுபண்ணாத செந்தாமர.''

''அப்படி சொல்லுங்க ஆச்சி...அப்பனும் திடும்னுட்டு போயிட்டான்; வூட்டுலயும் எந்த வசதியும் இல்ல...பெரிய வங்களே திண்டாடறோம்... சின்னப் பொண்...என்ன செய்யும்?''

வள்ளியம்மை குறுக்கிட்டாள்

''மதியம் விருத்தாம்பாவ எதேச்சையா பாத்து பேசிட்டு இருந்தப்ப எல்லாத்தையும் வெவரமா சொன் னாங்க... கேக்கவே கஷ்டமா இருந்துச்சு... ஏன், செந் தாமர, உங்கப்பாரு விழுப்புரத்துல தானே இருக்காரு? அங்க கொஞ்ச நாள் போயி தங்கிட்டு வந்தா மனசுக்கு ஆறுதலா இருக்காதா?''

செந்தாமரை விரக்தியுடன் அலுத்துக் கொண்டாள்.

''அப்பாரு வூட்டுக்கா? ஆத்தாடி... கண்ணாலம் ஆயி பதினைஞ்சு வருஷமாச்சு... தலைப் பிரசவத்துக்குக் கூட நா பொறந்த வூட்டுக்குப் போனதில்லயேக்கா... மறந் திட்டீங்களா? அப்பா ரெண்டாம் கல்யாணம் கட்டி, சின்னம்மாவுக்கு நாலு பசங்க...அவங்களே கைக்கும் வாய்க்குமா இருக்கறப்போ, நானும் பசங்களோட போய் குந்திகிட்டா வேற வெனையே வாணாம்--கஞ்சியோ, பட்டினியோ இங்க பங்காளிகளோட இருக்கறப்ப கிடைக் கிற நிம்மதி அங்க கிடைக்குமா?''

பேச்சு எதிர்பார்த்த திசையில் போவது திருப்தி தர, விருத்தாம்பா தொடர்ந்தாள்.

''எங்களால முடிஞ்சவரைக்கும் நாங்களும் பாத்துக்க தான் செய்யறோம்... ஆனாலும், எங்களுக்கு பாரமா யிட்டமேனிட்டு இவதான் எப்பவும் பொலம்பிக்கிட்டே இருக்...''

அவரை முடிக்க விடாமல் செந்தாமரை அவசரமாய் குறுக்கிட்டாள்.

''பின்னே? நீங்களே சொல்லுங்க ஆச்சி... ஒண்ணா ரெண்டா? மூணு வவுறு! ஒருநாள்—ஒரு மாசம்னா பரவா யில்ல— ஆயுசுக்கும் எங்களையும் சேர்த்து சுமக்கணும்னு பங்காளிகளுக்கு தலை எழுத்தா? அவங்க அவங்களுக்கு குழந்தை குட்டி, குடும்பம் இல்லையா? சட்டி பானை செஞ்சு வர்ற வருமானத்துல அந்தந்தக் குடும்பத்தோட நல்லது, கெட்டது பாக்கறதே கஷ்டமா இருக்கறப்போ, நான்வேற சேர்த்துக்கணுமா? அது நாயமா? சொல்லுங்க'

''செந்தாமரை கேக்கறதும் சரிதான். ஆயுசு பூரா உங்க நிழல்ல அவளோ, அவ பசங்களோ எப்படி விருத் தாம்பா தங்கிக்க முடியும்?''

பதில் கூறாமல் விருத்தாம்பா மௌனிக்க, ஆச்சியே தொடர்ந்தாள்.

''நா உன்னண்ட ஒருவிஷயத்தை சொன்னேனே, அத பத்தி நீ செந்தாமரை கிட்டே பேசினியா?''

இல்லை என்று விருத்தம்பா தலை ஆட்ட, ஆச்சி பரிவுடன் செந்தாமரையை ஏறிட்டார்.

''ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துப்பியா?''

''சொல்லுங்கம்மா''

''உன் கஷ்டம் எங்களுக்குப் புரியுது. நீ படற சிரமம் தாளாமத்தான் இந்தப் பேச்சையே எடுக்கறோம். உன் மக நல்லதுக்காக சொல்றோம்னு நீபுரிஞ்சிக்கணும்...'

செந்தாமரை பதில் கூறாமல் வாளாதிருந்தாள்.

''ஒண்ணுமில்ல...நேத்து வள்ளியம்மை வந்ததுலேந்து உன்னைப் பத்திதான் பேசிட்டு இருக்கோம். மதியம் விருத்தாம்பா, கண்ணம்மாவைத் தேடிட்டு வந்தப்போ, குழந்தை வாய்க்கு ருசியா சாப்பாடு கெடைக்காம தவிக்கு தும்மா'னு சொல்லி அழுதப்ப தான் வள்ளிக்கு இப்படி செஞ்சா என்னனு தோணிச்சு... அதான் உன்னையே கேட்ருவம்னு அழைச்சிட்டு வரச் சொன்னேன்... என்ன வள்ளியம்மை நீயே விஷயத்த சொல்லேன்...''

செந்தாமரை விழித்தாள். எதைச் சொல்ல இப்படி பீடிகை போடுகிறார் என்று புரியாமல் குழம்பினாள்.

அம்மா எடுத்துக் கொடுக்க வள்ளியம்மை விளக்கினாள்.

சென்னையில் அவள் கணவர் வேலை பார்க்கும் இடத்தில் ரங்கநாதன் என்று ஒரு மேலதிகாரி இருக்கிறாராம். ரொம்ப நல்லவராம். அவர் மனைவியும் ஏதோ ஆபீஸில் வேலை பார்க்கிறாளாம். இரண்டு குழந்தைகளாம். இருவரும் வேலைக்குப் போவதால் வீட்டு வேலைகளையும், குழந்தைகளையும் கவனிப்பது சிரமமாக உள்ளதாம். சின்னதாக ஒரு பெண் வீட்டோடு இருந்து எடுபிடி வேலைகளை கவனித்துக் கொண்டால் வசதியாக இருக்கும் என்று நினைக்கிறார்களாம்.

எங்க அயித்தான் நா ஊருக்குப் பொறப்படறப்போ 'அங்க நல்ல பொண்ணா யாராச்சும் இருந்தா மேனேஜர் வீட்டு வேலைக்கு கூட்டிட்டு வா'னு சொன்னாக... இங்க வந்து ஒம் மகளைப் பாத்ததும் எனக்கு அவுரு சொன்னதுதான் நினைப்புக்கு வந்துச்சு... அயித்தானோட மானேஜர் அம்புட்டு நல்லவரு. நானே பாத்திருக்கேன். நம்பிக்கையான பொண்ணா கிடச்சா தேவலைனு என்னண்டயே சொல்லி இருக்காரு... நீ சரினு சொன்னா நாலு நாள் கழிச்சு நா மெட்ராஸுக்குப் போறப்ப கூட்டிட்டுப் போறேன்..."

கேட்டதை நம்ப முடியாமல் செந்தாமரை திகைத்தாள். விருத்தாம்பாவை இது என்ன புது திருப்பம் என்கிற மாதிரி பார்த்தாள்.

"அப்பவே என்னண்ட சொன்னாங்கதான். கேட்டதும் முதல்ல தாய்கிட்டேயிருந்து பிரிச்சி சின்ன குழந்தைய பட்டணத்துக்கு அனுப்பறது கூடாதுன்னுட்டுதான் பட்டுச்சு... ஆனா, நிதானமா யோசனை பண்ணிப் பார்த்தப்ப, இங்க சும்மா வெட்டியா இருக்கறத்துக்கு

நாலு காசு சம்பாதிக்க முடியும்னா, முக்கியமா சோத்துக்கு பஞ்சம் இல்லாம, வாய்க்கு ருசியா வகை, வகையா தின்ன முடியும்னா அத தடுக்க நாம யாருன்னும் தோணிச்சு. அதான் பெத்தவளே நேரடியா கேட்டு முடிவு பண்ணிக்கட்டும்னு ஒன்னையே கூட்டியாந்தே"

செந்தாமரை மௌனிக்க, வள்ளியம்மை அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"நீ எதுக்கும் கவலை படவேணாம் செந்தாமரை... ஒம் மக பத்திரமா இருக்கறத்துக்கு நா உத்திரவாதம் தாரேன். அவங்க சொந்த பிளாட்டுல வசதியா இருக்கறவங்க... நல்ல வருமானம். விருத்தாம்பா சொன்ன மாதிரி வயிறு முட்ட சாப்பிடலாம் புள்ளைங்கள பாத்துகிட்டு சமையல்கட்டுல எடுபிடி வேல பண்ணா போதும் சாப்பாடு போட்டு, சொந்த மக மாதிரி பாத்துப்பாங்க... மாசம் அம்பது ரூபா சம்பளம் தர்றதாகவும் சொன்னாங்க. யாருக்கோ கிடைக்கப் போற யோகம் நமம் கண்ணம்மாவுக்குப் போகட்டுமேனு நா நினைக்கறேன். யோசிச்சுப் பாத்தா இதுல உள்ள நன்மை உனக்கே புரியும்..."

"இங்க ஒருவேளை சோறு இல்லாம கஷ்டப்படற குழந்தை அங்க போயாவது நல்லா இருக்கட்டுமே செந்தாமர? மாசா மாசம் பணத்த உனக்கு அனுப்பச் சொன்னா உன் செலவுக்கும் ஆகும் இல்ல?"

"அது இல்ல ஆச்சி... வந்து..."

"முதல்ல கஷ்டமாதான் இருக்கும்... ஆனா புள்ளகள வெளியூருக்கு அனுப்பறது ஊர் உலகத்துல நடக்காத விஷயமா?"

"குழந்தைகள பாத்துகிட்டு தனியா கண்ணம்மாவால இருக்க முடியுமா ஆச்சி? இவளே ஒரு விவரம் கெட்டவ..."

வள்ளியம்மை சிரித்தாள்.

"ஓ அதநெனைச்சு கவலைப்படறியா? தனியா இருக்க

வேணாம். ரங்கநாதனைப் பெத்த அம்மா வீட்டோட இருக்குறாங்க... அவங்க வயசானவாங்க... ஒண்டியா கவனிக்க முடியலைனுதான் எடுபிடி வேலைக்கு சின்ன பொண்ணா பாக்கறாங்க...''

செந்தாமரை எச்சிலைக் கூட்டி விழுங்கினாள். குழப்பம் தீராமல் மிரள விழித்தாள்.

அவள் பயம் புரிந்து விருத்தாம்பா சமாதானப் படுத்தினாள்.

''இப்பவே முடிவு செய்யணும்னு கட்டாயம் இல்ல... வீட்டுக்குப் போயி மத்தவங்க கிட்டயும் பேசிப் பாப்பம். சரினு தோணிச்சுன்னா அனுப்பலாம்...மனசு கஷ்டமா யிருந்துச்சுன்னா வேணாம்... அதுக்காக நீ ஒண்ணய கொழப்பிக்காதே...''

மேலே சில நிமிஷங்களுக்கு பட்டணத்துக்கு கண்ணம்மாவை அனுப்புவதில் உள்ள ஆதாயங்களை விலாவாரியாக பேசின பிறகு விடை பெற்று அவர்கள் கிளம்பினார்கள்.

வீட்டுக்கு வந்ததும் விருத்தாம்பா மூத்தார் வீடுகளில் விவரத்தைக் கூற,ஒவ்வொருவராக வந்து''இங்க அல்லாட றதைவிட, அங்க போயி வசதியா இருக்கலாம்' என்றும், 'புள்ளைங்க படிக்கப் போகலியா, அது மாதிரிதான் இதுவும்'' என்றும்,''சும்மா எதுக்கும் ஒதவாம வெட்டியா இருக்கறத விட பட்டணத்துக்குப் போயி நாலு காசு சம்பாரிக்கலாம் — தப்பொண்ணும் இல்ல'' என்றும், ''அதான் வள்ளியம்மை தானே உத்திரவாதம் தர்றதா சொல்லிட்டாங்களே. அப்புறம் தயக்கம் என்ன?''என்றும் தலைக்குத் தலை கருத்து சொல்லிவிட்டுப் போனார்கள்.

ஆயா கொண்டு வந்திருந்த இட்லிகளில் மிஞ்சி இருந்ததை இரவு சாப்பாட்டுக்கு மகளிடம் கொடுத்து விட்டு, அவள் உண்ட நாழிகையில் கண்ணம்மாவிடமே நேரடியாய் செந்தாமரை கேட்டாள்.

''செட்டியார் வூட்டம்மா சொன்னத கேட்டுட்டு இருந்தே இல்லே?''

''ம்''

''வள்ளியம்மை கூட பட்டணத்துக்கு போறியா?'' ஆட்டுகளை விழுங்கின கண்ணம்மா நிமிர்ந்தாள்

''அவுங்க சொன்னமாதிரி மெய்யாலுமே. வேளா வேளைக்கு சோறு போடுவாங்களா?''

செந்தாமரை 'ஆம்' என்றாள்.

''தீவளிக்கு, பொங்கலுக்கு புதுத்துணி எடுத்துத் தருவாங்களா?''?

''ம் ''

''அவங்க பசங்க கூட நா வெளையாடிட்டு இருக்க லாமா?''

''.....''

சிலநொடிகளுக்கு சிந்தனைசெய்துவிட்டு கண்ணம்மா மறுபடி ஆர்வத்துடன் கேட்டாள்.

''அவங்க வூட்டுல டி. வி. பொட்டி இருக்காம்- இல்ல. அதுல வாரா வாரம் படம் பாக்கலாம்னு சொன்னாங் களே, மெய்யாலுமா?''

விவரம் புதிதாக இருக்க, செந்தாமரை புருவங்களை உயர்த்தினாள்.

''யாருடீ சொன்னாங்க?''

''மதியம் ஆயா இட்லி தின்ன கூப்பட வந்தப்போ ஆச்சி கிட்ட நின்னு பேசிகிட்டு இருந்தாங்க. அப்போ சொன்னாங்க; கேட்டேன்...''

செந்தாமரை உதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள்.

''சரி, நா கேட்டதுக்கு பதில் சொல்லு... பட்டணத் துக்குப் போறியா? என்ன வுட்டுட்டு தனியா போயி அங்க நல்ல பொண்ணா இருப்பியா?''

கண்ணம்மா உடனே பதில் பேசாமல் இட்லிகளைத் தின்று முடித்தாள். அப்புறம்- ''நெதைக்கும் சோறு கெடைக்கும், அடிக்கடி படம் பாக்கலாம்-னா போறேன்.

நீதான் இங்க சோறெ தர மாட்டேங்கறியே... போன வருஷம் பொங்கலுக்கு படம் பாத்தது அப்பால எங்க கூட்டிட்டுகிட்டுப் போனே?'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

4

பூப்போட்ட புது சிட்டி பாவாடை, சட்டை, ரப்பர் வளையல், மணிமாலை, எண்ணெய் தடவி படிய வாரிப் பின்னப்பட்ட தலைமுடி, தோட்டத்து கனகாம்பரம் செண்டாய் அதன் உச்சியில், ஒரேஒரு மாற்றுப் பாவாடை சட்டையைஉள்ளடக்கிய துணிப்பை. செட்டியார் மளிகை என்று எழுதப்பட்டிருந்த மஞ்சள் பையை மார்போடு அணைத்தவாறு நின்றிருந்த கண்ணம்மாவின் கண்களில் பட்டணத்திற்குப் புறப்படும் சந்தோஷம் வெளிச்சம் போட்டது. ஆனால், கூட நின்றிருந்த செந்தாமரையின் முகம் அழுது அழுது சிவுசிவுத்திருந்தது.

மகளின் வெளிப்படையான மகிழ்ச்சியைத் தாளமாட்டாமல் ''என்னைய வுட்டுட்டு பிரியறோம்-னு இதுக்கு கொஞ்சமாச்சும் வருத்தம் இருக்கா பாருங்க ஆயா'' என்று பக்கத்தில் இருந்த விருத்தாம்பாவிடம் குறைபட்டுக் கொண்டபோது அவர் ''பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு-னு தெரியாமலா பெரியவங்க சொல்லி வச்சாங்க... ம்ம்... பரவாயில்லை... விடு... இந்த மட்டுக்கும் அவனும் ஒன்னய மாதிரி கலங்கிகிட்டு இல்லாம தெகிரியமா கிளம்பறானே. அத்த நெனைச்சு தேத்திக்க...'' என்று கூறி அவளை அடக்கினார்.

உடையார் தெரு குடும்பங்கள் முச்சூடும் ஒட்டுக்க கண்ணம்மாவை பட்டணத்துக்கு வழி அனுப்பி வைக்க செட்டியார் வீட்டுவாசலில் அந்தகாலை நேரத்தில் குழுமி யிருந்தன.

வள்ளியம்மையை கடலூர் வரையில் அழைத்துச் சென்று, பத்திரமாய் சென்னைக்கு ரயிலேற்றி விடுவதற்காக செட்டியார் ஆயத்தமாக நின்றார். தானை மாடு பூட்டப்பட்ட கண்டு வண்டி கூட சாமான்களை ஏற்றிய தயார் நிலையில் இருந்தது.

''சட்டுபுட்டுனு கெளம்புலியளா? இன்னும் மசமசனு உள்ளார என்ன செய்யறீக? ஆண்டார் முள்ளிப் பள்ளம் வரையில் வண்டில போயி, அங்கிட்டு ஒன்பது மணி ரயில் ஏற முடியும் இம்புறியளா?''

செட்டியார் விரட்டிய விரட்டலில் கலைசியாக தாயிடம் இன்னொரு முறை சொல்லிக்கொண்டு வள்ளியம்மை வண்டியில் ஏறினாள்.

''ம்ம்...கண்ணாம்மாவ ஏந்து...'

ஆச்சி கூற, செந்தாமரை குனிந்து, கையில் பிடித்திருந்த மகளை ஒருதரம் இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

''பத்திரமா போயிட்டு வர்றியா, ராசாத்தி?''

கண்ணம்மா தலையை ஆட்டினாள்.

''அக்கா சொல்ற பேச்ச கேட்டு நடந்துக்க...ஒம் மகசமத்து யாருக்கும் வராது-ஞ அந்த வூட்டுக்காரங்க சொல்லணும் என்ன?''

இதற்கும் அவசரமாய் சம்மதித்துவிட்டு, வண்டியில் ஏறுவதிலேயே அவள் குறியாய் இருக்க, செந்தாமரை மாட்டு வண்டியை நெருங்கி, வள்ளியம்மையிடம் தொண்டை அடைக்கப் பேசினாள்.

''ஒங்களதான் மலையா நம்பிக்கா, இந்த சிறுச அனுப்பறேன். பாத்துக்கங்க...ஒண்ணு கெடக்க ஒண்ணு செஞ்சா மன்னிச்சு, நடந்துக்கற விதத்த சொல்லிக் கொடுங்க...மாசம் ஒரு தபா வெலரமா கடுதாசி போடுங்க...ஒங்க பேச்ச கேட்டுதான்...''

மேலே பேச முடியாதபடி கண்கள் கலங்கி, நீர் வெளிப்படத் தொடங்க, முந்தானையால் செந்தாமரை முகத்தை மூடிக்கொண்டு விசும்பினாள்.

''நீ எதுக்குமே கவலப்படாத... வள்ளியம்மை இருக்கா இல்ல? பொறப்படற நேரத்துல என்ன சின்ன புள்ளையாட்டம்! அங்க பாரு, உம்மக எத்தினி சந்தோஷமா கிளம்பறானிட்டு—முகத்த தொட...சிரிச்சு கிட்டு போயிட்டு வாடி - னு சொல்லு''

கிட்டத்தில் வந்து ஆச்சி தைரியம் கூறிக்கொண்டிருக்கையிலேயே, செட்டியார் ஏறிக்கொண்டு 'கிளம்புடா' என்று உத்தரவிட, வண்டி நகர ஆரம்பித்தது.

வண்டிக்குள்ளிருந்து கண்ணம்மா உற்சாகமாய் குரல் கொடுத்தாள்.

''யம்மா—போயாரேன்— போயாரேன் ஆயா... போயாரேன் பெரியப்பா...பூங்காவனம் போயாரேன்...''

வண்டி கண்களிலிருந்து மறையும்வரை ஒவ்வொருத்தராக பேர் சொல்லி அழைத்து விடை பெற்றுக் கொண்ட கண்ணம்மா, தெருமுனை திரும்பி, செம்மண் சாலையில் வண்டி செல்ற முற்பட்டதும் அருகில் இருந்த வள்ளியம்மையை ஏறிட்டு வெட்கத்துடன் புன்னகைத்தாள். அப்புறம் விழிகளைத் திருப்பி வானத்தையும், மேலே தோன்றி மறையும் மரங்களையும் வேடிக்கை பார்த்தாள்.

சட்டி பானை ஏற்றும் டயர் வண்டியில், ஆகாசமே கூரையாக பயணித்திருக்கிறாளே தவிரவும், கண்ணம்மா இதுவரையில் கூண்டு வண்டியில் சவாரி செய்ததே கிடையாது. இந்தான் முதல் அனுபவம். பின்னந்தலை கூண்டின் மரத்தில் இடிக்க, வண்டியில் பயணம் செய்வது சுகமாக இருந்தது.

617791

மனசு சொல்லத் தெரியாத உற்சாகத்தில் எகிறியது. 'நா பட்டணத்துக்குப் போறேன். அதுவும் கூண்டு வண்டில...அதுமட்டும் இல்ல, டர்ர்ருனு பஸ்ஸுல போப் போறேன்...அப்புறம் நாள் பூரா ரயில்ல...' என்று உரக்க கூவிக்கொண்டு தையா தக்கா என்று குதிக்க வேண்டும் போல இருந்தது. பக்கத்தில் வள்ளியம்மை அக்காவும், செட்டியாரும் இருக்கக் கொண்டு சிரமப்பட்டு பரபரத்த வாயை அடக்கியவாறு தாண்டிக் கொண்டு சென்ற வயக்காட்டில், முந்திரி தோப்புகளில் கவனத்தைச் செலுத்தினாள்.

894.8113 SIV/R1

ரயிலில் இது வரை கண்ணம்மா சவாரி செய்தது கிடையாது. பல்லில் நாலைந்து முறை அவள் சென்றிருக்கிறாள். காற்று முகத்தில் வீசி அடிக்க, ஜன்னலருகில் உட்கார்ந்து பயணிப்பது எத்தனை ஜோராக இருந்தது.

எப்போதோ அப்பாவோடு கடலூருக்குச் சென்றபோது இதுதான் ரயிலு வண்டி ராசாத்தி...ஒரு நா இதுல ஒன்னைய நா கூட்டிட்டு போகலா?' என்று புகை வண்டியைக் காட்டி இருக்கிறார். கறுப்பாய், புகை விட்டுக்கொண்டு, கூ... கூ... என்று கத்திய முதல் வண்டியைத் தொடர்ந்த சிவப்பாய் பல பெட்டிகள் தடதட வென்று ஓடியதைப் பார்க்க வியப்பாகவுருந்தது.

பஸ்ஸை விட ரயில் இன்னும் வேகமாய் செல்லுமா? ரொம்ப வேகமாய்ப் போனால் தலை சுற்றுமோ? அப்பா

வோடு ஒருதரம் ரங்கராட்டினத்தில் சுழன்ற போது வயிற்றைப் பிரட்டிக் கொண்டு வாந்தி எடுக்க வந்ததே! அப்படி ஏடாகூடமாய் வாந்தி வந்து விட்டால் என்ன செய்வது?

கண்ணம்மாவுக்கு திடுமென கவலையாக இருந்தது. ஆனால் அதை மீறிக் கொண்டு ரயிலில் பட்டணம் போகப் போகிறோம் என்கிற சந்தோஷம் மனசுக்குள் ஒரு வானவில்லை எழுப்பியது.

அரை மணியில் அவர்கள் ஆண்டார் முள்ளிப் பள்ளியில் பஸ் ஏறி விட்டார்கள்.

''எதனாச்சும் சாப்பிடறியா?'' என்று கேட்டு, பிளாஸ்டிக் கூடையில் வழி செலவுக்காக அம்மா செய்து வைத்திருந்த முறுக்குகளில் இரண்டு எடுத்து வள்ளியம்மை நீட்ட, அவற்றை வாங்கி கடித்துத் தின்றவாறு பராக்கு பார்ப்பதை கண்ணம்மா தொடர்ந்தாள்.

கடலூர் ஜங்ஷன் சந்தை கூடிவிட்டது போன்ற சந்தடியுடன் இருந்தது. கூட்டம் கூட்டமாய் மனிதர்கள். மூட்டை முடிச்சுகளுடன்...

சென்னைக்குச் செல்லும் ரயில் வந்ததும், செட்டியார் இவர்களை ஒரு பெட்டியில் ஏற்றி, சாமான்களைப் பத்திரமாய் உட்காரும் பெஞ்சுக்குக் கீழ் வைத்தார்.

வண்டி புறப்பட நேரம் இருந்ததால், குளிர் பானங்கள் விற்றுக்கொண்டிருந்த ஆளை அழைத்து, ஆளுக்கொரு புட்டி வாங்கிக் கொடுத்தார்.

கையால் பிடித்துக் கொள்ள முடியாதபடி புட்டி சில்லென்று இருந்தது. அதிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த

காகிதக் குழாய் வழியாக வள்ளியம்மை உறிஞ்சிக் குடிப்பதை கவனித்து விட்டு கண்ணம்மாவும் அதே ரீதியில் குடித்தாள்.

வெயிலுக்கு பானம் அமிருதமாக தொண்டையில் இறங்கியது.

ஸிக்னல் விழுந்ததும் 'பத்திரம்... போயி கடுதாசி போடு' என்று சொல்லி செட்டியார் இறங்கிக் கொள்ள, வண்டி புறப்பட்டு, வேகம் எடுத்தது.

''பசிக்குதா? புளிசாதம் இருக்கு...தரவா?''

கேட்ட கையோடு, கூடையில் செருகியிருந்த இலையைப்பிரித்து, தூக்கிலிருந்த புளிச்சோற்றை வள்ளியம்மை இரண்டு கரண்டி பரிமாறி அவளிடம் நீட்டினாள்.

வயிறு முட்டத் தின்று, தண்ணீரும் குடித்தபிறகு கண்ணம்மா வெட்கத்தோடு ''ஒண்ணுக்கு இருக்கணும்'' என்றாள். மெல்ல, எழுந்து, சற்று தள்ளி இருந்த பாத்ரூம் கதவைத் திறந்து விட்ட வள்ளியம்மை 'போயிட்டு வா, என்று சொல்லி அவளை உள்ளே விட்டு, கதவை வெளியே தாள் போட்டாள்.

சின்னதாக இருந்த அந்த அறையில் ஒரு பக்கமாய் பளபள எவர்ஸில்வரால் ஆனதொட்டி இருந்தது. எதிராய் தரையில் சாண் விட்டத்துக்கு துவாரம்.

எட்டிப்பார்த்த போது தண்டவாளம் அடியில் பரபரவென்று ஓடியது தெரிய கண்ணம்மாவுக்கு தலிப்பாக இருந்தது.

ஒண்ணுக்கு எங்க இருக்கறது? தவறிப் போய் ஓட்டையில் காலை விட்டால் அதோ கதியாகி விடுமோ! யோசிக்க அவகாசம் இல்லாமல் அவசரமாய் வர, நின்ற இடத்திலேயே உட்கார்ந்தாள்.

வண்டி ஓடிய ஆட்டத்தில் ஒட்டைக்குள் விழுந்து விடுவோமோ என்ற கவலை மீண்டும் எழுந்தது. சில்வர் தொட்டியை ஒரு கையால் அழுத்தமாய் பிடித்தவாறு காரியத்தை முடித்தாள்.

தண்ணீர் உபயோகிக்க பைப் மாதிரி நீட்டிக் கொண்டிருந்ததை என்ன திருகியும் சொட்டு நீர் வராமல் போக கால்களை கழுவாமலேயே எழுந்து நின்று "அக்கா, கதவைத் தொறங்க" என்று கதவைத் தட்டினாள்.

மறுபடியும் இருக்கைக்கு வந்து உட்கார்ந்த போது வயிறு நிறைந்திருந்ததில் உறக்கம் கண்களைச் சுழட்டியது. இரண்டு தரம் கண்களைத் தேய்த்து, தூக்கத்தை விரட்டினாள்.

ஜன்னல் கம்பியில் கன்னத்தைப் பதித்துக்கொண்டு வெளிப்பக்கம் பார்வையை வீசினாள்.

தந்திக் கம்பங்கள் தூரத்தில் தெரிந்து, கிட்ட வந்து தள்ளிப் போவது பார்க்க வேடிக்கையாக இருந்தது.

ஏதோ ஊரில் நின்றுவிட்டு வண்டி புறப்பட்டதும், முகத்தை காற்று இதமாக வருடிக்கொடுத்ததில் உட்கார்ந்தபடியே உறங்கிப் போனாள்.

ரயில் தாம்பரம் ஸ்டேஷனை அடைந்ததும் வள்ளியம்மை அவளைத் தட்டி எழுப்பினாள்.

"எந்திரி கண்ணம்மா... நாம எறங்கப் போற ஸ்டேஷன் வரப்போகுது..."

எழுந்து உட்கார்ந்தவள் தலை முடியைக் கோதி விட்டுக் கொண்டாள். மீண்டும் ஒண்ணுக்கு இருக்க வேண்டும் போல தோன்ற, தானே சென்று விட்டு வந்தாள்.

மாம்பலம் வரும் முன்னர் சாமான்களைக் கதவருகில் வள்ளியம்மை கொண்டுவைத்தாள். "ஒரு நிமிஷம்தான் திப்பாட்டுவாங்க—பைய எடுத்துகிட்டு என் பின்னாலயே எறங்கிடு" என, இவளும் அவளை ஒட்டிவந்து நின்றாள்.

முன் கூட்டியே தகவல் தெரிவித்திருந்ததில் மாம்பலம் ஸ்டேஷனுக்கு வள்ளியம்மையின் கணவரோடு, கண்ணம்மாவை அழைத்துப் போவதற்காக ரங்கநாதனும் வந்திருந்தார்.

அவரைப் பார்த்த உடன் அடக்கமாய் "வணக்கங்க" என்ற வள்ளியம்மை பின்னால் ஒண்டிக் கொண்டிருந்த கண்ணம்மாவை முன்னால் இழுத்து "இவதான்" என்றாள்.

"இவுருதான் உன் எஜமானர் அய்யா...கும்பிட்டுக்க" என்றதும், உயரமாய் நின்ற மனிதரை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்த கண்ணம்மா கூச்சத்துடன் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"கிராமத்துலயே பொறந்து வளந்த பொண்ணு இல்லியா, அதான் வெக்கப்படுது" ரங்கநாதன் சிரித்தார்.

"பேரு என்ன?"

"கண்ணம்மா—" என்றாள் வள்ளியம்மை.

சாமான்களைக் கூலி ஆள் தூக்கிக்கொண்டு முன்னே நடக்க, மற்றவர்கள் தொடர்ந்தார்கள்.

வெளியே வண்டிகள் காத்திருந்த இடத்தை அடைந்ததும் ரங்கநாதன் நின்றார்.

"நா இப்படியே இவள கூட்டிட்டு போறேன்...நீங்க வீணா சிரமப்படவேணாம்..."

"இதுல என்னங்க கிரமம்? நாங்க கூட வந்து அம்மா கிட்ட வெவரத்த சொல்லிட்டு..."

வள்ளியம்மையை முடிக்கவிடாமல் ரங்கநாதன் கையை முன்னால் நீட்டித் தடுத்தார்.

"நோ...நோ...எதுக்கு வீண் அலைச்சல்? நீங்க இருக்கறது அண்ணா நகர்ல...நாங்களோ அடையாறுல...இது இந்தக் கோடினா அது அந்தக்கோடி..."

மேனேஜரின் முடிவுக்கு மாற்று சொல்ல முடியாமல் வள்ளியம்மை தயங்கினாள். அப்புறம் 'கண்ணம்மா அய்யாவோட நீ லீட்டுக்குப்போயிடு...நா பொறவு வந்து ஒன்னய பாக்கறேன்—சமத்தா இரு...என்ன?" என்றாள் இவளிடம்.

அருகில் நின்ற மாருதி வண்டியின் பின் கதவைத் திறந்து கண்ணம்மாவை அதில் ஏற்றியதும், ஓட்டுனர் இருக்கையில் ரங்கநாதன் அமர்ந்தார்.

"அப்ப, நா வரேங்...நீங்க செஞ்ச உதவிக்கு,ரொம்ப தாங்க்ஸ்"

"போயிட்டு வரேன்" என்று சொல்லிக்கொள்ளக் கூட வாய் எழும்பாமல் கண்ணம்மா அமர்ந்திருக்க, வண்டி கிளம்பியது.

உஸ்மான் ரோட்டை அடைந்ததும், பின்னால் பார்க்கும் கண்ணாடி வழியாக அவளை ரங்கநாதன் ஏறிட்டு 'மெட்ராஸுக்கு இதுக்கு முன்னால நீ வந்திருக்கியா?" என்று கேட்டு, அதற்கு பதில் கூறாமல் கண்ணம்மா மௌனிக்க, அவள் தயக்கம் புரிந்த மாதிரி மேற்கொண்டு ஏதும் பேசாமல் வீட்டைப் பார்க்க அவர் வண்டியைச் செலுத்த, கண்ணம்மாவுக்கு முதல் முறையாக பயம் காலானாக முளைத்தது.

சாலையில் விரைந்த வாகனங்களும், உயர உயரமான கட்டிடங்களும், திருவிழா போல ஒளிர்ந்த விளக்குகளும், ஜகஜகவென்று எங்கு நோக்கிலும் காணப்பட்ட மக்கள் கூட்டமும், கண்களைக் கட்டிக் காட்டில் கொண்டு விட்ட உணர்வை எழுப்ப அவள் பீதி அதிகமானது.

அம்மாவைப் பார்க்கவேண்டும் போல இருந்தது. சுவர்க்கோழிகள் கத்த, அமைதியாய் இருக்கும் கிராமத்துக்கு ஓடிப் போய்விட்டால் நிம்மதியாக இருக்கும் என்று தோன்றியது. 'என்னை வள்ளியம்மை அக்காகிட்டவே வுட்டுருங்க' என்று கத்த வேண்டும் போலவும் உந்துதல் எழுந்தது.

ஆனால், பயம் எக்கச்சக்கத்துக்கு பீறிட்டு, நாக்கை மேலண்ணத்தில் ஒட்டவைத்து விட்டதில் நினைத்தது எதையுமே வெளியில் சொல்ல முடியாமல்போய், பையை மார்போடு அணைத்து, கண்களை இறுக மூடிக் கொள்வதை மட்டும்தான் அவளால் செய்ய முடிந்தது.

5

முதல் மூன்று நாள்களுக்கு எல்லாமே அமர்க்கள மாகத்தான் இருந்தது.

கண்ணம்மா சென்னைக்கு வந்தது ஒரு வியாழக் கிழமை மாலை, மறுநாள் அபசாங்க விடுமுறை தினமாக அமைத்து, தொடர்ந்து வந்த நாள்களும் சனி, ஞாயிறாக இருந்து விட்டதில் வேலைக்குச் செல்லும் ரங்கநாதனும், அவர் மனைவி ரோகிணியும் வீட்டில் குழந்தைகளோடு உல்லாசமாக பொழுதைக் கழிக்கத் திட்டமிருந்ததில், அந்த மூன்று நாள்களும் கண்மூடித் திறக்கும் நாழிகையில், பலவிதமான புது அனுபவங்களைக் கொடுத்து, கண்ணம்மாவை சந்தோஷ மயக்கத்தில் ஆழ்த்தியது உண்மை.

ஆறுமாடி கட்டிடத்தில் இருந்த வீட்டுக்குச் சென்று இறங்கினதுமே முதல் கிறுகிறுப்பு கண்ணாம்மாவுக்கு லிஃப்ட் ரூபத்தில் கிட்டியது.

"வா" என்று சொல்லி முன்னே நடந்தவரின் பின்னால் முயல்குட்டி மாதிரி பதுங்கிக் கொண்டு சென்ற வளை முதல் தளத்தில் இருந்த சின்ன அறை மாதிரியான ஒன்றில் நிற்க வைத்து, கம்பிக் கதவுகளை மூடி, சுவரில் இருந்த பொத்தானை அழுத்த—

"அய்யோ"—என்றாள் கண்ணம்மா வாய்விட்டு...

என்ன அதிசயம் இது! இவர்கள் நின்ற இடத்திலேயே நிற்க, ஒவ்வொரு மாடியாக இவர்களைத் தாண்டிக் கொண்டு போகிறதே!

அடிவயிற்றில் 'ஜில்'வென்ற ஒருவித உணர்வு எழ, திகைப்பு மாறாமல் நின்றிருந்தவளை ஏறிட்டு ரங்கநாதன் சிரித்தார்.

"இதுக்கு பேர் லிஃப்ட்...நம்ம வீடு நாலாவது மாடில இருக்கு...மாடிப்படில ஏறி அவஸ்தைப் படவேணாம், இதுல ஏறி நின்னு பட்டன தட்டினா, தானா நாலாவது மாடிக்கு கொண்டு விட்டுடும்..."

இப்போது அவர் பேசினது அவ்வளவாக பயத்தை உண்டு பண்ணாமல் இருந்ததில் வெட்கத்துடன் கண்ணம்மா புன்னகைத்தாள்.

சன்னமான குலுக்கலுடன் லிஃப்ட் நின்றதும், கம்பிக் கதவுகளைத் திறந்து அவளை வெளியே அழைத்துச் சென்றவர், வலப் பக்கம் இருந்த கதவிடம் சென்று அழைப்பு மணியை அழுத்தினார்.

எங்கோ 'டிங்டாங்' என்று வினோதமான இசை எழும்பியது கண்ணம்மாவுக்குக் கேட்டது.

சில நொடிகளில் ஒரு பெண்மணி கதவைத்திறந்தாள்.

எதிரில் உயரமும், அதற்கேற்ற வாளிப்பான உடல் வாகுமாய் பளிச்சென்று நின்றவளைப் பார்த்தபோது கண்ணம்மாவுக்கு முன்பு ஒரு படத்தில் பார்த்திருந்த நடிகை சுஜாதாவின் நினைப்பு வந்தது.

அய்! எனிமா நடிகை வீட்டுக்கா வேலைக்கு வந்திருக்கிறோம்!

ஒரு நொடிக்குள் என்னென்னவோ சந்தேகங்கள்.

"ரோகிணி... இதுதான் கண்ணம்மா... பத்திரமா கூட்டிவந்து உன்னண்ட ஒப்படைச்சிட்டேன். கண்ணம்மா இதுதான் உங்க எஜமானியம்மா..."

அறிமுகம் செய்ததோடு தன்கடமை முடிந்த நிறைவில் விளிலடித்தவாறு அவளைத் தாண்டிக் கொண்டு உள்ளே ரங்கநாதன் செல்ல, ரோகிணி ஸ்னேகிதத்துடன் கண்ணம்மாவைப் பார்த்து சிரித்தாள்.

சிரிக்கும்போது வலக் கன்னத்தில் குழி விழுந்தது.

சுஜாதாவுக்குக் கன்னத்துல குழி விழாதே! ஸ்ரீப்ரியாவுக்குத் தானே விழும்! வித்தியாசமான பேரைச் சொல்லி அய்யா கூப்பிட்டாரே! அப்படியென்றால் இவர் நடிகை இல்லையா!

திகைத்து நின்றவளின் கையை எட்டி ரோகிணி பிடித்துக் கொண்டாள்.

"உள்ளே வா...ஏன் அப்படி பார்க்கறே?"

தயக்கத்தோடு உள்ளே வந்த கண்ணம்மா, சுற்றிலும் ஒருதரம் பார்த்தாள்.

சினிமா படத்தில் பார்க்கிற மாதிரியே வீடு அலங்காரமாய் இருந்தது. விட்டத்திலிருந்து தொங்கின கொத்து விளக்கு. செட்டியார் வீட்டில் இருப்பது போலவே காற்றாடி...திண்டுகள் வைத்து தைத்த நாற்காலிகள்... பளபளவென்று மின்னிய தரையை மறைத்த பூப்போட்ட விரிப்பு...ஒரு பக்கமாய், சதுரவடிவில் இருந்த பெட்டியின் திரையில் 'ராஜா கைய வச்சா' பாட்டை கமல் பாடிக் கொண்டிருந்தார்.

ஆத்தாடி! அதுதான் டி.வி. பெட்டியா?

ஆச்சர்யம் முகத்தில் அப்பட்டமாக வெளிப்படநின்றவளின் நிலைமையை ஊகிக்க முடிந்தவளாய், ரோகிணி உரக்க சிரித்தாள்.

"என்ன அப்படியே நின்னுட்ட! அதான்டி.வி. நீ இது வரைக்கும் டி.வி. பார்த்ததே இல்லியே?"

கண்ணம்மா இல்லை. என்று தலை அசைத்தாள்.

"அதனால் என்ன? இங்க இனமும் சாயங்காலம் பார்க்கலாம்...வா..."

அவள் முன்னே நடக்க, பையை அணைத்தவாறு கண்ணம்மா தொடர்ந்தாள்.

"இதான் சமையல்கட்டு...இந்த அலமாரி அடித்தட்டுல உன் பைய வச்சுக்க..."

அவள் காட்டிய இடத்தில் பையை வைத்தாள்.

"காபி சாப்பிடறியா?"

"வாணாம்...ரயில்ல வர்றப்ப அக்கா சாப்பாடு கொடுத்தாங்க..."

"பரவாயில்ல...குடி..."

அடுப்பிலிருந்த பாலில் கொஞ்சம் எடுத்து முக்கால் டம்ளர் காபி கலந்து அவளிடம் ரோகிணி நீட்ட, வாங்கிக் கொண்டாள்.

"அப்படி ஓர் ஓரமாய் உட்கார்ந்து குடி...காலி டம்ளரை இந்த எங்குல கழுவி, இங்க கவித்திடு..."

தான் பேசியது அவளுக்கு விளங்கவில்லை என்பதை கண்ணம்மாவின் திருதிருப்பலிருந்து புரிந்து கொள்ள முடிய ரோகிணி சிரித்தாள்.

''சிங்க்-னா விளங்கலியா? இந்தத் தொட்டிக்குப்பேர் தான் 'சிங்க்' குழாயைத் திறந்தா தண்ணி வரும். இந்த ரப்பரை சோப்புல நனைச்சு, தேய்ச்சு, கழுவு...இப்ப புரியுதா?''

புரிகிறது என்று கண்ணம்மா தலை ஆட்டினாள்.

அவளை சில நிமிஷங்களுக்குத் தனியாக விட்டுவிட்டு மீண்டும் சமையலறைக்கு ரோகிணி வந்தாள்.

''குடிச்சியா?''

''ஆச்சும்மா.''

''டம்ளரைக் கழுவிட்டியா?''

''ஆச்சும்மா''

''ஓட்...இப்ப என் கூட வா...மத்த அறைகளக் காட்டறேன்...''

முன் அறைக்கு வந்தார்கள்.

''இது டைனிங் ரூம்...அதாவது சாப்பாட்டுக்கூடம்... மேஜைல உட்காந்துகிட்டுதான் நாங்க சாப்பிடுவோம். இந்த அலமாரில இருக்கறது எல்லாம் பீங்கான் பாத்திரங்க...உனக்கு பீங்கான் பழக்கமா? இல்லியா? சரி பரவாயில்ல, போகப் போக பத்திரமா கையாளறது எப்படினு தெரிஞ்சுப்பே...சோபா போட்டுருக்கற அறை தான் ஹால்—தினமும் காலைல எழுந்து கண்ணாடி முக்காலி, நாற்காலிகள தட்டி சுத்தம் பண்றது உன் வேலை...வாசக்கதவு மணி அடிச்சா இங்க கேக்கும்...கதவ இப்படி திறக்கணும்...இது எங்க ரூம்...இது எங்கபாத்ரூம் இது பாலு தம்பியோட அறை களேபரமாதான் வச்சுப்பான். அவன் ஸ்கூலுக்குப் போனதும் நீ இதை

'க்ளின்' பண்ணனும். இதக்கறப்போ உள்ள வந்து தேன்னா, ஹாய், ஊய்லு கத்துவான்...அங்க ஒரு கதவு மூடியிருக்கே, அதுதான் பெரியம்மா ரூம்...அய்யால பெத்த அம்மா...அவங்க இப்ப இங்க இல்ல. மக வீட்டுக்குப் போயிருக்காங்க...ஞாயித்துக்கிழமை வந்திடுவாங்க. அவங்க அறைல சாமி படங்கள் இருக்கு...அவங்களா கூப்டாலொழிய நீ உள்ளே போயிடாத...சமையல் அறைக்கு பக்கத்துல வராந்தா இருக்கு...அங்கதான் துணி உலர்த்தணும்...அம்மி, ஆட்டுக்கல் கூட அங்கதான் இருக்கு...என்ன, ஒரு மாதிரி இந்த வீட்டுல எங்கங்க என்னென்ன இருக்குனு விளங்கிச்சா?''

எஜமானி பேசியதில் பாதிக்கு மேல் விளங்காவிட்டாலும், பொதுவாக கட்டில்கள் இருப்பது படுக்கை அறை. துணிகளை எங்கேயோ காயப் போட வேண்டும் என்பது போன்ற விவரங்களைப் புரிந்து கொள்ள முடிய கண்ணம்மா பலமாகத் தலையை ஆட்டினாள்.

''நீ சமையல்கட்டுலியே தங்கிக்க பின் வராந்தால ஒரு டாய்லட் இருக்கு...அத நீ உபயோகப்படுத்திக்கலாம்...அப்புறம்...'' பேசிக் கொண்டே போன ரோகிணி நிறுத்தி, 'டாய்லட்'னா என்னனு தெரியுமா?'' என்று வினவ, கண்ணம்மா விழித்தாள்.

''ஒரே இங்க்லீஷ் வார்த்தை கூட தெரியாதா? ஆமா. நீ எத்தனாவது வரை படிச்சிருக்கே?''

கண்ணம்மா பதில் கூறாது நின்றாள்.

''பள்ளிக்கூடத்துக்கே போனதில்லையா?''

''இல்ல''

''ஏன் வீட்டுல அனுப்பலியா?''

''பள்ளி பாளையத்துல இஸ்கோல் கிடையாது. ஆண்டார் முள்ளிப்பள்ளம் வரைக்கும் நடந்து போய் படிச்சாதான் உண்டு...அம்மாந்தூரம் எப்படி போயிட்டு வர்றதுனு எங்க அப்பாரு என்னய அனுப்பல...''

ரோகிணிக்கு பாவமாக இருந்தது. கண்ணம்மாவைப் பற்றின விவரங்கள் ஓரளவுக்கு கடிதத்தின் மூலம் வள்ளியம்மை தெரிவித்திருந்தாலும், இத்தனை விவரமறியாத பெண்ணாக இருப்பாள் என்று எதிர்பார்க்கவில்லைதான்.

''பரவாயில்லை...எனக்கு ஒழிஞ்சப்போ உனக்கு நா எழுத படிக்க கத்துத் தரேன்...ரயில்ல வந்தது அலுப்பா இருக்குமே...குளிக்கறியா?''

''வாணாம்... காலைலியே வெள்ளன எழுந்து எங்கம்மாவோட உப்பணாருக்குப் போயி குளிச்சிட்டேன்.''

''சரி—பாத்ரூம் போகணுமா?''

''அ?''

அதை எப்படி விளக்குவது என்று புரியாததால் பின் வராந்தாவுக்குச் சென்று டாய்லட்டின் கதவைத் திறந்து கண்ணம்மாவுக்கு ரோகிணி காட்டினாள்.

''இதான் டாய்லட். பாத்ரூம் போகணும்னா இங்க போய்க்க... போயிட்டு, நிறைய தண்ணி விட்டுட்டு வரணும்...நாத்தமா இருந்தா பெரியம்மாக்கு பிடிக்காது புரியுதா?''

இந்த மாதிரி கக்கூஸை வள்ளியம்மை வீட்டில் கண்ணம்மா பார்த்திருந்ததால், புரிந்து கொண்டாள்.

''பாத்ரூம் போகணும்னா போயிட்டு, கை, கால கழுவி கிட்டு. ஹால்ல வந்து உட்கார்ந்து டி.வி. பாரு. நா சமையலை முடிச்சிட்டேன். பாலு விளையாடப் போயிருக்கான். வந்ததும் சாப்பிட்டுட்டு, ஒழிக்கற வேலைய பார்க்கலாம்...''

கண்ணம்மா டி. வி, முன் உட்கார்ந்ததும் ரோகிணி படுக்கை அறைக்குச் சென்றாள்.

டி.வி.யில் பந்தை வைத்துக்கொண்டு குழந்தைகள் விளையாடின...கையில் ஒரு புட்டியை ஏந்தியபடி யாரோ என்னமோ சொன்னார். ஆணும் பெண்ணும் பல் தேய்ப்பதையும், பசை, பல் தேய்க்கும் குச்சியையும் காட்டினார்கள்.

நொடிப் பொழுதில் காட்சி மாறி, தொடர்பு இல்லாமல் விளம்பரங்கள் வந்ததை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அத்தனையும் கண்ணம்மாவுக்கு ரசித்தது.

அடேங்கப்பா! இத்தனை பேரும் இந்த சின்னப் பெட்டிக்குள் எப்படி வந்து போகிறார்கள் என்று மலைப்பாக இருந்தது. இவர்கள் யார்? எங்கேயிருந்து வருகிறார்கள்? எப்படி மறைந்து போகிறார்கள்—என்று எஜமானி அம்மாவைக் கேட்க வேண்டும் போல ஆசை எழுந்தது. வந்த அன்றே வேண்டாம், இதுகூட தெரியலையா :உனக்கு? சரியான பட்டிக்காடு—என்று கேலி காட்டுவார்களோ என்கிற தயக்கம் எழுந்ததில் நினைப்பை மாற்றிக்கொண்டு டி.வி.யைக் கண் எடுக்காமல் பார்த்தாள்.

பத்து நிமிஷங்களில் உள்ளே குழந்தையின் அழுகுரல் கேட்டது.

பற்றிப் பேசிக் கொள்வதை ஊகிக்க முடிய, கண்ணம்மாவுக்கு சங்கடமாயிருந்தது.

'ப்ஷு' என்று ஆயாசப் பெருமூச்சு விட்ட பாது சோபாவில் உட்கார்ந்து "பசிக்கிறது, மம்மீ..." என்றாள்.

"இதோ வந்திட்டேன்...உனக்காக "புலால்" செஞ்சு வச்சிருக்கேனே! கண்ணம்மா, நீ போய் சமையல் அறை லேந்து தட்டு, டம்ளர், மூணு எடுத்து டேபிள்ல வை..."

கண்ணம்மா உள்ளே வந்தாள்.

தட்டுகள் எங்கே இருக்கின்றன என்று புரியவில்லை. மேடை மேல், கீழே... ம்ஹூம்... அலுமினிய சட்டி, தோசைக்கல் இருந்தவரை ஒழிய, தட்டுகளையோ, டம்ளர்களையோ காணோம்.

அவள் குழப்பத்தோடு நிற்கும் போது ரோகிணி உள்ளே வந்தாள்.

"அந்த அலமாரியைத் திற... அது இல்ல... அது... அ... உள்ளே தட்டு இருக்கா? மூணு எடு...டம்ளர், டபரா இங்கே இருக்கும்... இந்த ட்ராயர்ல கரண்டிகள்... புரிஞ்சுதா? கொண்டு போய் மேஜை மேல் வை..."

எடுத்துச் சென்றவற்றை சரியாக வைக்கத் தெரியாமல் மேஜையிடம் கண்ணம்மா விழிக்க, அவள் கையிலிருந்தவற்றை வாங்கி, ஒவ்வொரு நாற்காலிக்கு முன்பும் ஒரு டம்ளரை ரோகிணி வைத்தாள்.

காஸ் அடுப்பை மூட்ட இரண்டு முறை கற்றுத் தந்தும், கண்ணம்மாவால் குமிழைத் திருகிக் கொண்டே லைட்டரால் ஏற்ற முடியவில்லை. இதை அழுத்தினால், அதைத் திருக வராமல் போயிற்று.

"ரெண்டு நாள் பழினா வந்திடும். ஆனா அடுப்பத்தாம இத்தப் பிடிய மட்டும் திருவே திருகாதே— நிறத்த சூழாய் வழியாக கால் வெளியாவிடுச்சன்னா மூச்ச மூட்டி செத்துருவே...இல்லேன்னா, வீடே நீப்பிடிச்சு லெடிச்சுடும். புரியுதா?"

புரியவில்லை. ஆனால் அவள் சொன்னவிதம் பயத்தைத் தெளிப்பியது. உதட்டைக் கடித்துக்கொண்டு கும்மா நின்றாள்.

பதார்த்தங்களை சூடு பண்ணி, டேபிள் மேல் கொண்டு வைத்ததும், ரங்கநாதன், ரோகிணி, பாது மூவரும் ஒன்றாய் அமர்ந்து சாப்பிட்டபோது "நீ சமையல் அறைல இரு...ஏதாவது வேணும்னா கூப்பிடறேன்" என்று சொல்லி அவளை உள்ளே அனுப்பி விட்டாள்.

அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும், தனியாள் டேபிளைத் துடைக்கவும், பாத்திரங்களைக் கழுவவும் ரோகிணி சொல்லிக்கொடுத்தாள். சோப்பு நுரை தடவிய பாத்திரங்கள் கையைவிட்டு நழுவாமல் கழுவுவது கஷ்டமாக இருந்தது.

சமையல் கட்டை ஒழித்த பின்பு கொஞ்சம் புலவு, குர்மாவோடு வெறும் சாதம் மோரையும் ஒரு தட்டையும் அவளிடம் தந்து "நீ சாப்பிட்டு, இந்த பாத்திரங்களையும் கழுவி வச்சிடு. அப்புறம் பாய், தலகாணி தரேன். இங்கே தனியா படுத்துக்க பயமா இருந்தாலுன்னா, கூடத்துல ஒரு பக்கமா படுத்துக்க" என்று சொல்லிவிட்டு ரோகிணி போனாள்.

புலவு கமகமவென்று மணத்தது. இராட்சையும் முந்திரி பருப்பும், நெய்யும் வாயில் போட்ட உடனேயே நீரை சுரக்க வைத்தன.

பற்றிப் பேசிக் கொள்வதை ஜீரணிக்க முடிய, கண்ணம்மாவுக்கு சங்கடமாயிருந்தது.

'ப்ஷு' என்று ஆயாசப் பெருமூச்சு விட்ட பாலு சோபாவில் உட்கார்ந்து ''பசிக்கிறது, மம்மீ...'' என்றான்.

''இதோ வந்திட்டேன்...உனக்காக ''புலாவ்'' செஞ்சு வச்சிருக்கேனே! கண்ணம்மா, நீ போய் சமையல் அறைலேந்து தட்டு, டம்ளர், மூணு எடுத்து டேபிள்ல வை...''

கண்ணம்மா உள்ளே வந்தாள்.

தட்டுகள் எங்கே இருக்கின்றன என்று புரியவில்லை. மேடை மேல், கீழே... ம்ஹூம்...அலுமினிய சட்டி, தோசைக்கல் இருந்தனவே ஒழிய, தட்டுகளையோ, டம்ளர்களையோ காணோம்.

அவள் குழப்பத்தோடு நிற்கும் போது ரோகிணி உள்ளே வந்தாள்.

''அந்த அலமாரியைத் திற...அது இல்ல...அது...அ... உள்ளே தட்டு இருக்கா? மூணு எடு...டம்ளர், டபரா? இங்கே இருக்கும்... இந்த ட்ராயர்ல கரண்டிகள்... புரிஞ்சுதா? கொண்டு போய் மேஜை மேல் வை...''

எடுத்துச் சென்றவற்றை சரியாக வைக்கத் தெரியாமல் மேஜையிடம் கண்ணம்மா விழிக்க, அவள் கையிலிருந்தவற்றை வாங்கி, ஒவ்வொரு நாற்காலிக்கு முன்பும் ஒரு டம்ளரை ரோகிணி வைத்தாள்.

காஸ் அடுப்பை மூட்ட இரண்டு முறை கற்றுத் தந்தும், கண்ணம்மாவால் குமிழைத் திருகிக் கொண்டே லைடடரால் ஏற்ற முடியவில்லை. இதை அழுத்தினால், அதைத் திருக வராமல் போயிற்று.

''ரெண்டு நாள் பழகினா வந்திடும். ஆனா அடுப்ப ஏத்தாம இந்தப் பிடிய மட்டும் நிருகவே திருகாதே— திறந்த குழாய் வழியாக காஸ் வெளியாயிடுச்சுன்னா மூச்சு முட்டி செத்துருவே...இல்லேன்னா, வீடே நீப்பிடிச்சு வெடிச்சுடும். புரியுதா?''

புரியவில்லை. ஆனால் அவள் சொன்னவிதம் பயத்தைக் கிளப்பியது. உதட்டைக் கடித்துக்கொண்டு சும்மா நின்றாள்.

பதார்த்தங்களை சூடு பண்ணி, டேபிள் மேல் கொண்டு வைத்ததும், ரங்கநாதன், ரோகிணி, பாலு மூவரும் ஒன்றாய் அமர்ந்து சாப்பிட்டபோது ''நீ சமையல் அறைல இரு...ஏதாவது வேணும்னா கூப்பிடறேன்'' என்று சொல்லி அவளை உள்ளே அனுப்பி விட்டாள்.

அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும், துணியால் டேபிளைத் துடைக்கவும், பாத்திரங்களைக் கழுவவும் ரோகிணி சொல்லிக்கொடுத்தாள். சோப்பு நுரை நடுவிய பாத்திரங்கள் கையைவிட்டு நழுவாமல் கழுவுவது கஷ்டமாக இருந்தது.

சமையல் கட்டை ஒழித்த பின்பு கொஞ்சம் புலவு, குர்மாவோடு வெறும் சாதம் மோரையும் ஒரு தட்டையும் அவளிடம் தந்து ''நீ சாப்பிட்டு, இந்த பாத்திரங்களையும் கழுவி வச்சிடு. அப்புறம் பாய், தலைகாணி தரேன். இங்கே தனியா படுத்துக்க பயமா இருந்ததுன்னா, கூடத்துல ஒரு பக்கமா படுத்துக்க'' என்று சொல்லிவிட்டு ரோகிணி போனாள்.

புலவு கமகமவென்று மணத்தது. தராட்சையும் முந்திரி பருப்பும், நெய்யும் வாயில் போட்ட உடனேயே நீரை சுரக்க வைத்தன.

அவர்கள் வீட்டில் தினமும் மோர் சாப்பிடுவது இடையாது, என்றைக்காவதுதான். அதுவும் இரவு நேரத்தில் கண்டிப்பாய் சாப்பிடும் வழக்கமே இல்லை. என்றாலும் எஜமானி தந்த மோரை சோற்றில் ஊற்றி ஊறுகாயைத் தொட்டுக் கொண்டு சாப்பிட்டான். அதில் மாய் இருந்த மோரைக் குடித்து சத்தமாய் ஏப்பம் விட்டாள்.

லகை வகையாய் சாப்பிடலாம் என்ற வள்ளியம்மை அக்கா சொன்னது எத்தனை சரி என்கிற எண்ணம் சந்தோஷத்தைத் தந்தது.

ஈவலை முடிந்து, பாய், தலைகாணியுடன் கூடத்தில் படுத்த போது ஒரு நிமிஷம் அம்மாவைக் கட்டிக்கொண்டு உறங்கும் சுகத்துக்காக மனசு ஏங்கியது. ஆனால், புலால் வாசனையில் மணத்த கையை ஒருதரம் முகர்ந்து பார்த்த போது. அந்த ஏக்கம் தானாய் மறைய, கண்களை மூடிக் கொண்டாள்.

மறுநாள் காலையிலிருந்தே ரோகிணி அவளுக்கு தூசி தட்டுவது, பெருக்குவது, பாத்ரூம் கழுவுவது, காஸ் அடுப்பு மூட்டுவது, குக்கர் வைப்பது போன்ற பல விஷயங்களைப் பொறுமையுடன் கற்று தந்ததும், கிராமத்தில் வளர்ந்ததோடு, பொறுப்பாக எந்த வேலையும் செய்யும் பழக்கம் இல்லாமல் இருந்ததில், பாதிக்குமேல் எதையும் கண்ணம்மாவால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. அதற்காக ரோகிணி அவளை கோபிக்கவில்லை அசமந்தமாக இருக்கிறாளே, என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டவள், சின்னப்பெண், கொஞ்சம் பழகினால் தேறிவிடுவாள் என்று தனக்குத்தானே தேற்றிக் கொண்டாள்.

சனிக்கிழமை நான்கு மணி சுமாருக்கு கண்ணம்மாவையும் அழைத்துக் கொண்டு ரோகிணி காய்கறி மார்கெட்டுக்குப் போனாள்.

லிஃப்டில் இறங்கிய போது அடிவயிற்றில் மறுபடியும் ஜில்லென்று உணர்வு உண்டாகி மயக்கியது.

"நீ தனியா வந்தேன்னா. மறக்காம ரெண்டு கதவுகளையும் சாத்திட்டு வா... இல்லாட்டி லிஃப்ட் மேல, கீழ போகாது. மத்த வீட்டுக்காரங்க திட்டுவாங்க" என்று ரோகிணி சொல்லிக் கொடுத்ததை கவலமாய் கேட்டுக் கொண்டாள்.

மதிய நேரங்களில் சும்மா இருக்கும்போது லெறுமனே மேலும், கீழுமாய் இதில் போகலாமோ! பறக்கிற மாதிரி...

இப்படி ஒரு பறக்கிற கூண்டு இருப்பதைப் பூங்காவனம், முத்தாயி, துரை, செல்வத்திடம் சொன்னால் 'ஆ?' என்று கண்களை விரித்துக் கொண்டு வாயைப் பிளப்பார்கள்—நிச்சயம்.

வரிசைக்கு இருந்த காய்கறி கடைகளில் வேண்டியதை ரோகிணி வாங்க, கண்ணம்மா பைகளைத் தூக்கிக் கொண்டு வந்தாள்.

வீட்டுக்கு வந்த பிறகு பிள்ளைகளையும் கண்ணம்மாவையும் கூட்டிக்கொண்டு பீச்சுக்குக் கணவனும் மனைவியும் போனார்கள்.

'அவ பக்கத்துல உக்கார மாட்டேன்—ஷி ஸ்மெல்ஸ் டர்டி' (அவள் அழுக்காக இருக்கிறாள்) என்று பாலு அடம் பண்ணியதும், 'அப்படி சொல்லக் கூடாது' என்று அதட்டி விட்டு, முன்னால் அவளை உட்காரச் சொல்லி ரோகிணி தான் பின் இருக்கையில் அமர்ந்தாள்.

பீச்சில் கொஞ்ச நேரம் விளையாடினார்கள். வீட்டுக்கு வரும் வழியில் கடையில் நிறுத்தி ரங்கதாதன் ஆளுக்கொரு ஐஸ்க்ரீம் வாங்கித் தந்தார், கண்ணம்மாவுக்கும் ஒன்று.

கூம்பு மாதிரி இருந்த கோன் ஐஸ்க்ரீமை தின்னத் தெரியாமல், கையில் வழிய கண்ணம்மா நின்றதும் பாலு அவளைக் கேலி பண்ணிச் சிரித்தான்.

''பாலு சாப்பிடற மாதிரி நீயும் சாப்பிடு... கோன் பிஸ்கட்டால் செஞ்சது... அதையும் கடிச்சு தின்னு... நல்லாயிருக்கா?''

ரோகிணி சொல்லிக் கொடுத்த சினுசில் கோன் ஐஸ்க்ரீமைத் தின்பதற்குள் கண்ணம்மா திண்டாடிப் போனாள். ஆனால், ஐஸ்க்ரீமின் ருசி நாக்கில் ஏறி தலையைக் கிறுகிறுக்க வைத்தது.

கிராமத்தில் திருவிழா நடக்கும் போது அவள் குச்சி ஐஸ் சாப்பிட்டிருக்கிறாள். ஆனாலும் இது வெகு ஜோர். என்ன இருந்தாலும், பட்டணம், பட்டணம்தான்!

இரவு தூங்கும் போது சினிமாவில் வருகிற மாதிரி கனவு காட்சிகள் கலர் கலராய்த் தோன்ற, மறுநாள் காலை எழுந்தவள் மிகவும் உற்சாகமாய் இருந்தாள்.

அன்றைய பொழுதும் திரும்பிப் பார்ப்பதற்குள் ஓடிற்று. டி.வி.யில் திரைமலர், நாடகம், புரியாத மொழிகளில் நிகழ்ச்சிகள், மாலையில் தமிழ்ப் படம் என்று கண்ணை எடுக்க விடாமல் கண்ணம்மாவின் பரவசத்தை அதிகப்படுத்தின.

படத்தைப் பார்த்த தருணத்தில் அம்மாவும் வேண்டாம், அந்த கிராமமும் வேண்டாம்—இதுதான் சொர்க்கம்—என்று மனசு குதித்துக் கொண்டே இருந்தது.

சாப்பிட உட்கார்ந்த போது வாசல் மணி பாடியது.

கதவைத் திறந்த ரோகிணி 'வாங்கத்தே உங்களத் தான் எதிர்பார்த்துக்கிட்டே இருக்கோம். ஸரஸா வீட்டுல

எல்லாரும் நல்லா இருக்காங்களா? உங்கள விட்டுட்டு வாசலோட போயிட்டாங்களா? உள்ளவந்திருக்கலாமே?' என்று வரவேற்க, தாட்டியாய், தலை நரைத்திருந்த வயசான பெண்மணி ''எங்க? மாப்பிள்ளைக்கு வெளிநாட்டுல டின்னர்—கார் உடனே தேவைப்பட்டுச்சு...'' என்று பதில் கூறிய வண்ணம் உள்ளே வந்தார்.

பாலு 'பாட்டீ' என்று கத்திக் கொண்டு ஓடி, அவரைக் கட்டிக் கொண்டான்.

''மூணு நாளா நீ இல்லாம 'போர்' அடிச்சுது பாட்டீ... ராத்திரி தூங்கறதுக்கு முன்னால நீ கதை சொல்ற மாதிரி அம்மா சொல்லமாட்டேங்கறா...''

'உன்னைப்பிரிஞ்சு என்னாலயும் இருக்கமுடியலைப்பா ராஜா'' என்றவாறு அவனைக் கட்டி முத்தமிட்ட பாட்டியின் பார்வையில் ஓரத்தில் நின்றிருந்த கண்ணம்மா விழ, ''இது யாரு, புதுசா?'' என்றார் லேசான திடுக்கிடலுடன்.

''வள்ளியம்மை கூட்டி வர்றதா லெட்டர் போட்டாளே, அந்தப் பொண்ணு அதே... பேரு கண்ணம்மா...''

பாட்டி கண்ணாடியை இறக்கிக்கொண்டு மேலும் கீழுமாய் அவளைப் பார்த்தபடி, அப்புறம் ''ஏய், குட்டி... இங்க வா'' என்று அதட்டினார்.

அதுதான் ஆரம்பம்.

கண்ணம்மா என்று கூப்பிடுவது மறைந்து எல்லாரும் 'குட்டீ' என்று அழைப்பதற்கும், மூன்று நாள்களாய் 'பட்டணம் நல்லா இருக்கு' என்று மனசுக்குள் கண்ணம்மா மகிழ்ந்தது துளித் துளியாய் குறைந்து, பத்து நாள்கள் செல்வதற்குள் அடியோடு மறைவதற்குள், அதுதான், அந்த அதட்டல்தான் பிள்ளையார் சுழி போட்டது.

6

"ஏ...குட்டூ... எத்திரு. நல்லா தூங்கற எருமை மாடாட்டம்...எத்திருடூ...ஒரு நாளப் போல உன்னோட மல்லுகட்டவே பொழுது சரியாயிருக்கு...போய் பால் பாக்கெட்டுகள வாங்கிட்டு வா...நீ ஆடி அசைஞ்சுகிட்டு போறதுக்குள்ள அவன் 'பூத்'தை மூடிட்டு போயிடப் போறான்...பாய சுருட்டி வையேண்டூ...அதுக்கொருதரம் தனியா சொல்லணுமா? சோம்பேறிக் கழுத...மசமசனு நிக்காதே...போ..."

ஆரம்பித்து விட்டால் இனி ராத்திரி படுக்கும் வரை இதே விரட்டல்தான்.

"பாத்திரம் தேய்ச்சு வச்சிருக்கற அழகப்பாரு... இதாலயே உன் முகரக்கட்டைய இடிக்கலாம் போல இருக்கு...துணிக்கு சோப் போடறியா, இல்ல சோப்ப தண்ணில கரைச்சிட்டு அப்படியே குமுக்கி வச்சிடறியா? செஞ்சாலும் செய்வே... அமுக்கி பிடிச்சகோட்டானாச்சே நீ! என்னடூ வளத்திருக்கா உங்கம்மா ஒன்ன? எதுக்கும் லாயக்கு இல்லாம?ஏய்...குட்டூ...அங்க என்ன வேடிக்கை? கூப்படறது காதுல விழாம?இன்னொருதரம் ஜன்னலண்ட போய் நில்லு, முதுகிலேயே ஒண்ணு வச்சிடறேன்...ஆமா டேபிள ஒழுங்கா தொடைக்க எத்தனை தரம் கத்துத் தர்றது? கொட்டிக்க மட்டும் யாரும், சொல்லாம உக்காந்திடறியே...சனியனே..."

ஐந்து மணிக்கு எழுந்து பால் வாங்கி வந்த பிறகு இனமும் வரிசையாய் எந்த வேலையைச் செய்தாலும்,

பெரியம்மாவிடம் திட்டு வாங்கிக் கட்டிக்கொள்வது ஒரு வாடிக்கையாகவே ஆனது.

"டூ குட்டூ...வாடி இங்க" என்று அழைத்து அரை நிமிஷம் தாமதமாய் சென்றாலும், பத்ரகாளியாய் கத்துவார்.

முதல் நாள் "காய் நறுக்கிட்டிருந்தேன் பாட்டி..." என்று இவள் சமாதானம் சொல்ல முற்பட்ட போது அதற்கும் அவர் அதட்டினார்.

"பாட்டியா? யாருக்கு? உனக்கா? நானா அது ஒண்ணுதான் குறைச்சல்—ஊர் பேர் தெரியாத அனாதை பொணத்துக்கெல்லாம் நா பாட்டியா?என் தலையெழுத்து. எங்க பாலு கூப்பிடறான்னு நீயும் சொந்தம் கொண்டாடி னேன்னா வாயிலியே போடுவேன்...மரியாதையா பெரியம்மானு சொல்லு போதும்...ஏண்டி உடனே வரலைனா, பதில் பேசறதப் பாரு...இந்த வாயாடற வேலையெல்லாம் என்னண்ட வாணம்...பிச்சு பிடுவேன் பிச்சு..."

ஒண்ணுமே இல்லாததற்கு பெரியம்மா அந்தக் கூப்பாடு போட்டதை ரோகிணி அருகில் இருந்து கேட் டாலும், குறுக்கே ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அப்புறம், கண்ணம்மா சமையல் அறையில் தனியாக இருந்தபோது மட்டும் "அவங்க வயசுலே பெரியவங்க, அந்தக்காலத்து மனுஷி...ஏதாவது சொன்னா தப்பா எடுத்துக்கக் கூடாது. பெரியவங்க நம்ம நல்லதுக்கு தானே சொல்றாங்க-னு இந்தக் காதுல வாங்கி அந்தக் காதால விட்டுடணும். மூஞ்சியத் தூக்கி வச்சிட்டிருந்தா எனக்கும் பிடிக்காது" என்று பொதுவாக சொல்லிவிட்டு வாசல் அறைக்குச் சென்று விட்டாள்.

பெரியம்மா வந்தபிறகு அய்யாவும், அம்மாவும் மாறிப் போய்விட்ட மாதிரியே கண்ணம்மாவுக்குத் தோன்றியது.

முதல் மூன்று நாள்களில் காட்டிய பரிவு, அன்பு, சிரிப்பு எல்லாம் பாட்டி வீட்டுக்குள் வந்த நிமிஷத்திலிருந்து மறைந்துவிட்டதை நன்றாகவே புரிந்துகொள்ள முடிந்தது.

அதற்கேற்ற மாதிரி, மறுநாள் காலையில் எழுந்து குழந்தை காரியங்களைக்கவனித்துவிட்டு அவசரம் அவசரமாய் எட்டுமணிக்கு எதையோ தின்று, எதையோ கையில் எடுத்துக்கொண்டு ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போனவர்கள், வீடு திரும்ப மாலை ஏழானது. களைத்து வந்தால் கொஞ்சம் வீட்டு வேலைகளைச் செய்து, பிள்ளைக்குப் பள்ளிக்கூடத்து வீட்டுப் பாடங்களை முடிக்க உதவி, சாப்பிட்டு படுக்க போகத்தானே பொழுது சரியாக இருந்தது. அப்புறம் கண்ணம்மாவின் குறைகளைக் கேட்கவோ, நின்று அவளுக்கு சமாதானம் செய்யவோ ஏது நேரம்?''

தவிர, அய்யா பெரியம்மாவுக்கு அடங்கின பிள்ளை, மருமகளுக்கும் மாமியாரிடம் ஏக பயம் இருந்தபோது; ''எதற்காக இந்தச் சின்ன பொண்ணை இப்படி விரட்டுகிறீர்கள்?'' என்று அவர்களாவது வாயைத் திறந்து கேட்பதாவது?''

மேற்கொண்டு இரண்டு நாள்கள் போவதற்குள் நிலைமையை ஓரளவுக்கும் புரிந்து கொள்ள முடிந்ததில், பட்டணத்துக்கு வந்தது தப்போ என்கிற எண்ணம் கண்ணம்மாவினுள் சின்னதாக முளை விடவே செய்தது.

அதுவும், பாட்டி வந்து சேர்ந்த இரவு, நடு ஜாமத்தில் எழுந்து மூன்று நான்கு தரம் வாந்தி எடுத்து, வயிற்றுப் போக்கு கண்டு, மறுநாள் காலை அதே கூட்டிடத்தில் இருந்த டாக்டரிடம் சொல்லி மருந்து வாங்கி கொடுத்தது நடந்தபோது பெரியம்மாவின் கோபம் கட்டுக்கடங்காமல்தான் போயிற்று.

''ஊர்லேந்து வந்ததும் வராததுமே இதுக்கு வைத்தியம் பாக்கறதுதான் நம்ப வேலையா? இன்னத்துக்கு என்ன கொடுத்தே ரோகிணி?''

மருமகளை அதட்ட, அலுவலகத்துக்கு புறப்படும் அவசரத்திலும் அவள் பணிவாகப் பதில் கூறினாள்.

''முந்தா நாள் புலாவ் பண்ணியிருந்ததல கொஞ்சம் கொடுத்தேன் அத்தே...நேத்திக்கு குழந்தைகளோடு பீச்சுக்குப் போயிட்டு வர்றப்போ ஐஸ்க்ரீம் வாங்கி...''

அவளை முடிக்க விடாமல் பாட்டி கத்தினாள்.

''பேஷ்...அவ கிட்ட நல்ல பேர் வாங்கணும்னு அளவுக்கு மிஞ்சிதான் அன்பு காட்டியிருக்கே! ராமத்துல சோத்துக்கு வழியில்லாம கூழ குடிச்சிட்டு இருந்த வளுக்கு புலாவும், ஐஸ்க்ரீமும் ஜரிக்குமாடீ? உனக்கும் தான் புத்திவேணாம்? நேத்து ராத்திரி கூட பார்த்தேன், லோட்டா நிறைய மோர் வச்சிட்டு இது குடிச்சது! காணாத்த கண்ட குஷில நீ எது கொடுத்தாலும் வாங்கி தின்னுட்டு, இப்ப இது நம்ம கழுத்த அறுக்குது! நாளைக்கு ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சுன்னா, இவ அம்மாவுக்கும், கொண்டு விட்ட வள்ளியம்மைக்கும் யார் பதில் சொல்றது! இதுக்குதான் 'ஆனும் வேணாம், தேளும் வேணாம்...நானே பாத்துக்கறேன்'னு சொன்னேன்!கேட்டாதானே!' நீங்க கஷ்டப்பட நீங்க அத்தே'னு கரிசனப்பட்டுகிட்டு இத வரவழச்சே...இப்ப? நீங்க போயிடுவிங்க கைய தட்டிகிட்டு ஆபீஸுக்கு! நா இல்ல இதோட லோல் படணும்?''

பாட்டி கத்திக் கொண்டிருந்த போதே கணவனும், மனைவியும் பதில் கூறாமல் அவரவர் பையை எடுத்துக் கொண்டு கிளம்பிப் போனார்கள்.

நல்ல வேளையாய், காய்ச்சல், நிய்ச்சல் என்று எதுவும் வராமல், வாந்தி பேதியும் ஒரு வேளை மருந்துடன்

நின்றதோ, கண்ணம்மா மேலும் திட்டு வாங்காமல் பிழைத்தாளோ.

ஆனாலும், அன்று இரவு கூடத்தில் படுப்பதற்காக அவள் பாய், தலைகாணியுடன் வந்த போது பெரியம்மா முறைக்கவே செய்தார்.

"நேத்து ராத்திரி இங்க படுத்துகிட்டு வாந்தி எடுத்த துல, கூடமே நாறிப் போச்சு...பேசாம சமையல் கட்டு லேயே படு...விருந்தாளிங்க வந்தாங்கன்னா அசிங்க மாவது இல்லாம இருக்கும்" என்று சொல்லி கண்ணம் மாவின் படுக்கையை சமையல் அறைக்கு மாற்றினார்.

கூடத்தில் உறங்கிய போது தோன்றாத பயம் தனி யாய் சமையல் அறையில் படுத்த போது எழுந்ததில், இரவு பூராவும் அசந்து தூக்க முடியாமல் என்னென் னவோ கெட்ட கனவுகள்...பிரமைகள்...

அம்மாவின் இடுப்பில் ஒரு காலைப் போட்டு குடிசை மண் தரையில் படுப்பது எத்தனை சுகமானது என்பது ஞாபகத்துக்கு வர, முதல் முறையாய் ஓசை எழுப்பாமல் தலைகாணியில் முகத்தைப் பதித்தவாறு ரொம்ப நேரத்துக்குக் கண்ணம்மா அழுதாள் அப்புறம் அவளை யும் அறியாமல் உறங்கிப் போனாள்

நாலாவது மாடி வராந்தாவில் நின்று கொண்டுகீழே நடப்பவைகளை வேடிக்கைப் பார்ப்பது கண்ணாம்மா வுக்கு பிடித்தமான ஒன்று 'டர் டர்' என்று போகும் வாகனங்களையும், குள்ளமாகத் தெரிந்த மனிதர்களை யும் அவள் பராக்கு பார்ப்பது பாட்டி கண்களில் பட்ட தும் அதற்கும் கண்டிக்கத் தொடங்கினார்.

"அங்க என்னடி பண்றே? இப்படி வெட்டியா போகு போக்கறதுக்கு உனக்கு சம்பளம் கூரல...கும்மா இருக்கற நேரத்துல தம்பி சட்டைக்கு இஸ்திரி போட்டுவை. ஷூக்கு பாலீஷ் பண்ணினியா? குழந்தைய நேத்தே ஸ்கூல்ல சட்டை அழுக்கா இருக்குனு மத்த பசங்க கேலிபண்ணாங் களாம், நா செஞ்சிருந்தப்போ எல்லாம் நல்லா இருந் துச்சு. இப்ப உன்னால தம்பி திட்டு வாங்குது...போடி... காயப்போட்டிருக்கிற துணிகளை எடுத்து வந்து மடிச்சு வை...இஸ்திரி பெட்டிய 'ஆன்'பண்ணு...ஏதோ நிலைவுல துணிய பொசுக்கிடாதே...அன்னிக்கு சின்னம்மா ஷூக்கு பாலீஷ் போட கத்துத் தந்தப்போ பளபளனு எப்படி இருந்துச்சு? என்னடி மொறைக்கறே...? முழிய தோண்டிடுவேன்..."

பாட்டியின் கோபத்தை அதிகமாக்குவது போல சதா பாலுவும் புகார் சொல்லிக்கொண்டே இருப்பான்.

இவள் எத்தனை கவனமாக இஸ்திரி செய்தாலும் பாலீஷ் போட்டு வைத்தாலும் அவனுக்குத் திருப்தியே இருக்காது.

"இங்க பாரு பாட்டி...சட்டை எத்தனை சுருக்கமா இருக்கு! ஷூல பாலிஷ் தீத்தறாளே தவிர, அழுத்தி தொடைக்க மாட்டேங்கறா..." என்று எடுத்துக் கொடுப் பதற்காகவே காத்திருக்கிற மாதிரி விட்ட இடத்திலிருந்து பாட்டி தொடருவார்.

"கொட்டிக்கறதுக்கும், டி.வி. பாக்கறதுக்கும் தானே ராஜா அந்த சனியனுக்குப்பொழுது இருக்கு! வணங்கி ஒரு காரியத்த செய்ய மாட்டேன்கறதே! இங்க கொண்டா நா துடைச்சி தரேன்..." என்பார். அப்புறம் இவள் பாலீஷ் போட்டு வைத்த ஷூக்களை, பேருக்கு ஒரு துடைப்பு

துடைத்து விட்டு "கூறு கெட்ட முண்டம்...இப்ப பாரு எப்படி இருக்குனு" என்று இவளைத் திட்டுவார்.

இந்த பாலு ஆனாலும் மோசம். அப்பா அம்மாவோடு தனியாக இருந்தபோது வாலைச்சுருட்டி வைத்துக் கொண்டிருந்தவன், பாட்டியைக் கண்டதும் இஷ்டத்துக்குத் தான் ஆடுகிறான்.

பள்ளிக்குப் போகும் முன்னரோ, அல்லது வந்த பிறகு வேண்டுமென்றே ஷூ அணிந்த காலால் இவள் பாதத்தை அழுந்த மிதிப்பான்.

'ஆ'என்று கத்தினால் வாய் விட்டு சிரிப்பான்.

ஒரு தரம் வலிதாங்க முடியாமல் "யாருங்கபெரியம்மா இந்த பாலுவ...பூட்ஸ் காலல என்னைய மிதிக்கிறான்" என்று சொன்னாலும், பேரனுக்காக பாட்டி வரிந்து கட்டிக் கொண்டு வந்து விட்டார்.

"ஏதோ தெரியாம பட்டிருக்கும்...அவள் குழந்தை தானே! என்னமோ காலையே வெட்டிட்ட மாதிரி எதுக்கு நீலித்தனம் பண்றே!"

பாலு எது செய்தாலும் பாட்டி அவனைக் கண்டிக்கவே மாட்டார். மடியில் உட்கார வைத்துக்கொண்டு கொஞ்சுவார். சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடித்தால் கதை சொல்லி தாஜா செய்து வாயில் ஊட்டி விடுவார்.

பள்ளிக்குப் புறப்படும் முன் அவன் அடிக்கும் ரகளை சொல்லி மாளாது. குளிக்க அம்மா அழைத்துச் சென்றால். துணிகளையும், சாக்ஸ், ஷூக்களையும் வைத்துக்கொண்டு இன்னொருத்தர் தயாராக நிற்கவேண்டும்.

நேரம் ஆகிவிடாமல் காலில் ஸாக்ஸ் மாட்டி, ஷூ அணிவிப்பது கூட மற்றவர்தான்.

"நீ ரொம்பத்தான் படுத்தறடா" என்று ரோகிணி அதிசயமாய் அலுத்துக் கொண்டால் அவனுக்கும் தப்பாமல் பாட்டியிடமிருந்து திட்டு கிடைக்கும்.

"ஊர் உலகத்துல ஒவ்வொரு பிள்ளைத் தத்தாரியா இருக்கற மாதிரியா நம்ம பாலு இருக்கான்! என்னமாய் படிக்கிறான்? கிளாஸ்ல பர்ஸ்ட்! சின்னக் குழந்தையைக் கரிச்சுக் கொட்டறதே உனக்கு வாடிக்கையாயிடிச்சு..."

காலையில் புறப்பட்டுப் போய் இருட்டின பிறகு ரங்கநாதனும், ரோகிணியும் வீடு திரும்புவதில் பாலு, சின்னக் குழந்தை சங்கர், வீடு—எல்லாவற்றின் பொறுப்புகளையும் பாட்டி கவனித்துக் கொண்டதில், அவருடைய நாட்டாண்மை கொடி கட்டிப் பறக்கவே செய்தது.

கண்ணம்மா வேலைக்கு வந்த ஒரு வாரத்துக்கெல்லாம் வெளியூருக்கு 'டூர்' போகும்வேலையும் ரோகிணிக்கு சேர்ந்து கொண்டது. அதனால் அத்தி பூத்த மாதிரி புன்னகைத்து 'சாப்பிட்டியா?', என்றோ 'வயசுல பெரிய வங்க...தள்ளாமைல பொலம்பறாங்க...பெரிசு பண்ணாம விட்டுடு' என்றோ கேட்பதும், சமாதானப்படுத்துவதும் கூட நின்று போன பிறகு 'ஏண்டா பட்டணத்துக்கு வந்தோம்' என்கிற தவிப்பு அவளுள் சதா சர்வ காலம் துடிக்கவே முற்பட்டது.

பின்னே?

வாய்க்கு ருசியாய் சாப்பிடலாம் என்று ஆசைப்பட்டதும் நடப்பதில்லை. முதலில் கன்வாபின்னா என்று பழக்கமில்லாமல் சாப்பிட்டு உடம்புக்குவந்ததில் இப்போ

தெல்லாம் இரண்டு வேளையும் பெரியம்மா அவளுக்கு கொஞ்சம் சோறும், குழம்பும் மட்டுமே கொடுக்கிறார். பாதி சமயங்களில் பழையதுதான். அதுவும் புளித்துப் போய் 'நொய்ங்' என்று இருக்கும். வெளியே மழை கொட்டும் போது சில்லென்று பழையதை சாப்பிடு என்றால்?

ரோகிணி ஊருக்குப் போன பிறகு மாலை நேரங்களில் டி.வி. பார்ப்பதற்குக்கூட பெரியம்மா தடை விதிக்க ஆரம்பித்தார்.

''முதல்ல இந்த டி.வி.யக்கொண்டுபோய் என் அறைல வச்சாதான் இது உருப்படும்... அது என்ன ரங்கா, அப்படி ஒரு டி.வி. பித்து இதுக்கு? வைச்ச கண்ண எடுக்காம, யார் கூப்பறதும் காதுல விழாம பைத்தியம் மாதிரி பாக்கறது? நேத்திக்கு பாலு பிளேடால கைய வெட்டிக்கிட்டப்போ ரத்தமா கொட்டுது... எனக்கு கையும் ஓடல... காலும் ஓட்ல... பஞ்சும், டெட்டாலும் எடுத்துக்கிட்டுவாடி - னு கரடியா கத்தறேன், காதுல வாங்கிக்காம டி.வி.யப் பாத்துகிட்டே உக்காந்துட்டு இருக்கு... சனியன்... இதுக்காகவே மொதல்ல இந்த டி.வி.யை உள்ள கொண்டு போய் வைக்கணும்...''

விடாமல் இரண்டு மூன்று நாள்கள் புலம்பி, எலக்ட்ரீஷியனைக் கூட்டி வரச் செய்து தன் ரூமுக்கு ஆண்டனா இழுக்கச் சொல்லி, டி.வி.யை உள் அறைக்கு எடுத்துச் சென்று பாட்டி நினைத்ததைச் சாதித்ததும் கண்ணம்மாவுக்கு வாழ்க்கை வெறுத்துத்தான் போயிற்று.

'என்னைய ஊருக்கு அனுப்பிடுங்க' என்று பல முறை கேட்க நினைத்துப் பாட்டியின் குட்டின் வலிக்குப் பயந்து சும்மா இருந்து விட்டாள்.

வள்ளியம்மை அக்கா வந்தாலும் மனசில் இருப்பதைச் சொல்லி, 'என்னைய எங்கம்மாகிட்ட அனுப்பிடுங்க அக்கா' என்று கெஞ்சலாம் என்றால், இவள் வந்த மறு நாள், வெள்ளிக்கிழமை எட்டிப்பார்த்து 'என்ன கண்ணம்மா புது இடம் பிடிச்சிருக்கா?' என்று கேட்டுப் போனவர்தான் மறுபடி வரவில்லை பத்து நாள்கள் முன்பு சாப்பிட்ட நாழிகையில் அய்யா பெரியம்மாலிடம் 'சோமு இல்ல. அதான் வள்ளியம்மை புருஷன். அவனோட அப்பா திடும்னு இறந்திட்டார்ம்மா... பதறிகிட்டுக் குடும்பத்தோட காரைக்குடிக்குப் போயிருக்கார். 'பதினாறாம் நாள் காரியம் முடிஞ்சிதான் வருவேன்னார் — அம்மா சீக்காளி — அந்த வீட்டுக்கு ஒரு வழி பண்ணிட்டு, அம்மாவ கையோட இங்க கூட்டிட்டு வர்ற வரைக்கும் வள்ளியம்மை அங்கதான் இருப்பா-னு சொல்லி லீவு வாங்கிட்டுப் போனார். பாவம்'' என்று சொன்னதிலிருந்து இப்போதைக்கு வள்ளியம்மை அக்கா வரமாட்டார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

சின்னம்மா எட்போது டூரிலிருந்து வருவார்? லந்து விட்டாலும்... 'இங்க எனக்கு எதுவும் சரிப்பட்டு வரலைம்மா... தயவு செய்து ஊரோட அனுப்பிடுங்க' என்று காலைப் பிடித்துக் கொண்டாவது கெஞ்சலாம்.

அய்யாவிடம் மனசிலிருப்பதை சொல்லலாம் என்றால், பயமாக இருக்கிறது. ஆபீஸுக்குப் போகும் நேரம் தவிர, தன் அறையில் பைல் பார்த்துக்கொண்டும், புத்தகங்களை படித்துக் கொண்டும் இருப்பவரின் முன் நின்று விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்கிற நினைப்பே கை, கால்கள் உதறப் பண்ணுகிறது.

தனிமை கிடைக்கும்போது தனக்குத்தானே குருட்டு யோசனை பண்ணியதில் குழப்பமும், வேதனையும் அதிகமாயினவே தவிர, வேறு எந்த வழியும் புலப்படவில்லை.

அதுவும் அன்றைக்கு லீஃடில் போவதற்காக கடுமையாகக்கடிந்து, தலையில் வலிக்க வலிக்க பெரியம்மா

குட்டிலு பிறகு, ச்சீ இது என்ன வாழ்க்கை என்று மனசு சொம்பவுத்தான் நொந்து போயிற்று.

ஒன்றுமில்லை-மதியம் டிபனுக்காக உப்புமா செய்ய முனைந்த பாட்டி, கீழே காய்கறிக்காரனின் குரல் கேட்டு "டே குட்டே...சட்டுனு கீழே ஓடி, ஒரு ரூபாய்க்கு இஞ்சி, பச்ச மிளகா, கொத்தமல்லி வாங்கிட்டு வா" என்று விரட்ட, வெங்கல பூ சாடிக்கு பாலீஷ் போட்டுக் கொண்டிருந்ததைப் பாதியில் நிறுத்திவிட்டு கண்ணம்மா பணம், பையுடன் கீழே ஓடினாள்.

போனவள், சில நிமிஷங்களில் குறிப்பிட்ட சாமான்களோடு வர, பாட்டி கண்ணாடியை இறக்கிக் கொண்டு அவளை அழுந்தப் பார்த்து அதட்டலாய் கேட்டார்.

'அதுக்குள்ளார வந்திட்டியே! லிஃப்டுல போனியா?'

ஆம் என்று அவள் தலையை அசைத்ததும் நறுக்கென்று ஒங்கிக் குட்டினார்.

"வேலைக்கார நாய் உனக்கு லிஃப்ட் கேக்குதா? நாலு மாடி எறங்கிப் போய், ஏறினா உன் முகரக் கட்டை தேஞ்சிடுமோ! போனவாரமே உன்னண்ட 'இனிமே நீ லிஃப்டுல போகக் கூடாதினிட்டு சொன்னத மீறி, உன் இஷ்டப்படி நடந்தா என்னடே அர்த்தம்? அன்னிக்கு பாலு ஸ்கூல்லேந்து வந்து லிஃப்டுக்காக காத்திருக்கானாம், நீ மேல வந்திட்டு. கதவ சரியா மூடாததுல, குழந்தை நாலு மாடி ஏறியே வந்தான். உன் திமிர எல்லண்டயா காட்றே அஞ்சாவது மாடி ஸ்ரீதர் வீட்டுல இறந்த வேலைக்காரக் கழுதை, எதையோ திருகி, என்னவோ செஞ்சதுல, லிஃப்ட் கோளாறாப் போயி நாலாறு ரூபா கொடுத்துரிப்பேர் பண்ண வேண்டி வந்த மாதிரி எங்களுக்கும் தண்ட செலவு வெக்கறதுலு தீர்மானம் பண்ணிட்டியா? திமிர் பிடிச்ச நாய், இவிமே லிஃப்டு பக்கம் போ, அப்ப சொல்றேன். ஆமா-தா சொல்லச் சொல்லமீறி போனே, கரண்டிய அடுப்புல போட்டு, நல்லா ஒருதரம் அந்தக் காலிலேயே இழுத்திடறேன்... சனி— என் உசிர வாங்குறதுக்குன்ன வத்திருக்கிற நாய்..."

மறுபடியும் அவளை இரண்டுதரம் குட்டியும் ஆத்திரம் தணியாதவராய், அந்த சின்ன விஷயத்துக்காக ரொம்ப நேரத்திற்கு கண்ணம்மாவை ஏசிக்கொண்டே இருக்க, அவமானமும் வலியும் தாளாமல் ஒரு பக்கமாய் ஒதுங்கி விசும்பியபோது, பாட்டியின் கோபம் அதிகமானது.

இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு அவளெதிரில் வந்து நின்றுகொண்டு "என்னத்துக்காக இப்படி முதலைக் கண்ணீர் வடிச்சு, மாய்மாலம் பண்றே? ம்? தப்பு செஞ்சா கண்டிக்காம தலைல வச்சுகிட்டா கூத்தாடுவாங்க? அழணும்னா அழு... நா வேணாங்கல... ஆனா, என் கண்முன்னால நிக்காம எங்கயாவது போய் நின்னுகிட்டு ஆசை தீர அழு" என்று குத்தலாக, துளி ஈவு இரக்கம் இன்றி வார்த்தைகளைக் கொட்டினார்.

கண்ணம்மா கூடத்தை ஒட்டியுள்ள வராந்தாவில் சென்று உட்கார்ந்தாள். முழங்கால்களைக் குத்திட்டு, அதில் முகத்தைத் தழைத்துக்கொண்டு எதுவுமே பிடிக்காமல் 'யம்மா...யம்மா' என்று நெகிழ்ப்பாய் முனகி அழுதாள்.

நாலுமணிக்குப் பள்ளியிலிருந்து திரும்ப வந்து வாசல் மணியை பாலு அழுத்தியபோது பாட்டி வந்து கதவைத் திறக்க "அந்த சோம்பேறி குட்டி எங்க பாட்டி" என்று கேட்டான்.

"அது எங்க ஒழுஞ்சிதோ...நீ யூனிஃபார்மை மாத்திட்டு வாடா ராஜா, டிபன் தரேன்"

உடைகளை மாற்றிக்கொண்டு வந்தபோது பாலுவின் கண்களில் வராந்தாவில் உட்கார்ந்திருந்த கண்ணம்மா தெரிந்தாள்.

கிட்டப்போனவன் அவன் அழுவதைப் புரிந்து கொண்டு "பாட்டீ..." என்று கத்தியவாறு உள்ளே ஓடினான்.

"குட்டி அழறா பாட்டீ..."

"நல்லா அழட்டும்... நீ டிபன் சாப்பிட வா... பட்டாணி, கேரட் போட்டு உப்புமா செஞ்சிருக்கேன்... உனக்குப் பிடிக்குமே!"

பாலு முகத்தைச் சிணுங்கினான்.

"எனக்கு உப்புமா வேணாம். வெண்ணெய் ஜாம் தடவி...டோஸ்ட் தான்வேணும்..."

"ப்ரெட் இல்லையேடா ராஜா"

"அதா அங்க உக்காந்துகிட்டு அழுதிட்டு இருக்கே, தண்டச்சோறு, அத வாங்கிட்டு வரச்சொல்லு..."

தன் மொழியிலேயே பேரன் பேச, பாட்டி பெருமிதத்துடன் சிரித்து, அவனை அணைத்துக் கொண்டார்.

பிறகு, "டீ...குட்டீ...சனியனே..." என்று குரல் கொடுத்தார்.

கண்களைப்பாவாடையில் துடைத்தபடி கண்ணம்மா மெல்ல எழுந்து வந்தாள்.

"சமையலறை அலமாரியில காசு வச்சிருக்கேன்... எடுத்திட்டுப் போய் மாணிக்கம் கடைலேந்து ஒரு ப்ரெட்

வாங்கிட்டு வா—புதுசா, இன்விக்கு வந்ததா கேட்டு வாங்கு...நீ பராக்கு பார்த்துக்கிட்டு நின்னா, அவன் முதல்நாள் ரொட்டிய கொடுத்திருவான்...போனமா, வந்தமா-னு வரணும்...ஓடு..."

காசை எடுத்துக் கொண்டு கண்ணம்மா வெளியேறினாள். மறக்காமல் படிகள் வழியாக இறங்கிச் சென்ற போது அடங்கி இருந்த கண்ணீர் மறுபடி வெளிப் பட்டது

மாணிக்கம் கடையில் கூட்டம் அதிகம் இல்லை.

"ஒரு ரொட்டி குடுங்க...புதுசா இன்விக்கு வந்ததா கொடுங்க" என்றவாறு காசை நீட்டியதைப் பெற்றுக் கொண்டவள் அவள் கண்கள் கலங்கி இருந்ததைப் பார்த்து வினவினான்.

"என்ன குட்டீ...அழுதியா! எங்காச்சும் கீழே விழுந்து அடிபட்டுகிட்டியா?"

வேலை பார்க்கும் வீட்டிலிருந்து, ரொட்டிக் கடைக் காரர் வரை 'குட்டி' என்றே அழைப்பது வேதனையை அதிகமாக்க கண்ணம்மா மௌனித்தாள்.

கலைந்த முடி, சற்றே ஓரத்தில் கிழிந்த பாவாடை, சிவந்த முகம் என்று கசங்கின பூவைப்போல நின்ற அந்த சின்னக் குழந்தையின் பரிதாபம் நெஞ்சைத் தொட, கண்ணாடி ஜாடியைத் திறந்து இரண்டு பிஸ்கட்டுகளை எடுத்து மாணிக்கம் அவளிடம் நீட்டினான்.

"வாணாம்...என்னண்ட காசு இல்ல"

"காசு தர வேணாம்...சும்மா எடுத்துக்க..."

"வாணாம்...நேரமாச்சின்னா பெரியம்மா இட்டு வாங்க..."

மாணிக்கம் 'ப்ச்' என்று சூள் கொட்டினான்.

"அவங்க எப்பதான் உன்னைத் திட்டல? அங்க போடற கூச்சல் தெரு வரைக்கும் கேக்குதுனு பில்டிங் ஆளுங்க எல்லாரும்தான் பேசிக்கறாங்களே? கேட்டா, ப்ரெட் வண்டி இப்பதான் வந்துக்சு...எறக்கிக் கொடுக்க தாமதமாயிடுச்சு'னு சொல்லு. வாங்கிக்க..."

கண்ணம்மா வாங்கிக் கொண்டாள்.

தேங்காய் தூவின வெண்ணெய் பிஸ்கட்.

நாவில் பட்டதுமே கரைந்தது.

ரசித்துத் தின்றபடி பார்வையை அலையவிட்ட போது, கடையின் அருகில் இருந்த சிவப்பு ஆளுயரப் பெட்டியில், ஒரிருவர் காகித உறைகளைத் திணிப்பது தெரிந்தது.

"அவங்க என்ன செய்யறாங்க அண்ணே? என்னத்தப் போட்டுட்டுப் போறாங்க?"

"எங்க?" விழிகளைத் திருப்பி அவள் காட்டிய திசையை மாணிக்கம் பார்த்தான்.

"ஓ! அதுவா? தபால் பெட்டில கடுதாசிங்களப் போடறாங்க. இதுகூட தெரியாத பொண்ணாயிருக்கியே!"

மாணிக்கத்தின் பதில் எங்கேயோ ஒரு பொறியை ஊதி விட, கொடுக்கு போட்ட மாதிரி கண்ணம்மா நிமிர்ந்தாள்.

"இந்தப் பொட்டில கடுதாசி போட்டா யாருக்கு வேணா, எங்க வேணா போகுமா?"

"பின்னே? அதுக்குத்தானே வச்சிருக்காங்க... தினமும் மூணு வேளை தபால்காரர் வந்து சேர்த்திட்ட கடுதாசிங்கள அள்ளிட்டுப் போவாரே, நீ பார்த்ததில்ல?"

இல்லை. அவர்கள் பிளாட் பின்னால் இருக்கிறது. இந்தத் தெருவை லராந்தாவில் நின்றால் பார்க்க முடியாது.

பள்ளிப்பாளையத்தில் போஸ்ட் போடுவதற்கென தனியாய் இடம். இந்தப் பெட்டி மாதிரி எதுவும் அவள் அறிந்தவரை இல்லை.

எப்போதாவது வாரத்துக்கு ஒரிரு தரம் போல ஆண்டார்முள்ளி பாளையத்திலிருந்து வரும் பஸ்ஸில் காக்கி சட்டை போட்ட ஆள் ஒருவர் வந்து எவருக்கேனும் தபால் இருந்தால் கொடுத்துவிட்டு யாருக்காவது கடிதம் எழுத வேண்டியிருந்தால், அவர்கள் சொல்லச் சொல்லி எழுதி எடுத்துக் கொண்டு போவதுதான் வழக்கம்.

கண்ணம்மா விழிகளை உயர்த்தி ஆர்வத்தோடு மாணிக்கத்தைப் பார்த்தாள்.

"நா யாருக்காச்சும் கடுதாசி எழுதிப் போட்டா கூட போயிடுமாண்ணே? எத்தன நாள்ல போகும்?"

மாணிக்கம் கண்களைச் சிமிட்டினான்.

"போவாம? உள்ளூர்னா நாளைக்கே போயிடும். வெளியூருன்னா ரெண்டு நாள்ல...வெளிநாடு-னா பத்து நாள்ல...ஆமா, நீ யாருக்கு எழுதப் போறே? வெளியூரா, இல்ல வெளிநாடா?"

அவள் கேலியைப் புரிந்து கொள்ளாமல் ஒரு நிமிஷம் உதட்டைக் கடித்துக் கொண்டு கண்ணம்மா யோசனை

செய்தாள். பிறகு "அப்புறமா வரேன்..." என்று சொல்லிவிட்டு ரொட்டியுடன் கிளம்பினாள்

அன்றைய பொழுதுக்கும், இரவு படுக்கச் செல்லும் போதும் சிவப்பு நிற தபால் பெட்டியும், மாணிக்கம் சொன்ன வார்த்தைகளும் நெஞ்சுக்குள்ளேயே தாண்டவ மாடின.

"நா கமலம்மா வீடு வரைக்கும் போயிட்டு வரேன். பாலு தேங்காய் போளி ஆசைப்பட்டுக் கேட்டான் அவங்க கிட்ட சொல்லிட்டு வந்தா சூடா செஞ்சு அனுப்பு வாங்க நீ இப்படி வாசல்லியே உக்காந்திட்டு இரு...நா சுருக்க வந்திடுவேன். உன்னத் தனியா விட்டுட்டுப் போனா, சோபால உக்காந்துப்பே, டி. வி. யைத் திரு கிடுவே... இல்லைனா, ஜஸ் பெட்டிலேந்து தண்ணி எடுத்துக் குடிப்பே...உன்னை நம்ப முடியாது...சரியான ஏமாத்துக்காரி" என்று தோன்றிய குற்றச்சாட்டுகளைத் தன் செய்கைக்கு சாக்குகளாகக் கூறி, வீட்டைப் பூட்டிக் கொண்டு லிஃப்டில் கீழே போனார்.

கமலம் அம்மாவின் வீடு அடுத்த தெருவில் இருக் கிறது. ஆள் வைத்து வீட்டிலேயே விதவிதமாய் பலகாரங் களைச் செய்து விற்பனை செய்பவர். அங்கு போய் வர எப்படியும் குறைந்த பட்சம் அரை மணியாவது ஆகும்.

சட்டென்று கண்ணம்மாவுக்கு ரொம்ப சந்தோஷ மாக இருந்தது.

சாமியாய் கொடுத்த வாய்ப்பு என்கிற எண்ணம் மகிழ்ச்சியை அதிகமாக்க, ஓட்டமாய் ஓடி மாணிக்கத்தின் கடையில் நின்று "அண்ணே...எனக்கொரு ஒத்தாசை பண்ணுங்க...கொஞ்சம் தயவு பண்ணுங்க அண்ணே..." என்று இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு அவசர மாய் கெஞ்சினாள்.

7

வாடிக்கையாளர் ஒருவருக்கு சிகரெட்டும், தீப் பெட்டியும் கொடுத்துக் கொண்டிருந்த மாணிக்கம், திரும்பாமல் "இப்ப நா வேலையா இருக்கேன் குட்டி... எதுவானாலும் அப்புறமா வா..." என்று கூற, கண் ணம்மா பரிதவித்தாள்.

"அண்ணே...தயவு பண்ணுங்கண்ணே...உங்க கால்ல வேணுமானாலும் விளுந்து கேட்டுக்கறேன்..."

பணத்தை மேஜை இழுப்பறையில் போட்டுவிட்டு நிமிர்ந்த மாணிக்கத்தை அந்த பரிதாபமும், பரபரப்பும் என்னவோ செய்தன.

"என்ன செய்யணும்?"

"ஒரு கடுதாசி எழுதணும் அண்ணே"

"கடுதாசியா? யாருக்கு?"

"எங்கம்மாவுக்கு"

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, குரலைத் தழைத்துக் கொண்டு கண்ணம்மா பேச, மாணிக்கம் புருவங்களை உயர்த்தினான்.

"அம்மாவுக்கு கடுதாசி எழுதணும்னா, உங்க எஜமானிய விட்டு எழுதச் சொல்றது! என்னண்ட ஏன் வர்றே?"

அவன் மறுத்துவிடுவானோ, அதிசயமாய் கிடைத்துள்ள சந்தர்ப்பம் வீணாகி விடுமோ என்கிற பயம் தலை தூக்கியதில் புசுக்கென்று கண்களில் நீர் ஊறி, கன்னத்தில் கோடு சிழித்துக் கொண்டு இறங்கியது.

மாணிக்கம் சங்கடப்பட்டான்.

''தே...குட்டி...என்னத்துக்கு அழுவறே? இப்ப நா என்ன சொல்லிட்டேன்! கடைலே வியாபாரம் நடக்கற நேரம்...அத்த கவனிக்காம. உன்னோட பேசிட்டு இருக்கறது முறையா?''

விசும்பலூடே கண்ணம்மா கிசுகிசுப்பான குரலில் சொன்னாள்.

''பெ...பெரியம்மா வெளிய போயிருக்காங்க...இப்ப கடுதாசி எழுதாட்டி. அ...அப்பால எனக்கு இங்க வர நேரமே இ...இருக்காது.''

''பெரியம்மா வூட்டுல இல்லியா? எங்க போயிருக்காங்க?''

''கமலம்மா வூட்டுக்கு?

''அது யாரு கமலம்மா?'' அவளுடைய அவசரம் புரியாமல் ''நாலு பன் குடுங்க'' என்று கேட்டுக்கொண்டு வந்த நபருக்கு பன்னை பேப்பரில் கட்டியவாறு நிதானமாய் ஊர்க் கதை பேச மாணிக்கம் முனைய, கண்ணம்மா சற்று பெரியதாகவே அழ முற்பட்டாள்.

பன் வாங்க வந்தவனை அனுப்பிவிட்டு மாணிக்கம் சின்னக் குரலில் அதட்டினான்.

''தா...குட்டி...இப்ப என்னத்துக்காக இங்க வந்து நின்னுகிட்டு அழுது ரகளை பண்ணறே? காலை வேளை

வியாபாரத்தையும் கெடுத்துகிட்டு...போ..எனக்கு வேலை இருக்கு''

கண்ணம்மா எட்டி அவன் கைகளைப் பற்றிக் கொண்டு பதறினாள்.

''அய்யோ அண்ணே...நீங்களும் ஒதலாட்டி நா யார் கிட்ட போலேன்? பெரியம்மா அரைமணில வந்திருவாங்க...அதுக்குள்ளார கடுதாசி லெவரத்த உங்கிட்ட சொல்லிட்டு போனாதான் பொழைச்சேன்...இல்ல தலைல குட்டியே என்ன சாக அடிச்சிடுவாங்க...அண்ணே தயவு பண்ணி...''

பேசிக் கொண்டே குறுக்குப் பலகையின் அடியில் நுழைந்து, நெருங்கின கண்ணம்மாவை, சட்டென்று அவன் கால்களில் விழ, நிலைமையின் நிஜரத்தை முதல் முறையாக மாணிக்கத்தால் புரிந்து கொள்ள முடிந்தது.

வேலை பார்க்கும் வீட்டில் கடிதம் எழுதித் தர மறுக்கிறார்கள் என்பதால் தன்னிடம் வந்திருக்கிறாள் என்று எண்ணியது தவறா? அவர்களுக்குத் தெரியாமல் ஊருக்கு விவரம் எதையோ தெரிவிக்க விரும்புகிறாளா?

''எந்திரி குட்டி...இது என்ன அசட்டுத்தனம்? உனக்கு லெட்டர் எழுதணும். அதானே? சரி-எழுதிடலாம்...உங்க எஜமானிக்குத் தெரியாம எழுதறியா?''

கண்ணம்மா கண்களைத் துடைத்துக்கொண்டு 'ஆம்' என்று தலை அசைத்தாள்.

''ஏன்?''

''தெரிஞ்சா திட்டுவாங்க...அடிப்பாங்க...''

"ம்ம்..." மாணிக்கம் இந்த விவகாரத்தில் பட்டுப் கொள்ளலாமா, வேண்டாமா என்பதுபோல சிந்தித் தான்.

ரங்கநாதன் ஸாரை அவனுக்குத் தெரியும். ரோகிணி அம்மாவும்தான். இருவருமே நல்லவர்கள். சாது. ஒருத்தர் வம்புக்குப் போகாதவர்கள் ஆனால் பாட்டி யம்மா சரியான பிடாரி...அந்த பாலுவுக்கு செமை செல்லம் கொடுத்து குட்டி பிசாசாய் ஆக்கியவர் அவர் தான். கடையில் ப்ரெட், பிஸ்கெட் ஜாம், வெண்ணெய் என்று பல பொருள்களை மாமூலாக வாங்குவார்கள். அவர்களுக்குத் தெரியாமல் இந்த வேலைக்காரி குட்டிக்கு கடிதம் எழுதித்தந்தால் ஏதாவது வம்பில் கொண்டுவிட்டு வாடிக்கையை இழக்க நேரிடுமா?

மேற்கொண்டு யோசிக்க விடாமல் கண்ணம்மா அவர் கையைப் பிடித்து மீண்டும் கெஞ்சினாள்.

"நேரமாச்சு அண்ணே—தயவுபண்ணி எழுதித் தாங்க—

ஒரு லெட்டர் எழுதிக்கொடுத்தால் என்ன ஆகிவிடும்? தவிர. இவள் சொல்ல தான், எழுதுவது யாருக்குத் தெரியப் போகிறது?

மாணிக்கம் அவள் தலையைத் தட்டி சிரித்தான்.

"சரியான பிடிவாதக்கார குட்டி நீ—" என்று அவளைப் பாராட்டியவன் எட்டிப் பார்த்து சற்று தள்ளி வெளியே நின்று கொண்டிருந்த பையனை அழைத்தான்,

"வேலு—இங்க வா...ஓர் அஞ்சு நிமிஷம் வர்ற கஸ்டமரைப் பாத்துக்க—"

வேலு என்ற பையன் உள்ளே வந்து நின்று கொண்டதும் மாணிக்கம் கணக்கு எழுதும் புத்தகத்தில் ஒரு

வெற்றுப் பக்கத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு பேனா சகிதம் கண்ணம்மாவைப் பார்த்து "சொல்லு" என்றான்.

முன்னே பின்னே கடிதம் எழுதி பழக்கம் இல்லாத தால் சில நொடிகளுக்கு கண்ணம்மா என்ன செய்வது என்று புரியாமல் தடுமாறினாள்.

நகத்தைக் கடித்தாள்,

முன்பு எப்போதோ யாரோ பங்காளி வெளியூரிலி ருந்து எழுதிய கடிதத்தை உரக்க பெரியப்பா படித்தது திப்பித் திப்பியாக நினைவுக்கு வந்தது. ஆனாலும் கோர்வையாய் எதையும் சொல்லத் தெரியலை.

அவள் கஷ்டம் புரிந்த மாதிரி மாணிக்கம் உதவி னான்.

"அம்மாக்குத்தானே எழுதணும்? சரி நானே ஆரம் பிச்சுத்தரேன்...'அன்புள்ள அம்மாவுக்கு, கண்ணம்மா வணக்கங்களுடன் எழுதுவது என்னவென்றால்—இங்கு நான் நலம். அங்கு நீ...' உரக்க வாயால் கூறிக்கொண்டே எழுதினவன் நிறுத்தினான்.

"ஆமா—ஊர்ல உங்கம்மாவைத் தவிர யார் யார் இருக்காங்க?"

கண்ணம்மாவின் கண்கள் ஊரின் நினைப்பில் பள பளத்தன.

"தம்பி, ஆயா, பெரியப்பா, பெரியம்மா, பூங்கா வனம், என்று நீட்டிக்கொண்டே போனவனை மாணிக் கம் 'இரு...இரு' என்று தடுத்தான்.

''அங்கு நீ, தம்பி மற்றவர்களெல்லாம் சுகமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். அப்புறம்? மேல சொல்லு...''

கிராமத்திலிருந்து சிந்தனை இங்குதான் படும் அவஸ்தைகளுக்குத் தாண்ட, கண்ணம்மாவின் முகம் கும்பியது. மளமளவென்று சொல்ல முற்பட்டவளின் குரல் தழுதழுத்தது.

''இங்க எதுவுமே சரியாக இல்லம்மா காலைல வெள்ளை அஞ்சு மணிக்கு எழுந்தா ராவு படுக்க பத்து மணியாகுது. பெரியம்மா எப்பப்பாரு நாய், கூறு கெட்ட முண்டம்னு ஏசி, குட்றாங்க...ரொம்ப வலிக்குது ராவுல தனியா சமையல் ரூம்புல படுக்கறது பயமா இருக்கு...கெட்ட சொப்பனங்க வருது...'நொய்'னு புளிச்சுப் போன பழையது தர்றாங்க...பசிச்சுகிட்டே இருக்கு எனக்கு இங்க எதுவுமே புடிக்கல...என்னய உடனே வந்து கூட்டிட்டுப் போயிரு...நா முன்னைய மாதிரி இனிமே உன்னையப் படுத்த மாட்டேன் தம்பியப் பாத்துக்கறேன்...சாணி பொறுக்கி எருமூட்ட தட்றேன் சட்டிபானை பண்ண மண் எடுக்க வாரேன், ஆம்பிளைப் பசங்களோட வெள்ளாடப் போக மாட்டேன். அப்பால ஆங்...சோறு போடுனு உன்னய கேக்கவே மாட்டேன்... ரெண்டு வேளையும் கூழு குடுத்தாக் கூட சண்டப் போடாமக் குடிக்கறேன்...அப்பால...''

மனசின் ஆதங்கத்தை வெளிப்படுத்தின பிறகு வேறு எதுவும் மேற்கொண்டு சொல்லத் தெரியாமல் போக ''ஒடனே வந்துரும்மா...ஒனக்காக நா காத்துக்கிட்டே இருப்பேன்'' என்று கூறியவள்; 'அல்லோதான்' என்று முடித்தாள்.

அவள் கூறிய விவரங்களை முழுமையாக எழுதி விட்டு மாணிக்கம் நிமிர்ந்த போது அவன் கண்கள் லேசாகக் கலங்கி இருந்தன.

''கவர் கொணாந்திருக்கியா?''

''அ?''

''கவர்...இந்த கடுதாசிய வச்சு அனுப்ப...''

''இல்லீங்கண்ணே...''

''சரி, பணத்த கொடுத்திட்டு போ, நா கவர் வாங்கி அனுப்பிடறேன்...''

''காசா? என்னண்ட இல்லியேண்ணே...''

மாணிக்கம் கண்கள் இடுங்க அவளை அழுந்தப் பார்த்தான்.

''போனாப் போவுது...நா வாங்கி அனுப்பிடறேன். விலாசம் சொல்லு...''

''அ?''-மறுபடி கண்ணம்மா திருதிருத்தாள்.

''அட — விவரம் கெட்ட குட்டீ...ஊரு பேரு சொன்னாதானே நா எழுதி அனுப்ப முடியும்?''

''ஓ—அதுவா? அம்மா பேரு செந்தாமரை...ஊரு பள்ளிப்பாளையம்...''

''தெருவுக்கு பேர் கிடையாதா?''

''.....''

''எந்த மாவட்டம்''

இதற்கும் பதில் கூறத்தெரியாது கண்ணம்மா நிற்க, மாணிக்கத்துக்கு அவளைப் பார்க்க பாவமாக இருந்தது.

''விலாசம் தெளிவா இல்லாட்டீ, கடுதாசி எப்படி போய் சேரும்? ஞாபகப்படுத்தி சொல்லு...''

''பள்ளிப்பாளையம்தான் எங்க கிராமம்...அத்த மட்டும் எழுதினா எங்கம்மாவுக்கு கடுதாசி போய் சேரா தாண்ணே?''

இத்தனை பாடுபட்டு எழுதும் கடிதம் அம்மா கையில் போய் சேராதோ என்கிற எண்ணமே கண்ணீரை மறுபடியும் கிளப்பியது.

இவளுக்கு என்ன சொல்லி புரிய வைப்பது என்று மாணிக்கம் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே, இஸ்திரிகாரரின் பையன் மூச்சிரைக்க ஓடி வந்தான்.

''ஏ - குட்டீ! நீ இங்கயா இருக்கே. உன்னை காணோம்னிட்டு பாட்டியம்மா வாசல்ல நின்னு காத் திட்டிருக்காங்க...ஓடு...''

கண்ணம்மா பதற்றத்தோடு மாணிக்கத்தின் கை யைப் பிடித்து 'மறக்காம கடுதாசிய அந்தப்பொட்டில போட்டீருங்கண்ணே...என்று குரலைத் தழைத்துக் கொண்டு கெஞ்சி விட்டு, தெருவில் ஓடி நாலே எட்டில் கண்களை விட்டு மறைந்துபோனாள்.

மாணிக்கம் ஒரு பெருமூச்சுடன் கடிதம் எழுதிய பக்கத்தைக் கிழித்து, அது பறக்காமல் இருக்க வேண்டி கண்ணாடி பாட்டில் ஒன்றை தூக்கி அதன்மேல் வைத்தான்.

மனசு கனத்தது.

எத்தனை சின்னக் குழந்தை! அதற்குதான் எத்தனை ஏக்கங்கள்!

செந்தாமரை - பள்ளிப்பாளையம் - என்று மட்டும் எழுதி போஸ்ட் செய்தால் கடிதம் அம்மாவுக்கு போய்ச் சேராது என்கிற விவரம் கூட இதற்குத் தெரிய வில்லையே!

என்ன செய்யலாம்?

ரங்கநாதன் ஸார் ஆபீஸ் விட்டு வந்த பிறகு அவர் வீட்டுக்குப் போய் 'கண்ணம்மாவின் கிராமத்து விலாசம் என்ன?' என்று கேட்கலாமா? 'உனக்கு எதற்கு அது?' என்று கேட்டு இவன் உண்மையைச் சொன்னால், எவனோ கடைக்காரனிடம் சொல்லிக் கடிதம் எழுதும் அளவுக்கு துணிந்து விட்டியா?' என்று கண்ணம்மாவை அடிப்பார்களோ?

ஏற்கனவே—குட்டுகிறார்கள், ஏசுகிறார்கள், சோறு போடாமல் வேளை வாங்குகிறார்கள் என்று அந்த குட்டியே கடிதத்தில் சொல்லி இருக்கிறாளே, என் பங்குக்கு நான் வேறு அவள் கஷ்டத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டுமா? தவிர, 'எங்கே, இந்தக் கடிதத்தைக் காட்டு...' என்று கேட்டு விட்டால் வேறு வினையே வேண்டாம். தாங்கள் அவளைக் கேவலமாய் நடத்து வது மூன்றாம் நபருக்குத் தெரிந்து விட்டது என்பதை உணர்ந்தால் அந்த பெரியம்மாவுக்கு ஆத்திரம் அதிகமா காதா?

என்ன செய்யலாம்?

தொடர்ந்து யோசிக்க விடாமல் இளைஞர் பட்டா ளம் ஒன்று கடையில் நுழைந்து 'நாலு தம்ஸ் அப்' என்று ஆர்டர் கொடுக்க. வேலையைக் கவனிக்க மாணிக்கம் எழுந்தான்.

''டூ கொணாந்திருக்கேன் அண்ணே'' என்று வேலு நீட்டியதைக் கூட வாங்கி, குடிக்க அவகாசம் இல்லாமல் வாடிக்கையாளர்கள் நிற்க ''அப்படி வச்சுட்டுப் போ'' என்றான்.

வேலுவும் பிஸ்கட் அடுக்கிலிருந்த கண்ணாடி ஜாடி களை ஒட்டி டூடம்ளரை வைத்துவிட்டு நகர்ந்தான்.

கொஞ்சம் போவதற்கு ''இது என்ன பிஸ்கட்?'' என்று கேட்டுக் கொண்டே ஜாடியை ஒரு பெண்மணி தகர்த்த. அது இடித்த வேகத்தில் டம்ளர் சாய கண் மூடித்திறப்பதற்குள் டீ முழுவதும் மேஜை மேல் பரவிப் போனது.

''அடடே, மன்னிச்சுடுங்க'' என்று வருத்தம் தெரிவித்த பெண்மணியிடம் ''பரவாயில்லீங்க...பின்னால டம்ளர் இருந்தத நீங்க எப்படி பாத்திருக்க முடியும்?'' என்று சொல்லி அவர் கேட்ட பிஸ்கட்டில் கால் கிலோ நிறுத்து பொட்டலம் கட்டி அனுப்பிய பின்னரே பாட்டியின் அடியில் செருகியிருந்த கடிதம் பூராவும் டீ கொட்டி நனைந்து விட்டதை மாணிக்கம் கவனித்தான்.

அவசரமாய பேப்பரை எடுத்துப் பார்த்தான் ஒரு வார்த்தை கூட புரியாத வகையில் சுத்தமாய்க் காகிதம் நாசமாகி இருந்தது.

நனைந்து, உருத்தெரியாமல் போயிருந்த கடிதத்தைக் கையில் வைத்தவாறு சில நொடிசளுக்கு இப்போது என்ன செய்வது என்று யோசித்தான். விலாசம் இல்லாத கடிதம்—போஸ்ட் செய்திருந்தாலும் போய் சேர்ந்திருக்கப் போவதில்லை. அதனால் டீ கொட்டி வீணாகி விட்டது என்று ஏன் வருத்தப்பட வேண்டும் என்று சமாதானம் சொல்லிக் கொண்டு, அதைக் கசக்கி மூலையில் எறிந்தான். அதோடு அக்கடிதத்தை மறந்து விட்டு வேலைகளைக் கவனித்தான்

பிற்பகலில் ஒருதரம் கசங்கிய காகித உருண்டை மேல் பார்வை விழுந்த போது 'அந்தக் குட்டியை மறுபடி பார்க்க நேர்ந்தால், விஷயத்தைச் சொல்லலாமா? என்று நினைத்தான். ஆனால், உடனே 'ஊர் விட்டு வருபவர்கள் எல்லாருக்குமே இப்படிப்பட்ட ஏக்கம் வருவது இயற்கை, கொஞ்சம் நாள்கள் போனால் எல்லாம் சரியாகி விடுவதை நானே நிறைய பார்த்திருக்கிறேனே!' என்கிற சப்பைக் கட்டு எழ, துப்புரவாய் அத்துடன் அந்த விஷயத்தை மனசை விட்டு ஒதுக்கினான்.

8

வீடுக்கு ஓடி வந்த நிமிஷத்தில் கண்ணம்மாவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

நெஞ்சை அழுத்தி, மூச்சு முட்ட வைத்த பாரத்தை ஒட்டுக்க இறக்கி வைத்துவிட்டமாதிரி தோன்றியது.

கடிதத்தை மாணிக்கம் அண்ணன் இன்றே பெட்டியில் போட்டு விடுவார். வெளியூருக்கு இரண்டு நாள்களில் கடிதம் போய் சேர்ந்து விடும் என்றார் அப்படி என்றால் இன்று புதன் கிழமை. நாளை போக மறுநாள் அம்மாவுக்கு கடிதம் கிடைத்து விடும். படித்துவிட்டு 'ஐயோ, என் கண்ணம்மா இத்தனை வேதனை அனுபவிக்கிறாளா? என்று துடித்துப்போவாள். போட்டது போட்டபடி உடனே கிளம்பி விடுவாள். எப்படியும் சனிக்கிழமை அம்மா வந்து விடுவாள். ஒருவேளை ஏதோ, காரணத்தால் பஸ் பிடிக்க தாமதம் ஆனாலும் ஞாயிறு அன்று கட்டாயம் வந்து விடுவாள்.

வரிசைக்கு ரயில் பெட்டித் தொடர் மாதிரி கற்பனை விரிந்ததில், கட்டிடத்தின் வாசலிலேயே பெரியம்மாநின்று நாலு பேர் கேட்க 'பொறுப்பு இல்லாத முண்டம்-பத்து நிமிஷம் விட்டுட்டு போறத்துக்குள்ள எங்கூ போயிட்ட? ஓடுகாலி' என்று திட்டியது உரைக்கவில்லை. அழுந்த குட்டியது வலிக்கவில்லை.

நாள் பூராவும் கடுஞ்சொற்களை வீசியது பாதிக்க வில்லை. மாலையில் ரங்கநாதன் திரும்பியதும் அவரிடம்

விஷயத்தைச் சொல்ல, அவரும் 'என்ன அதிகப் பிரசங்கித் தனம் இது' என்று கடிந்து கொண்டது வருத்தத்தைத் தரவில்லை.

தன்பாட்டுக்கு எதையும் லட்சியம் பண்ணாமல் வேலைகளைக் கவனித்தாள். இன்னும் மூன்று அல்லது நான்கு நாள்கள் தான். பிறகு இந்தச் சிறையிலிருந்து விடுதலை கிடைத்து விடும்-என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டாள்.

அன்றிரவு சமையல் கட்டிலில் தன்னந்தனியாய் உறங்கியபோது தினமும் உண்டாகும் பயம் வழக்கத்தை விட குறைவாகவே இருந்தது.

பாயை விரித்துப் படுத்தவள் கண்களை இறுக் மூடிக் கொண்டாள்.

அம்மா வருகிறாள். இடுப்பில் தம்பி. இவளை வாரி அணைத்து, முத்தம் கொடுக்கிறாள். 'என் ராசாத்தி-உன்னைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியலைடீ... ரொம்பவும் தான் தவிச்சுப் போயிட்டேண்டி கண்ணு' என்று புலம்புகிறாள்.

காட்சி மாறுகிறது.

பள்ளிப்பாளையத்தில் இவள் போய் இறங்கியதும் எல்லாரும் சூழ்ந்து கொள்கிறார்கள். ''நீ இல்லாம ஊரே வெறிச்சிட்டுப் போச்சு கண்ணம்மா'' என்கிறார்கள். தலைக்குத் தலை.

காட்சி மாறுகிறது.

கண்ணம்மா சாணி எடுத்து வந்து எருமூட்டை தட்டு கிறாள். கூடை நிறைய மண் சுமந்து வருகிறாள்.

'கில்லி ஆடலாமா?' என்று கேட்கும் தரையிடம் 'நா வரல...வேலை இருக்கு' என்கிறாள் பொறுப்புடன்... அவள் வேலை செய்யும் பாங்கைப் பார்த்துவிட்டு ஆயா ''உம் மக சமத்து யாருக்கும் வராதுடீ செந்தாமர' என்று பாராட்டுகிறார். அம்மா பெருமையுடன் இவளைத் தழுவிக் கொள்கிறார்.

காட்சி மாறுகிறது.

தம்பியைத் தூளியில் போட்டு கண்ணம்மா தூங்கப் பண்ணுகிறாள் அம்மா கூழ் கலசத்தோடு உட்காந்துக் கொண்டு 'சாப்பிடவாடீ' என்று அழைக்கிறார். மிளகாய்த் துவையலை நாக்கில் தடவி உப்புப் போட்டுக் கரைத்த கூழைக் குடிப்பவள் 'ரொம்ப நல்லா இருக்கு-மா என்று கூற, அம்மா அவளை மார்போடு அணைத்து, 'எங்கண்ணு...என் செல்லம்...என் ராசாத்தி...' என்று சீராட்டுகிறார். அம்மாவின் அணைப்பு கதகதவென்று சுகமாக இருக்கிறது.

கற்பனையே கனவாக விரிய, அது தந்த கிளர்ச்சியில் நீண்ட நாள்களுக்குப் பிறகு அன்று கண்ணம்மா நிம்மதி யாய் உறங்க ஆரம்பித்தாள்...

❊ ❊ ❊

என் குறிப்பு

'குட்டி' கதையை எழுதுவதற்கு என்னைத் தூண்டிய காரணங்கள் மூன்று முதலாவது—இந்த ஆண்டிலிருந்து அடுத்து வரும் பத்து வருஷங்கள் 'பெண் குழந்தையின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட வேண்டிய ஆண்டுகள்' (Decade of Girl Child) என்கிற 'ஸார்க்' நாடுகளின்

(இதில் இந்தியாவும் அடக்கம்) அறிமுப்பு. இரண்டாவது ஆண்டன் செகாவ் என்ற பிரபல ரஷ்ய எழுத்தாளர் எழுதியுள்ள 'வாங்கா' என்ற சிறுகதை அடுத்து—மூன்றில் ரொம்ப முக்கியமானது—ஒரு வீட்டில் வேலைக்காரப் பெண்ணை (பத்து வயசுக் குழந்தை) மனிதாபிமானம் அற்று அந்த குடும்பத்தார் நடத்தியதில் வேலைக்கு வந்த சின்னப் பெண்—போக்கிடம் எதுவும் இல்லாத அவலத்தில் வீட்டை விட்டு ஓடி விட்டாள் என்று நான் கேள்விப்பட்ட சம்பவம்...

'குட்டி' கற்பனைக் கதை அல்ல...இங்கும் அங்குமாக பலரது இல்லங்களில் தினமும் நடப்பதைத் தான் கதையாக எழுத முயன்றிருக்கிறேன். 'குட்டி'யை படிக்கும் லட்சக் கணக்கான வாசகர்களில் ஒரு சிலருக்கேனும் இந்த மாதிரி குழந்தைகள் எத்தகைய சூழ்நிலையில் ஒருவர் வீட்டில் பணிபுரிய வருகின்றார்கள், அவர்களும் இளம் தளிர்கள் தாம், நம் வீட்டுக் குழந்தைகளைப் போல அவர்களுக்கும் நியாயமான ஆசாபாசங்கள் உண்டு, அவர்களை மனித நேயத்தோடு நடத்துவது நம் கடமை—என்பது போன்ற விஷயங்கள் நினைவில் தங்கி, இது குறித்து ஆக்கப்பூர்வமாக எதாவது செய்யும் விதத்தில் சிந்திக்க அவர்கள் முற்பட்டால் இந்தப் புதினத்தை எழுதியதற்கு முழு பலனும் கிடைத்தது என்று மனப்பூர்வமாக நான் சந்தோஷிப்பேன்.

—சிவசங்கரி